ﺑﺴﻢ اﷲ اﻟﺮﺣﻤﻦ اﻟﺮﺣﻴﻢ

# வைகறை வெளிச்சம்

அக்டோபர்-2025 | ரபியுலவ்வல்-ரபியுல்ஆகிர் 1447

வரலாற்றுத் தடத்தில்
இஸ்லாமியப் பார்வையில்
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்
படியுங்கள் பரப்புங்கள்
பாதுகாத்து வையுங்கள்


- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps
G Pay UPI BHIM Paytm


மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





| | |
|---|---|
| கத்தார் தாக்குதல் ஏன்? போர்க்குற்றவாளி நெதன்யாஹு விளக்கம் | - 7 |
| ஜமாஅத்தே அகில இந்திய துணைத் தலைவரின் சவால்களும் சாதனைகளும்.. | - 9 |
| சிறுகதை | - 13 |
| பூமிக்குள் வெற்றிடம் | - 14 |
| பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்காக உழைக்கின்றார்கள் | - 16 |
| சிலுவைப் போர் 2.0 | - 18 |
| யுவானி ரிட்லி | - 29 |
| டெல்லி கலவரம் (தொடர்) | - 31 |
| பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் | - 36 |
| இந்தியாவில் முஸ்லிம்கள் | - 40 |
| தமிழகத் துறைமுகங்களில் கப்பலோட்டிய கீழக்கரை முஸ்லிம்கள் | - 44 |
| UAPA வழக்குகளில் ஜாமீனும், குழப்பங்களும் | - 50 |
| குழந்தை வளர்ப்பு | - 56 |
| மேட்டுப்பாளையத்தில் நூல் வெளியீட்டு நிகழ்வு! | - 58 |
| தலையங்கம் | - 61 |


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

**இன்றைய** ஐக்கிய நாடுகள் சபை கத்தார். இது மிகையான ஒன்றல்ல. காரணம், ஐக்கிய நாடுகள் சபை சாதிக்க பல போர்களை கத்தார் நிறுத்தி இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக இந்த நூற்றாண்டில் நடந்த மிக நீண்ட போர் - ஆப்கானிஸ்தானில், அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்புப் போரும்தான்.

இந்தப் போர் 21 ஆண்டுகள் நடந்தன. ஆப்கானிஸ்தானை அமெரிக்கா மட்டும் ஆக்கிரமிக்கவில்லை. துணைக்கு ‘Nato’ என்ற ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பும் துணைக்கு அழைத்துக் கொண்டது. மொத்தத்தில் 51 நாடுகள், இந்தப் போரில். அதாவது, ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்தியப் போரில் ஆக்கப்பூர்வமாகக் கருத்துகொண்டன.

பணத்திற்குப் பஞ்சமில்லை, அரபு நாடுகள் பல்வேறு தலைப்புகளின் கீழும் அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தன. ஆக 21 மாதங்கள் ஆப்கானிஸ்தானில் 1,29,500 அப்பாவிகளைக் கொலை செய்தது அமெரிக்காவும் அதற்குக் கைத்தடியாகச் செயல்பட்ட 51 ஐரோப்பிய நாடுகளும்.

முடியவில்லை. ஆப்கானில், இஸ்லாத்தை முன்வைத்து போராடிய தாலிபான்கள் என்று விளம்பரப்படுத்தப்பட்ட முஜாஹித்கள் வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்ததால் 81,500 அமெரிக்க படையினர் பைத்தியம் பிடித்து மறுவாழ்வு இல்லங்களுக்கு அனுப்பப் பட்டார்கள்.

46,000 பேர் தற்கொலை செய்து கொண் டார்கள். பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள்.

முடிவில், தாலிபான்களிடம் பேசி இல்லை, மன்றாடி எஞ்சியப் படைகளை ஆப்கானிஸ்தானிலிருந்து உயிரோடு அமெரிக்காவிடம் தந்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ள வேண்டும் என முடிவெடுத்தார்கள்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள், 3 லட்சமிருந்தனர். 19,000 பேர் தாலிபான்களால் சிறைபிடிக்கப் பட்டிருந்தார்கள்.

இப்போது அமெரிக்காவுக்கு மிகப்பெரியதொரு பிரச்சனை, அது, தாலிபான்களின் தலைவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். காரணம் தாலிபான்கள் மறைந்திருந்து தாக்குதல்



# இஸ்ரேலின் கத்தார் மீதான தாக்குதல்



என்ற கொரில்லா தாக்குதலையே நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விளம்பரக் களத்திற்கு வருவதில்லை. அதேபோல் அவர்கள் செல் போன்ற நவீன தகவல் தொடர்பு பொருள்களையும் வைத்துக்கொள்வதில்லை. அதற்கானப் பணம் அவர்களிடமில்லை. அவர் மறைந்து, மறைந்து சண்டையிடும் ஊர்களில், மக்கள் தரும் உணவையே உண்டு வாழ்பவர்கள். அவர்கள் தரும் பணமே அவர்களின் நிதியாதாரம்.

இந்நிலையில் அமெரிக்காவின் மிகப்பெரிய தலைவலி தாலிபான்களின் உண்மையான பிரதி நிதிகளைக் கண்டுபிடிப்பது.

அமெரிக்கா தனது இராணுவத்தை இழந்தது மட்டுமல்லாமல், அது அந்நிலையில் 21 ஆண்டுகளில் 2 டிரில்லியன் அளவுக்குப் ஆயுதங்களும் பறிபோயிருந்தன.

ஆக, தாலிபான்களைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு சன்மானங்களை அறிவித்தது.

பலர் அமெரிக்காவிடம் டாலர்களை ஆயிரக் கணக்கில் வாங்கிவிட்டு ஏமாற்றிவிட்டார்கள்.

இன்னும் சிலர் அமெரிக்காவிடம் டாலர்களை வாங்கிவிட்டு தங்கள் சொந்த உள்ளூர் எதிரிகளை இவர்தான் தாலிபான் எனக் காட்டிவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

உண்மை என்னவென்றால், எந்த ஆப்கானிஸ் தானைச் சார்ந்த மக்களும், உண்மையான தாலிபான்களைக் காட்டிக் கொடுக்கத் தயாராக இல்லை. வேறு வழியோ - வகையோ இல்லாமல் கத்தாரின் காலில் வீழ்ந்தது அமெரிக்கா.

தாலிபான்களுக்கும், கத்தாருக்கும் நேரடி தொடர்புகள் இல்லை என்றாலும் மறைமுகமான தொடர்புகள் இருந்தன.

ஆகவே, கத்தார் தாலிபான்களின் உண்மை யான பிரதிநிதிகளை அமெரிக்காவுக்கு அறிமுகப் படுத்தி அமெரிக்கா, சரணடைய தேவையான ஏற்பாடு செய்து தந்தது.

அதன்பிறகு எங்கே வைத்துப் பேசுவது என்பதற்கு இடம் தேடியது அமெரிக்க வல்லரசு.

அமெரிக்கா சொல்லும் இடங்களுக்கு வந்திட தாலிபான்கள் மறுத்துவிட்டார்கள். ஏனெனில் அமெரிக்கா நம்பவைத்துக் கழுத்தை அறுக்கும் நாடு என்பதைத் தாலிபான்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். ஆகவே கத்தாரின் தலைநகரில் வைத்துப் பேசலாம். நாங்கள் கத்தார் நாட்டை மட்டுமே நம்புவோம் என்றார்கள். ஆனால் எங்களுக்கு கத்தார் நாட்டில் எங்கேனும் அலுவலகமில்லை என்றார்கள்.

அமெரிக்கா, நாங்கள் பணம் தருகின்றோம். ஓர் அலுவலகத்தை கத்தாரில் அமைத்துக் கொள்ளுங்கள் என்றது.

கத்தார் அலுவலகம் தருகின்றோம் என்றது. அமெரிக்கா, தாலிபான்கள் சொன்னதை யெல்லாம் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டது. தன்னுடைய எஞ்சிய இராணுவத்ினரை மீட்டுக்கொண்டது.

அமெரிக்கா ஓட்டிய ஓட்டத்தை, துண்டைக் காணோம், துணியைக் காணோம் என ஓடியது.

ஏனெனில் 10 பில்லியன் டாலர்கள் அளவுக்கு ஆயுதங்களை விட்டுச் சென்றது.




ஐக்கிய நாடுகள் சபையால் அமெரிக்காவையும் அதன் இராணுவத்தையும், காப்பாற்றிட இயலவில்லை. 21 ஆண்டுகளாக அமெரிக்காவும், அதன் கூட்டுப்படைகளும் கொன்று குவித்த அப்பாவி மக்களைக் காப்பாற்றிட இயலவில்லை. காரணம், மொத்த ஆப்கானிஸ்தான் மக்களையும், தீவிரவாதிகள் எனப் பிரச்சாரம் செய்துகொண்டே இருந்தன. ஊடகங்கள் - முஸ்லிம்களே தாலிபான்கள் என்ற பெயரை உச்சரித்திட அச்சப்பட்டார்கள்.

இப்படி 21 ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் சபையில் தீர்த்து வைத்திட இயலாத ஒரு பெரும் உலக மகா போரை முடித்து வைத்தது கத்தார்.

டேவிட் செல்போன் போன்றவர்கள், ஆப்கானிஸ்தானுக்கும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளுக்குமிடையே நடந்த போரை மூன்றாவது உலகப் போர் என்றே அழைத்தார்.

அதேபோல் அந்தப் போரில் The power faith வென்றது என்றார். அதாவது ஈமானிகளின் பலம் வென்றது என்றார்.

இப்படி அமெரிக்காவுக்கு மிகப்பெரிய உதவியை கத்தார் செய்தது. இதனால் அந்த நாட்டை உண்மையான சமாதான சபை என்றோம்.

இதனால் அமெரிக்காவும் அதன் கூட்டுப் படைகளும் ஆப்கானிஸ்தானில் செய்த படுகொலைகள், உலக மக்களை சென்றடைந்திடவில்லை.

தீவிரவாதம் என்ற பேச்சில் மூடிவிட்டார்கள் அனைத்தையும்.

அன்றோடு சரணடைந்த விவகாரம் முடிந்து விடவில்லை. 2025யிலும் தொடருகின்றது பார்க்க தனிக்கட்டுரை.


கத்தார் பேச்சுவார்த்தையின் போது, ஒரு தாக்குதலை இஸ்ரேல் நடத்தும் என எதிர்பார்க்கவில்லை.

ஆனால் நம்பியவர்களையும், தங்களை ஐரோப்பா விரட்டியடித்த போது, வாழ வைத்தவர்களையும் முதுகில் குத்துவது யூதர்களின் பாரம்பரிய வழக்கம்.

இதனால் வரலாறு முழுவதும், இவர்கள் அழிக்கப்பட்டு வந்தார்கள்.

ஹிட்லரையும், அவர் ஏன் யூதர்களை படுகொலை செய்தார் என்பதையும், இப்போது உலக மக்கள் அனைவரும் புரிந்துகொள்கின்றார்கள்.

- MGM





vaigarai velicham official

# கத்தார் தாக்குதல் ஏன்? போர்க்குற்றவாளி நெதன்யாஹு விளக்கம்



**முதலில் -** இஸ்ரேல் தன்னுடைய தோல்வியை ஒத்துக்கொள்கின்றது. இஸ்ரேல் அந்நிய நாடுகளில், அண்டை நாடுகளில் வாழும் முஜாஹித்களை 114 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொலை செய்து வருகின்றது.

இஸ்மாயில் ஹானாவை எடுத்துக்கொண்டால், அவரை நெதன்யாஹு வைத்துத்தான் கொலை செய்தது.

எத்தனையோ பாலஸ்தீன போராளிகளையும், அறிஞர்களையும், அமெரிக்காவில் வைத்துக் கொலை செய்திருக்கின்றது. எடுத்துக்காட்டாக இஸ்மாயீல் ஃபருக்கி என்ற மார்க்க மேதையைக் குறிப்பிடலாம்.

எந்த தீவிரவாதிக்கு இடம் கொடுத்தார்கள் என்று சிரியாவின் மீதும் தாக்குதலை தொடர்ந்து வருகின்றது.

16-18 செப்டம்பரில், 1982இல் ஒவ்வொரு ஸாப்ரா, ஷத்தியா அகதிகள் முகாமில் இரவு பகலாக செய்தாயே அதற்கு என்ற முகாந்திரம்.

லெபனானில் போர் நிறுத்தம் வந்தபின் - ஏன் தொடர்ந்து, தாக்குதலை நடத்தி அப்பாவி மக்களைக் கொலை செய்து வருகின்றது. இதுவரை 5300 முறை போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இருக்கின்றது ஏன்?.

UNIFILஐ ஏன் இன்றும் தாக்கிக் கொண்டிருக்கின்றது.

ஈரானை ஏன் எந்த முகாந்திரமுமில்லாமல் தாக்கியது.

ஆக, "War " பிணம் தின்னும் கழுகு நெதன்யாஹு என்பதுதானே உண்மை.

அனைத்திற்கும் மேலாக 18-9-2025 அன்று இஸ்ரேலின் வீதிகளில் போராடிய மக்கள் - நீரோவைத் தாக்கி எங்களை கொலை செய்து விட்டாய்.

அழைத்துச் செல்லப்பட்டவர்கள் விடுவிக்க கத்தார் வழி பேச்சுவார்த்தை என்ற ஒரே வழிதானிருந்தது. அதையும் அடைத்துவிட்டாய் - என்று ஒப்பாரியும் ஓலமுமிட்டார்களே அதற்கென்ன சொல்லுவாய்.

அத்தோடு நிற்காமல் 11-9-2025 அன்று அவர்கள் இஸ்ரேலின் தொலைக்காட்சி ஊடகம் சாலை 14 அடித்து உடைத்தார்கள். காரணம் கேட்டபோது, தோஹா தோல்வியை, தாக்குதலை கொண்டாடினார்கள். சிலாகித்து செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள், என்றார்களே! அதற்கு மூஞ்சி செத்துப்போன நீ என்ன சொல்வாய்.

9/11இல் அமெரிக்கா செய்ததைத்தான் நான்




தோஹாவில் செய்தேன், என ஓர் அமெரிக்க தோல்வியை, தனது வாதத்திற்கு வலுசேர்க்க வம்பிழுக்கின்றார்.

9/11 முடிவு என்ன ஆயிற்று. முட்டாளே - ஒசாமா பின்லேடனை மூன்றுமுறை கொலை செய்ததாகப் பொய்களை மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்தது அமெரிக்கா.

கடைசியில் பாகிஸ்தான் அவரைக் கொன்றதாகப் புருடா விட்டது. அங்கேயும் பின்லேடன் கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்ட காட்சியை எல்லோரும் - ஒசாமா பின்லேடன் உட்பட பார்ப்பதாகப் படம் காட்டினார்கள். ஆனால் கொலை செய்யப் பட்டதையே ஒசாமா பின்லேடன் அவர்களின் உடலையோ உலகுக்கு காட்டிடவில்லை.

நீங்கள் அள்ளிக்கொட்டும் சில்லறைகளுக்கு ஆசைப்பட்ட பாகிஸ்தானும் ஆமாம்சாமி போட்டது. இந்த உண்மை இந்த உலகுக்குத் தெரியாததல்ல.

21 ஆண்டுகளுக்குப் பின்தான் 9/11 முடிந்தது. ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா தப்பித்தேன், பிழைத்தேன் என ஓடியது. 10 பில்லியன் டாலர் அளவுக்கு ஆயுதங்களையும் போட்டுவிட்டு ஓடியது. ஆகஸ்ட் 15/2021இல் ஆப்கானிஸ்தான் முழுமையாக முஜாஹித்களின் ஆட்சியின் கீழ்வந்தது.

அத்தோடு அமெரிக்கப் படையினர் ஆப்கானிஸ்தான் போரில் கலந்துகொண்டது தவறு என்றும் நாங்கள் எங்கள் அரசால் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்றும் கூறினார்கள்.

தங்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளை குப்பைத் தொட்டிகளில் வீசினார்கள். இதை உலகம் பார்த்தது.

இப்படி 9/11ஐ போன்றதொரு தோல்வி இஸ்ரேலுக்கும் காத்திருக்கின்றது.

(இன்ஷாஅல்லாஹ்)

**நெதன்யாஹூ"வின் புதிய கண்டுபிடிப்பு**

**கத்தாரை தாக்கியதற்குக் காரணம் அது ஹமாஸ"க்கு எல்லா உதவிகளையும் செய்கின்றதாம்**

இப்போது ஒன்றும் புதியதாகச் செய்துவிட வில்லை கத்தார். ஒரு Medi . அதாவது எல்லாத் தரப்பினரும், போர் நிறுத்தப் பேச்சு வார்த்தைக் குத் தேவை என்பதால் ஹமாஸ் பேச்சுவார்த்தை குழுவுக்கு இடம் கொடுத்திருக்கின்றது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையி லான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை 2000ஆம் ஆண்டு முதலே நடந்து வருகின்றது.

2000ஆம் ஆண்டிலிருந்து இன்று 12 முதல் 15 முறை ஹமாசுக்கும் - இஸ்ரேலுக்குமிடையே போர் நடந்துகொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு முறையும், இஸ்ரேல் சிக்கிக் கொள்ளும் போதெல்லாம், விரைந்து சென்று கத்தாரின் காலைப் பிடித்துதான் சமாதான ஒப்பந்தங்களைச் செய்திருக்கின்றது. அப்போ தெல்லாம் கத்தார்தான் உதவி செய்தது. அப்போதும் ஹமாஸ்-இன் தூதுக்குழுவுக்கு கத்தார் இடம் தந்தது. அதனால் இஸ்ரேல் பேரழிவுகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டது.

சில நேரங்களில் போராளிகள் கேட்ட இழப்பீட்டுத் தொகையைத் தந்து இஸ்ரேல் போர் நிறுத்தத்தை பெற்றுக் கொண்டது. இந்தப் பணத்தை கத்தார் வழியாகத்தான் தந்தது இஸ்ரேல். அப்போதெல்லாம் கத்தார் ரஷ்டகனாகப்பட்டது. இப்போது அது தீவிரவாதி களுக்கு அடைக்கலம் தந்த நாடாகிப் போனதா?

ஆக நெதன்யாஹூ என்ற போர்க்குற்றவாளி தான் செய்து கொண்டிருக்கும் கூட்டுப்படு கொலைகளையும், தனது தோல்வியையும், விரக்தியையும் மறைக்கவே கத்தார் மீது தாக்குதலை நடத்தி இருக்கின்றது.

அதனுடைய சப்பைக் கட்டுகள் உலக அரங்கில் எடுபடவில்லை. குறிப்பாக இஸ்ரேல் மக்களிடமே எடுபடவில்லை.

கத்தார் தாக்குதல் படதோல்வியடைந்ததால் இன்னும் அதிகமாக விரக்தி அடைந்துள்ளார் நெதன்யாஹூ.

- MGM


vaigarai velicham official



# ஜமாஅத்தே அகில இந்திய துணைத் தலைவரின் சவால்களும் சாதனைகளும்..

**செப்டம்பர்-1,** *2025* திங்கள் மாலை 7 மணி, தமிழக இஸ்லாமிய இயக்கத்தின் தலைமையக மான ஜமாஅத்தே இஸ்லாமியின் பெரம்பூர் ICC அரங்கத்தில் அனைத்து அமைப்புகள், இயக்கங்களின் கூட்டம் நடந்தது.

டெல்லியிலிருந்து ஜமாஅத்தே இஸ்லாமியின் அகில இந்திய துணை தலைவர் பேராசிரியர் இன்ஜினியர் முஹம்மத் சலீம் அவர்கள் வருகை தந்திருந்தார்கள்.

சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களும், சாத்தியங்களும் - என்ற தலைப்பில் கலந்துரை யாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலில் ஜமாஅத்தே இஸ்லாமியின் மாநில பொதுச் செயலாளர் எஸ்.என.சிக்கந்தர், ஜமாஅத்தே இஸ்லாமியின் மாநில தலைவர் ஹனீபா மன்பயீ, ஜமாஅத்தே இஸ்லாமிய தமிழ்நாடு செயலாளர் அஜீஸ் லுத்துபுல்லாஹ், மனிதநேயக் கட்சியின் பொதுச் செயலாளர் அப்துல் சமது, சட்ட மன்ற உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை எம்.ஜி.கே. நிஜாம், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்-இன் தலைவர், மூத்த பத்திரிகையாளர் மு.குலாம் முஹம்மத், (ஆசிரியர், வைகறை வெளிச்சம்), இந்திய தவ்ஹீத் ஜமாஅத்-இன் மாநில பொதுச் செயலாளர் முஹம்மத் ஹாஃலி, மாநில செயலாளர் அபு ஃபஸைல், இஸ்லாமிய விழிப்புணர்வு கழகத்தின் பொதுச் செயலாளர் மௌலவி முஜீபுற்றிற்மான் பாகவி, எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில துணை தலைவர் அ.ச.உமர் ஃபாரூக், மமக. கட்சியின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டார்கள்.

வெல்பெஃயர் பார்ட்டியின் சார்பிலும், சிக்கந்தர் கலந்துகொண்டார்கள்.

முதலில் கலந்துகொண்டிருந்த சமுதாய தலைவர்கள், தங்கள் கருத்துகளை தெரிவித்தார்கள்.

பெரும்பாலும் அரசியல் தொடர்பான கோரிக்கைகள், பிரச்சனைகள் இவற்றை சுற்றியே கருத்துகள் குவிந்தன.

பிரச்சனைகள், இஸ்லாமிய தீர்வுகளைத் தருவதில்தான் ஜமாஅத்தே இஸ்லாத்தின் சிறப்பும் பெருமையும் இருக்கின்றது. ஆகவே இஸ்லாத்தின் அடிப்படையிலான தீர்வுகளை தர வேண்டும் என்பது தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பிலும், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் சார்பிலும் மு. குலாம் முஹம்மத் கேட்டுக் கொண்டார்கள். (மிகச் சுவாரஸ்யமான - அறிவுப்பூர்வமான, அனுபவப் பூர்வமான கருத்துகள் விவாதத்தில் இடம் பெற்றன)

அனைத்து தலைவர்களின் கருத்துகளையும், பொறுமையாக செவிமடுத்த ஜமாஅத்தே இஸ்லாமியின் அகில இந்திய துணை தலைவர், இன்ஜினியர், பேராசிரியர் முஹம்மத் ஸலீம் அவர்கள் நிறைவுரை ஆற்றினார்கள்.

விருந்துடன் கூட்டம் நிறைவுற்றது.
எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே.

நமது நிருபர்.




# வசமாக சிக்கிய தேர்தல் ஆணையம்

**தேர்தல்** ஆணையத்தின் திருட்டுத்தனம் இன்னும் தெளிவாக CID மூலம் அம்பலம் ஆகி உள்ளது. சங்கிகள் சட்டத்தின் பிடியில் வசமாக சிக்கியுள்ளனர். தண்டிப்பது இனி நேர்மையான கோர்ட்டு கையில் உள்ளது. பார்க்கலாம்.

நடந்த சம்பவம்

மிகவும் திகில் நிறைந்த சஸ்பென்ஸ் திரில்லர் காட்சிகளுடன் கூடிய திரைப்படம் காண்பது போல உள்ளது சகோ.

துவக்கம் எங்கிருந்து என்றால்

கர்நாடகாவில் 2023 ஆம் ஆண்டு மே மாத சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக

அங்கே ஆலந்த்தா என்று ஒரு சட்டமன்றத் தொகுதியில், 2023 ஆம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம், ஓர் ஊரின் BLOவிடம் அந்த பகுதி வாக்குச்சாவடியில் சில வாக்காளர்களின் பெயரை நீக்கச் சொல்லி ஒருவரிடம் இருந்து ஆன்லைனில் விண்ணப்பம் வருகிறது.

எப்படியாவது அந்த வாக்காளர்கள் எல்லாம் வீடு மாறி போய்விட்டதாக காரணம் கூறி படிவம் 7 பூர்த்தி செய்து ஆன்லைனில் "ஒருவர்" விண்ணப்பிக்கிறார். அந்த "ஒருவர்" யாரெனில் அதே வாக்குச்சாவடியில் உள்ள வேறொரு வாக்காளர். நேர்மையான BLO என்பவர் அந்தந்த முகவரி தேடி சென்று சரிபார்ப்பு செய்து பின்னர் தான் வாக்காளரை நீக்க வேண்டும்.

அதில் ஒரு விண்ணப்பதை பார்த்த அந்த நேர்மையான BLOவுக்கு ஷாக்..!

நீக்க வேண்டிய வாக்காளர் ஃபோட்டோவை கண்டதும் அதிர்ச்சி அடைகிறார். ஏனென்றால் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டிய அந்த விண்ணப்பத்தில் இருந்த வாக்காளர்.. அந்த BLOவின் உடன் பிறந்த சகோதரர்..!

தன் சகோதரர் பற்றி மிக நன்றாக அறிந்த BLOக்கு இன்னும் தன் சகோதரர் அதே முகவரியில்தான் வசித்து வருகிறார், என்பதும் தெளிவாக தெரியும்.

உடனே, இது ஒரு மோசடி என்று புரிந்து கொண்ட BLO, தன் சகோதரருக்கு இதுபற்றி தகவல் சொல்கிறார். அவரும் அதிர்ச்சி அடைகிறார். இவர்கள் இருவரும் அதே வாக்குச் சாவடியில் உள்ள அந்த விண்ணப்பம் அனுப்பிய நபரை கடும் கோபத்துடன் தொடர்பு கொண்ட போது, அவரோ அத்தகைய கோரிக்கையை தான் அனுப்பவே இல்லை, என்று திட்டவட்டமாக மறுத்து சத்தியம் செய்து விட்டார்.

அவருக்கும், அந்த BLO சகோதரர்க்கும் எந்த முன்விரோதமோ அரசியல் பகையோ கிடையாது. ஆகவே அவர் பெயரில் வேறு யாரோ, BLO வின் சகோதரரை நீக்க சொல்லி போலியாக விண்ணப்பம் அனுப்பியதும் மோசடி என்று மோசடிக்குள்ளே மோசடி நடந்து இருப்பது BLOவிற்கு தெரிய வருகிறது. மேலதிகாரிக்கு BLO இதுபற்றி புகார் அளித்து விசாரணை செய்ய கூறிவிட்டார்.


vaigarai velicham official

அந்த BLO சகோதரர் மூலம் விஷயம் கேள்விப்பட்டு காங்கிரஸ் கட்சியும் விழித்துக் கொண்டது. இதுபோன்ற போலியான படிவம் 7 விண்ணப்பங்கள் மூலம் ஆயிரக்கணக்கான வாக்காளர்களை நீக்குவதற்கு பல்வேறு BLO களுக்கு போலி விண்ணப்பம் அனுப்பப்பட்டு சதி நடக்கிறது, என தெரிய வந்ததும். அப்போது எதிர்க்கட்சி ஆக இருந்த காங்கிரஸ் மேலும் உஷார் ஆகிறது.

எந்த அளவுக்கு என்றால் அதே ஆலந்தா தொகுதியில் தோண்டி துருவி பார்த்ததில் அந்த தொகுதியின் 256 வாக்கு சாவடிகளில், 5,994 பெயர்கள் நீக்கப்பட படிவம் 7 விண்ணப்பம் ஆன்லைன் மூலம் செய்யப்பட்டுள்ளன என்றும் 2,494 பெயர்கள் இப்படி முன்பே விண்ணப்பம் பெறப்பட்டு நீக்கப்பட்டு விட்டன என்றும் அதிர்ச்சி மிக்க உண்மை தெரிய வருகிறது.

உடனே, காங்கிரஸ் தேர்தல் ஆணையத்திடம் இதுபற்றி புகார் அளிக்கிறது. வேறு வழியின்றி தேர்தல் நேரத்தில் பிரச்னை வேண்டாம் என்று தேர்தல் அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டி தாகிறது. படிவம் 7 மூலம் பிறரால் பூர்த்தி செய்து ஆன்லைனில் வந்ததன் அடிப்படையில் நீக்கப்படவிருந்த வாக்காளர்களை எல்லாம் காங்கிரஸ் கட்சியின் அந்த ஆதார பூர்வமான புகார் தடுத்து நிறுத்தியது. இதன் மூலம் சுமார் 6000 வாக்காளர்கள் பெயர் நீக்கப்படாமல் தப்பினார்கள்.

மேலும் ஆல்ரெடி பெயர் நீக்கப்பட்டவர்கள் பற்றி காங்கிரஸ் கொடுத்த புகாரால் சுமார் 2500 பேர் நீக்கப்பட்டவர்கள் அனைவரும் மீண்டும் Undo போடப்பட்டு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

இப்படியாக சுமார் 8500 வாக்காளர்கள் பட்டியலில் காக்கப்பட்டு அவர்கள் அந்த 2023 மே மாத சட்டமன்ற தேர்தலில் ஆலந்தா தொகுதியில் வாக்களித்தனர்.

2023 மே மாதம் நடந்த ஆலந்தா சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் 10,348 வாக்குகள் வித்தியாசத்தில் அந்த தொகுதியில் வெற்றி பெற்றார்.

சப்போஸ் (ஒருவேளை)

இந்த மோசடி கவனிக்கப்படாமல் போயிருந் தால், மேலும் ஒரு 2000 வாக்காளர் நீக்க விண்ணப்பம் வந்து காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு போட வேண்டிய நபர்கள் எல்லாம் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு அங்கே காங்கிரஸ் 50 அல்லது 100 ஓட்டுகளில் வேறொரு தொகுதியில் ராகுல்காந்தி அம்பலப்படுத்திய வாக்குத்திருட்டு போல இங்கேயும் காங்கிரஸ் தோற்றிருக்கலாம்..!

நல்லவேளையா அந்த BLO சகோதரர் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர் என்பதால் காங்கிரஸ் களத்தில் இறங்கியது மட்டுமின்றி நீக்கம் செய்யப்பட வந்த விண்ணப்பம் BLO வின் சொந்த சகோதரர் என்பதால்தான் இந்த ஓட்டுத்திருட்டு மோசடி வெளிச்சத்துக்கு வந்து தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது..!

மேற்படி Vote Theft எல்லாம் வாக்காளர் பட்டியல் நீக்கம் பற்றி மட்டுமே. எவ்ளோ போலி வாக்காளர்களை பட்டியலில் சேர்த்து இருப்பார்களோ தெரியவில்லை. அது வேறு கதை. ராகுல்காந்தி அம்பலம் செய்த Vote Chori சம்பவங்கள்.

மேற்படி. போலி படிவம் 7 மூலம் வாக்காளர் நீக்கம் குறித்த தேர்தல் மோசடி பற்றி. 2023ல் காங்கிரஸ் அப்போது காவல்துறை வசம் கொடுத்த புகாரின் அடிப்படையில் FIR பதிவு செய்யப்பட்டு, பிறகு மாநில அரசால் வழக்கு CIDக்கு அனுப்பப்பட்டது.

பாஜக தோற்று காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பின்னர் கர்நாடக மாநில CID அந்த போலி விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் எல்லாம் யார் யார் என கண்டுபிடிக்க விசாரணையை துவங்கியது.

தோண்டி பார்த்தால் மேலும் மேலும் திடுக்கிடும் மர்மங்கள் வெளியே வந்தன.

அந்த போலி விண்ணப்பங்கள் அனைத்தும் ஆன்லைனில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டதால், போலி விண்ணப்பதாரர் யாரையும் சாதாரணம் ஆக ஐபி அட்ரஸ் மூலம் யாரும் கண்டு பிடிக்க முடியாதபடி ஹை டெக் அறிவோடு டைனமிக் ஐபி அட்ரஸ் பயன்படுத்தியதால் புலனாய்வு விசாரணையில் சிக்கல் எழுந்தது.

தமக்கு எந்த கணினியில் இருந்து விண்ணப்பம் வந்தது என்கிற டெஸ்டினஷன்

ஐபி மற்றும் போர்ட்ஸ் தரவுகளை தேர்தல் ஆணையம் மாநில சிஐடி காவல் துறைக்கு தர மறுத்துவிட்டது..! இது எவ்வளவு பெரிய குற்றம்? அப்படின்னா தேர்தல் ஆணையம் இதில் உடந்தை என்பது இங்கே அம்பலம் ஆனது.

ஆகவே இதற்கு மேல் புலனாய்வை தொடர முடியாத முட்டு சந்து நிலை கர்நாடக சிஐடி க்கு ஏற்பட்டது.

**ஆக திருட்டுத் தேர்தல் ஆணையம்**

முக்கியமான அந்த தரவுகளை தர மறுத்து ஒரிஜினல் வாக்காளர்களை நீக்க போலி விண்ணப்பம் அனுப்பிய குற்றவாளிகளை பிடிக்க முடியாதபடி சிஐடி விசாரணையை தடுத்து நிறுத்தி வைத்துவிட்டது.

**இருந்தாலும் சிஐடி விடவில்லை.**

எத்தனுக்கு எத்தன்டா நான் என்பது போல் சிஐடி விடாமல் வேறு வழியில் துப்பு துவங்கியது.

அதாவது ஆன்லைனில் விண்ணப்பம் அனுப்பிய போது அந்நேரத்தில் சென்ற OTP தரவுகள் மூலம் 9 மொபைல் எண்களை புலனாய் வில் அபாரமாக சிஐடி கண்டுபிடித்தது.

அந்த 9 மொபைல் எண்களும் கர்நாடகாவே இல்லை என்கிற மற்றொரு அதிர்ச்சி தெரிய வந்தது. ஆம் அவை ஒவ்வொரு எண்ணும் ஆந்திரா மற்றும் மகாராஷ்டிராவை சேர்ந்தவை என்பது தெரிய வந்தது.

உடனே அவ்விரு மாநிலங்களுக்கும் விரைந்த CID காவல் துறையினர் அந்த எண்ணுக்கு உரியவர்களை கண்டதும் மேலும் அதிர்ச்சி அடைந்தனர். காரணம் அவர்கள் அறவே படிக்காத கிராமத்தில் வாழும் பாமரர்கள். படிவம் 7 பற்றியோ வாக்காளர் பட்டியல் பற்றியோ அதில் நீக்கம் பற்றியோ அவ்வளவு ஏன் இணையம், கணினி, ஸ்மார்ட் போன் பற்றியோ துளிகூட அறிவே இல்லாதவர்கள்.

ஆக OTP மெசேஜ் ஹேக் செய்யப்பட்ட ஒரு மாநில மொபைல் போன்களிலிருந்து இன்னொரு மாநிலத்தின் ஏதோ ஒரு தொகுதியின் ஏதோ ஒரு வாக்குச்சாவடியின் வாக்காளர் பட்டியலில் உள்ள குறிப்பிட்ட சில வாக்காளர்களை நீக்குதல் தொடர்பான மெகாமோசடி நடைபெறுகிறது என்பதை கர்நாடக சிஐடி கண்டுபிடித்து விட்டனர்..!

இனிமேல் ஒன்றிய அரசின் தகவல் தொடர்பு துறை உதவி செய்தால் மட்டுமே மேற்கொண்டு எங்கிருந்து மொபைல் OTP ஹேக் செய்யப் பட்டது யார் இந்த பல்லாயிரக்கணக்கான போலி விண்ணப்பங்களை அனுப்பிய குற்றவாளிகள் என்று கண்டு பிடிக்கலாம். அல்லது, CID கேட்ட தகவல்களை தேர்தல் ஆணையம் தந்தால் கண்டு பிடிக்கலாம்.

மேற்கண்ட மொத்த சம்பவத்தின் இறுதி காட்சி மட்டுமே சன் நியூஸ் செய்தி ஸ்லைடில் நீங்கள் பார்க்கிறீர்கள்.

அடப்பாவிகளா..!

எப்படி எல்லாம் தீவிரமாக திட்டமிட்டு அதிநவீன தொலை தொடர்பு மற்றும் இணைய கணினி தொழில்நுட்பத் திறமையை எல்லாம் கொட்டி ஒரு மாநில காவல்துறையின் உயர்ந்த அமைப்பான சிஐடி கூட கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு பக்கா லேட்டஸ்ட் டிஜிட்டல் டெக் தளங்களைப் பயன்படுத்தி, வேறு மாநில போலி தொலைபேசி எண்கள் மூலம், தேர்தல் ஆணையத்தின் ஆதரவுடன் ஒரேயொரு சட்டமன்ற தொகுதியிலேயே பல்லாயிரக் கணக்கான வாக்காளர்களை நீக்கியும், பல்லாயிரக் கணக்கான போலி வாக்காளர்களை ஜீரோ வீட்டு முகவரிகளில் சேர்த்து ஒரே வீட்டில் பல நூறு போலி வாக்காளர்களை சேர்த்து, இன்னும் முதல் முறை ஓட்டு போடும் வாக்காளர் என்று 85 வயதை தாண்டிய வயோதிகர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ந்து வீட்டில் இருந்த படியே வாக்களிக்கும் அவர்களின் படிவம்12D மூலம் தேர்தல் அதிகாரி விரும்பிய சின்னத்தில் ஒரே பட்டனில் மாலை 6 மணிக்கு மேலே வாக்குச்சாவடியில் ஓட்டு குத்தி வாக்குச்சாவடிகளின் சிசிடிவி காட்சிகளை தர மாட்டோம் என சட்ட திருத்தம் போட்டு அதையும் 45வது நாள் அழித்து விடுவோம் என்று மற்றொரு சட்டத் திருத்தம் செய்து அடேயப்பப்பா என்னென்ன தில்லுமுல்லுகள், மோசடிகள், முறைகேடுகள், ஜனநாயக படுகொலை.

**- முகமது ஆஷிக்**



vaigarai velicham official

சிறுகதை

# அந்த விபத்து..!



கீரிச் என்றொரு சப்தம்!

**சாலையில்** வேமாக வந்த கார் - கவிழ்ந்த சப்தம்தான் அது! கனத்த மழை! கவிழ்ந்த காரில் இருப்பவர்களை மீட்டெடுக்க ஓடினார்கள். மழைக்கு ஓரமாய் ஒதுங்கி நின்ற மக்கள். - இப்போது மழையில் நனைவதையே சேவை என நினைத்தார்கள்.

என்ன அதிசயம்!

கவிழ்ந்த காரை அப்படியே, தூக்கி நிறுத்தி னார்கள். காரின் உள்ளே இருந்தவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார்கள். தங்கள் அவலத்தை அலறல் மூலம் அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

இதனிடையே ஒருவர் இவர்களெல்லாம் முஸ்லிம்கள் என்றான்.

வந்தது பாருங்கள் கோபம் அனைவருக்கும்.

ஆமா டா நீங்களெல்லாம், பிரிட்டீஸ் காரரர்களுக்கு ஆட்காட்டிக் கொண்டிருந்தபோது, இவர்கள்தாம், தங்கள் உயிரைத் தந்து ஆங்கிலேயர்களோடு போர் செய்தார்கள்.

இன்று சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக் கின்றோம் என்றார்.

ஏனையோர், காரில் இருந்தவர்களை மீட்பதிலேயே கவனமாக இருந்தார்கள்.

ஒருவர் மட்டுந்தான், அவனுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

மழை நிற்கவில்லை.

ஆனால் அனைவரும் மீட்கப்பட்டு விட்டார்கள்.

மீட்புப் பணியில் நின்றுகொண்டிருந்த நான் அதிர்ந்துபோனேன். இப்படி சறுக்கென்று ஈட்டியாய் வந்த வார்த்தைகளைக்கேட்டு பிரவாகமெடுத்து வந்த இந்த சொற்களின் என்ன வேகம், என்ன விவேகம்.

பதிலைச் சொன்னவர் நொடியில் அங்கு நின்ற எதிரியைப் புரிந்துகொண்டு, வார்த்தைகளை வீசி வாயை அடைத்து என்னைப்போலவே எல்லோரையும், ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

காரை ஓட்டிக்கொண்டு வந்தவர் - கால், வலிக்கு, கைகளும் தரிக்கின்றன என்றார்.

மருத்துவமனை பக்கத்திலேயே இருந்தது. அழைத்துச் சென்றார் ஒருவர்.

உன்னுடைய பெயரென்னப்பா என்று கேட்டார் அவரை அழைத்துச் சென்றவர். ‘ரவி’ என்றார் அந்த டிரைவர்.

அத்தோடு. அத்தனை வேதனைகளோடும், தன் தலையை திருப்பி, அவர்களெல்லாம் முஸ்லிம் என்றவனை எங்கே? எனக் கேட்டார்.

‘அவன் கிடக்கின்றான்’ - நீ வா உன் உடம்பைப் பார் என்றார் அழைத்துச் சென்றவர்.

இல்லை அவனை கண்டு வைத்துக் கொள்ளலாம் என சொன்னார் டிரைவர் ரவி.

அவன் ‘எஸ்’ ஆகிவிட்டான் என்றார் ஒருவன். - அதையும் நயம்படச் சொன்னார்.

அன்றையிலிருந்து இப்படி ‘எஸ்’ ஆகிவிடுவதே, இவர்களின் வழக்கம் - என்றார் இன்னொருவர்.

எத்துனை கூர்மையாக இந்த எதிரிகளைப் புரிந்து வைத்திருக்கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்த்திடும்போது மிகவும், ஆறுத லாகவே இருந்தது. நம் உழைப்பு வீண்போக வில்லை?

# பூமிக்குள் வெற்றிடம்

**- ரஹ்மத் ராஜகுமாரன்**

**பூமிக்கு** அடியில் இருந்து உறிஞ்சப்படும் நிலத்தடி நீர், ஆற்று நீர்,கடல் நீர், மழைநீர் போன்றவற்றின் ஊடுருவலால் நிரப்பப்படுகிறது. அதேபோல பூமிக்கு அடியில் இருந்து பல்லாயிரம் கேலன்கள் எடுக்கப்படும் கச்சா எண்ணெயின் வெற்றிடம் எதைக் கொண்டு நிரப்பப்படும்?

நாம் நிலத்தடி நீரை எடுத்துக் கொண்டாலும், அதன் இடத்தை மழைநீர், ஆற்றுநீர், கடல்நீர் போன்றவை ஊடுருவி நிரப்பும். ஆனால் கச்சா எண்ணெய் (Crude oil) பல்லாயிரம் கேலன்களாக எடுக்கப்படும் இடத்தில் அதுபோல் நிரப்பும் மூலங்கள் எதுவும் இல்லை.

**விஞ்ஞான ரீதியாக என்ன நடக்கிறது?**

எண்ணெய் மற்றும் எரிவாயு இருக்கும் இடம் - பூமிக்குள் உள்ள “Reservoir rock” (அதாவது துளைகளும் சிறிய இடைவெளிகளும் கொண்ட கல்) தான். அந்த கல் முழுவதும் எண்ணெய், எரிவாயு, உப்புநீர் (brine) ஆகியவை கலந்திருக்கும்.

எண்ணெய் எடுக்கப்பட்ட பின் - வெற்றிடம் வெறுமையாக இருக்காது. பொதுவாக: உப்புநீர் (Brine water) அங்கு ஊடுருவி வந்து இடத்தை நிரப்பும். சில நேரங்களில் புவியின் அழுத்தம் குறைந்து அந்த இடம் சுருங்கி விடும். இதனால் நிலத்தில் subsidence (தாழ்வு) ஏற்படும்.

மீள்நிரப்பு முறைகள் - இன்று பல நாடுகள் “secondary recovery” அல்லது “enhanced oil recovery” தொழில்நுட்பம் மூலம்: தண்ணீர், இயற்கை எரிவாயு (gas injection), அல்லது $CO_2$ போன்றவை, கிணற்றுக்குள் செலுத்தப்படுகின்றன. இதனால் எண்ணெய் எளிதில் மேலே வருவதோடு, அந்த இடம் காலியாகிவிடாமல் தடுக்கப்படுகிறது.

நிலத்தடி எண்ணெய் எடுக்கப்பட்ட இடம் வெற்றிடமாகவே தங்கி விடாது. அதனை உப்புநீர் நிரப்பும் அல்லது புவியின் கல் அடுக்குகள் சுருங்கும். தொழில்நுட்ப ரீதியாக மனிதர் - நீர் / எரிவாயு / $CO_2$ ஊற்றி இடத்தை நிரப்பவும் செய்கிறார்.

**1. நிலத்தடி நீர் - நிரப்பும் முறை**

நிலத்தடி நீர் அடுக்குகள் (aquifers) ஆற்று நீர், ஏரிகள், மழைநீர் போன்றவற்றின் ஊடுருவல் (percolation) மூலம் மீண்டும் நிரப்பப்படுகின்றன. ஆகவே நீர் எடுப்பதால் உருவாகும் வெற்றிடம், நேரடியாக மேலிருந்து ஊடுருவும் நீரால் நிரம்புகிறது.

**2. கச்சா எண்ணை (Crude Oil) - வெற்றிடம் பற்றிய கேள்வி**

எண்ணெய் “ஒரு பெரிய குளம்” போல பூமிக்கடியில் இருக்காது.அது சிதைவுற்ற கல் அடுக்குகளின் (porous rock layers) இடைவெளிகளில், பிளவுகளில், மணற்கல் அல்லது சுண்ணாம்புக்கல் துகள்களுக்கு இடையில் சிக்குண்டு இருக்கும். கச்சா எண்ணையுடன் சேர்ந்து பொதுவாக வாயு (natural gas) மற்றும் உப்பு நீர் (brine) கூடவே இருக்கும்.

**3. எண்ணை எடுக்கும்போது என்ன நடக்கும்?**

பல்லாயிரக்கணக்கான கேலன்கள் எண்ணை பம்ப் செய்து எடுக்கும்போது, அந்த இடைவெளிகளை (pores) காலியாக விட்டுவிட மாட்டார்கள்.


பொதுவாக அங்கு இருந்த உப்பு நீர் (formation water) மேலே தள்ளப்படுகிறது; அது எண்ணை எடுக்கப்பட்ட இடத்தை நிரப்பும்.

சில இடங்களில் இயற்கை வாயுக்கள் இருந்தால், அவை கூட அந்த வெற்றிடத்தை நிரப்பும். நீண்ட காலத்திற்கு பிறகு, மேலிருந்து மெதுவாக நீரும் அந்த இடத்திற்குள் ஊடுருவி வரும்.


vaigarai velicham official

### 4. நவீன தொழில்நுட்பம் (Secondary & Tertiary Recovery)

சில கிணறுகளில், எண்ணெயை எளிதில் எடுக்க முடியாமல் போகும் போது, நீர் (water flooding) அல்லது கார்பன் டை ஆக்சைடு / நைட்ரஜன் வாயு (gas injection) செலுத்தப்படுகிறது. இதனால் வெற்றிடமாய் விடாமல், பாறைகளின் அழுத்தமும் நிலையானதாக இருக்கும்.




**ஆன்மிக உவமை (சூஃபி பார்வை):**

எண்ணெயை எடுத்து வெற்றிடத்தை விடாமல் நீரால் நிரப்புவது போல,

மனிதன் உள்ளத்தில் "ஆசை-எண்ணெய்" எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, அந்த வெற்றிடம் "இறை நினைவு - நீர்" கொண்டு நிரப்பப்பட வேண்டும். இல்லையெனில் அந்த வெற்றிடம் வெறுமையோ அல்லது நச்சு வாயுக்களோ கொண்டு நிரம்பிவிடும்.

குர்ஆனில் "வெற்றிடம்" (empty space / void) நிரப்பப்படுவது பற்றி பல இடங்களில் மறைமுகமாகச் சொல்லப்படுகிறது. இறைவன் படைத்த பிரபஞ்சத்தில் எந்தப் பகுதியும் வெறுமையாக இல்லை; அனைத்தும் சமநிலையுடன் நிரப்பப்பட்டுள்ளன.

### 1. விண்வெளி & பூமி வெறுமையின்றி நிரம்பியுள்ளன

"அவன் வானங்களை தூண்களின்றி உயர்த்தினான்." (குர்ஆன் 13:2)

இங்கு "தூண்களின்றி" என்றால் வெற்றிடம் போலத் தோன்றினாலும், உண்மையில் காந்தம் (gravity) மற்றும் இறை ஒழுங்கே அந்த இடத்தை நிரப்புகிறது.

### 2. எந்த இடமும் இறைவனின் ஆட்சியின்றி வெறுமையில்லை

"அவன் அனைத்தையும் சூழ்ந்தவனாக இருக்கிறான்." (குர்ஆன் 41:54)

இதன் பொருள், பிரபஞ்சத்தில் எந்த இடமும் வெறுமையாக விடப்படவில்லை; அது இறைவனின் சன்னிதியால் நிரம்பியுள்ளது.

### 3. மனித உள்ளத்தின் வெற்றிடம்

"அல்லாஹ்வின் நினைவால் மட்டுமே இதயங்கள் அமைதியடையும்." (குர்ஆன் 13:28)

இங்கு உள்ளார்ந்த வெற்றிடத்தை (emptiness / void of the heart) இறைவனின் நினைவே நிரப்பும் என்று கூறப்படுகிறது.

### 4. பொருள், நீர், வளங்கள் பற்றிய நிரப்பு

"அவன் அளவோடு வானத்திலிருந்து நீரை இறக்கினான், அதனால் பூமியை அதன் மரணத்திற்கு பின் உயிர்ப்பித்தான்." (குர்ஆன் 43:11)

வெற்றிடம் போலத் தோன்றும் வறண்ட பூமியை மழை நிரப்புகிறது.

### 5. வெற்றிடத்தின் சமநிலை (Balance in Nature)

"அவன் அனைத்தையும் தக்க அளவில் படைத்தான்." (குர்ஆன் 25:2)

இதன் பொருள்: எதையும் வெறுமையாய் விடவில்லை; ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு அளவான நிரப்பம் இருக்கிறது.

**குர்ஆன் சொல்லும் வெற்றிட நிரப்பும் ரகசியம்:**

பிரபஞ்சத்தில் எந்த இடமும் வெறுமையாக இல்லை; அது சக்தி, ஒழுங்கு, இறை ஆட்சியால் நிரம்பியுள்ளது.

பூமியின் வெற்றிடம் மழை, காற்று, நீர் கொண்டு நிரப்பப்படுகிறது.

மனித உள்ளத்தின் வெற்றிடம் இறை நினைவால் மட்டுமே நிரம்புகிறது.



# பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்காக உழைக்கின்றார்கள்

## PARENT'S WORK FOR THEIR CHILDREN

**பெற்றோர்கள்** குழந்தைகளுக்காகத்தான் உழைக்கின்றார்கள். இன்று உங்கள் பெற்றோர்கள் ஓய்வின்றி உழைக்கின்றார்கள்.

சில வேலைகளில் பகல்-இரவு எனப் பார்க்காமல் உழைக்கின்றார்கள்.

ஆகவே, அவர்களின் வயோதிக காலத்தில் குழந்தைகள் அவர்களுக்காக உழைக்க வேண்டும்.

குழந்தைகள், தங்கள் தேவைகளுக்கு உழைத்திட இயலாத காலத்தில் பெற்றோர்கள் அவர்களுக்காக உழைத்தார்கள்.

கால சக்கரத்தின் சுழற்சியில் பெற்றோர்கள் தங்கள் தேவைகளுக்காக உழைத்திட முடியாத நிலையை அடைகின்றார்கள்.

அப்போது

Children's work for their parents

குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்காக உழைப்பார்கள்.

இது இறைவனின் நியதி!

அந்த வயதான காலத்தில் நீங்கள் அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றுடன் அவர்களிடம் நடந்திட வேண்டும்.

நீங்கள் உங்களையே அறிந்திட இயலாத காலத்தில் அவர்கள் உங்கள் தேவைகளை அறிந்து நடந்தைப் போல் நீங்கள் அவர்களுடைய தேவையை அறிந்து நடந்திட வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்

"நீங்கள் உங்கள் தாயிடம் கடமைத் தவறி நடப்பதை அல்லாஹ் தடை செய்திருக்கின்றான். நீங்கள் கொடுத்திட வேண்டியதைத் தடுத்து விடாதீர்கள். உங்கள் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்து விடாதீர்கள். அதை அல்லாஹ் தடுத்திருக்கின்றான். நீங்கள் அடுத்தவர்களைப் பற்றி அதிகமாகப் பேசுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. (மார்க்கத்தில்) அதிகமான கேள்விகளைக் கேட்பதையும், அல்லாஹ் விரும்புவதில்லை. உங்கள் சொத்துக்களை விரையமாக்குவதை அல்லாஹ் விரும்பவில்லை." (புகாரி)

பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்

"நான் பாவங்களில் பெரியது எது? என்பதை உங்களுக்குச் சொல்லட்டுமா?"

குழுமியிருந்தோர் சொன்னார்கள் "சொல்லுங்கள் யா ரசூலுல்லாஹ்"

"வணக்கங்களிலும், வழிபாடுகளிலும்

அல்லாஹ்வுக்கு இணை வைப்பது. இன்னும் பெற்றோர்களைப் புறக்கணிப்பது"

தொடர்ந்து

பெருமானார் (ஸல்) அவர்கள் சற்றே சாய்ந்திருந்த நிலையிலிருந்து, எழுந்து அமர்ந்தார்கள்.

"பொய் சாட்சியம் சொல்வதைக் குறித்து, நான் எச்சரிக்கின்றேன்"

இதை இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

நாங்கள் இந்த எச்சரிக்கையை அவர்கள் நிறுத்த மாட்டார்களா என்றே நினைத்தோம். - புகாரி நபிமொழி தொகுப்பு.

இன்னும் பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்



"மிகப்பெரிய பாவம் அல்லாஹ்வுக்கு இணை வைப்பது, பெற்றோர்களிடம் கருணையும், கரிசரணையுமில்லாமல் இருப்பது. அல்லாஹ் தடுத்த ஓர் ஆத்மாவை கொலை செய்வது, பொய் சாட்சியம் சொல்வது." (புகாரி)

"தங்களுடைய பெற்றோர்களை வைபவர்களை அல்லாஹ்வும் வைவான். (சபிப்பவர்களை அல்லாஹ்வும் சபிப்பான்)" புகாரி.

இவர்கள் சுவர்க்கம் புகமாட்டார்கள். தான் செய்த உதவிகளைச் சொல்லிக் காட்டுபவன். தன்னுடைய பெற்றோர்களுக்குக் கீழ்படிய மறுப்பவன், மதுவுக்கு அடிமையாகின்றவன்"

குடும்பச் சூழலில் மனைவியும், கணவனும், தம்தம் பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நிலையாக நினைவில் நிறுத்த வேண்டும்.

கணவன் அவனது பெற்றோர்களுக்கு நிறைவேற்றிட வேண்டிய கடமைகளுக்கு மனைவி உதவி செய்திட வேண்டும்.

அதேபோல் மனைவி அவளது பெற்றோர்களுக்கு நிறைவேற்றிட வேண்டிய கடமைகளில் கணவன் உதவி செய்திட வேண்டும்.

அன்று அவர்கள் அந்தப் பெற்றோர்கள் உங்களுக்கு உதவி செய்தார்கள். இன்று நீங்கள் அவர்களுக்கு உழையுங்கள்.

Then - Parent's work for their children

Now - Children work for their parents


இன்ஷா அல்லாஹ் தொடரும்..

- MGM




ஆங்கிலம் : **JOHN FEFFER** தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்






## இஸ்லாத்திற்கெதிரான மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற போர்

**"The Wests Resurgent War on Islam"**

*புகுமுன்*

*அன்பார்ந்த வாசகர்களே..!*

**இஸ்லாத்தின்** மீதும், முஸ்லிம்கள் மீதும் நாங்கள் எப்படியெல்லாம் வெறுப்பை வளர்த்தோம் என்பதை ஜான் பெஃபர் அவர்கள் தன்னுடைய நூலில் விவரித்து வருகின்றார்.

முதல் சிலுவைப் போர்களில் (1095 முதல் 1243 வரை நடந்த போர்கள்) மேற்குலகம் குறிப்பாக (Christian Dow) - கிருஸ்தவ உலகம் தோல்வியடைந்த பின்தான் அவர்கள் முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் வெறுப்பை வளர்த்து வருகின்றார்கள் என்றில்லை. அதற்கு முன்பிருந்தே இந்த வெறுப்பை இஸ்லாமோஃபோபியாவை வளர்த்து வருகின்றார்கள்.

**அதன் விளைவுதான், முதல் சிலுவைப் போர்கள்**

முதல் சிலுவைப் போர்கள் முடிந்த உடனேயே தங்கள் தோல்விகளிலிருந்து விடுபட்டுத் தங்கள் வெறுப்புப் பிரச்சாரத்தை அதாவது இஸ்லாமோஃபோபியாவை வளர்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த வெறுப்புப் பிரச்சாரத்திற்கு ஓர் வடிவம் கொடுத்திடத்தான் 9/11 என்ற நிகழ்வை நடத்தினார்கள்.

9/11 என்பது 2001 செப்டம்பர் மாதம் 11ஆம் நாள் அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் தாக்கப்பட்ட நிகழ்வைக் குறிக்கும்.

9/11 என்ற இந்த நிகழ்வை மையப்படுத்தித்தான் இஸ்லாமிய உலகின் மேல் போர் ஒன்றை பிரகடனப்படுத்தியது. அமெரிக்காவும், அதற்குப் பக்கத்துணையாக நின்ற ஐரோப்பிய நாடுகளும்.

அந்தப் போர் இன்றளவும், தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அதைத்தான் நவீன போர்கள் என்றும், சிலுவைப் போர் 2.0 என்றும் அறியப்படுகின்றது.

இன்றைய நாள்களில், இந்த 9/11 மையப் படுத்தியே இன்றைய இஸ்லாமோஃபோபியா வளர்க்கப்படுகின்றது.

அண்மையில் 15/9/2025 அன்று கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவை தாக்கியது இஸ்ரேல்.

அதுவும் தோஹாவில் ஹமாஸ்-இஸ்ரேல் போர் நிறுத்த பேச்சு வார்த்தைக்காக வந்திருந்த ஹமாஸ் குழுவினரை குறிவைத்தத் தாக்குதல்.

காரணம், சொல்லவந்த போர்க்குற்றவாளி நெதன்யாஹு, நான் கத்தாரை தாக்கியதற்கான

காரணம், ஹமாஸ்தான். அமெரிக்கா எப்படி 9/11 தாக்குதலை நடத்தியவர்களை, ஆப்கானிஸ்தானில் தாக்கியதோ, அதுபோல்தான் எனது தாக்குதலும் என்றான்.

(அதாவது, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டான்.)

இதிலிருந்து நெதன்யாஹுவுக்கு 9/11 தாக்குதலின் இன்றைய நிலை புரியவில்லை என்பதே உண்மை.

இன்று 9/11 என்பது அமெரிக்காவின் உள்ளிருப்பு வேலை என்பதை அனைவரும் அறிவர்.

அமெரிக்க இராணுவத்தினரே, அதாவது ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்ட இராணுவத்தினரே தங்களுக்கு வழங்கப்பெற்ற பதக்கங்களைத் தூக்கி வீசினார்கள்.

அந்த அமெரிக்க வீரர்களின் முழக்கம் “Wars and dead bodies”

“பொய்கள் போர்கள், பிணங்கள்” இது பின்னர் நூலாக வந்தது.

அதன் சுருக்கம் ஒன்றை நாம் வைகறை வெளிச்சம் இதழில் தந்திருந்தோம்.

இவ்வளவு முக்கியத்துவம், இந்த 9/11 இதழுக்கு தரப்பட்டதால் நாம் 9/11 யாரால்? யாரால்? என்றொரு நூலை வெளியிட்டோம். வாசகர்கள் அதனையும் வாங்கிப்படிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இப்போது வைகறை வெளிச்சத்தின் இந்த இதழில், அமெரிக்காவின் விசாரணை கமிஷன் ஒன்றின் அறிக்கையைத் தந்திருக்கின்றோம்.

ஆக ஒரு பெரும் பொய்யைப் புனைந்துரைத்துதான் அமெரிக்கா 21 ஆண்டுகளாக 1,29,000 ஆப்கானிஸ்தான் மக்களைக் கொன்று குவித்தது. அதன் நீர்த்தேக்கங்களை அழித்தது. அணைகளை உடைத்தது. மின் உற்பத்தி நிலையங்களை அழித்தது. பசியிலும், பட்டினியிலும், ஆழ்த்தியது.

மொத்தத்தில் அந்த மக்களை நிர்மூலமாக்கியது. அத்தனையையும் தாங்கிக் கொண்டு 21 ஆண்டுகள் பட்டினி, பசி இவற்றில் உழன்று கொண்டே அமெரிக்காவை வீழ்த்திக் காட்டினார்கள் தாலிபான்கள்.

ஆகஸ்ட் 15,2021இல் அமெரிக்கா + 51 நாடுகளின் கப்ருஸ்தானாக மாறியது ஆப்கானிஸ்தான். இதிலிருந்து இஸ்ரேலியப் படைகளுக்கு காஸாவில் என்ன காத்திருக்கின்றது என்பதை நெதன்யாஹு புரிந்துகொள்ளலாமே. இன்ஷாஅல்லாஹ்

ஆகவே, ஜான் பெஃப்பர் கூறுவதை அடுத்த இதழில் தருகின்றோம். இன்ஷாஅல்லாஹ்

9/11 தாக்குதல் பற்றி அரசு அறிக்கையை இங்கே தருகின்றோம்.

**உலகில் ஒரு நிகழ்வை இப்படி பெயர் சொல்லி அழைக்கின்றார்கள்.**

அது 9/11. இதன் பொருள், 2001ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் நடந்த நிகழ்வு என்பதாகும். அமெரிக்கர்கள் மாதத்தை முதலிலும் நாளை - தேதியைப் பின்னரும் போட்டு எழுதும் பழக்கமுடையவர்கள்.

இந்த நாளில்தான் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டன.

தகர்த்த பழியை முஸ்லிம்கள்மேல் சுமத்தினார்கள். அதையே காரணமாகக் காட்டி ஆஃப்கானிஸ்தானையும், ஈராக்கையும் கபளீகரப்படுத்தினார்கள். அழித்தார்கள்.

இந்த 9/11 நிகழ்வுக்கு, அதாவது அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டதற்கு யார் காரணம்? தகர்த்தது யார்? என்பது குறித்து விவாதம் ஒன்று இன்றளவும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. காரணம் உண்மையான குற்றவாளிகள் இன்றளவும் கண்டுபிடிக்கப்படவில்லை.




இந்நிலையில் அமெரிக்காவில் நடந்த ஆய்வறிக்கை அல்லது விசாரணை கமிஷனின் அறிக்கை வெளி வந்துள்ளது.

**The 9/11. Commission Report**

Final Report of The National Commission on Terrorist Attacks Upon The United States. - Authorised Edition.

**அதாவது 9/11 விசாரணை அறிக்கை!**

*தீவிரவாதிகள் அமெரிக்காவின் மீது நடத்திய தாக்குதல்கள் பற்றிய தேசிய விசாரணைக் குழுவின் இறுதியறிக்கை! அங்கீகரிக்கப்பட்ட பதிப்பு! தாமஸ் கியான், லீ ஹெமில் டன் ஆகியோர் வரைந்த அறிக்கை இது!*

567 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையை முழுமையாகப் படித்துப் பின்னர் விமர்சனம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது 'இம்பாக்ட்' என்ற இஸ்லாமியப் பத்திரிகை.

அமெரிக்கா தன்னுடைய பொய்களை மூட்டை கட்டி அறிக்கையாகத் தந்திருக்கின்றது.

அறிவின் சிகரத்திலும், அறிவியலின் ஆழத்திலும் இருப்பதாகப் பீற்றிக்கொள்ளும் அமெரிக்கா விழுந்து விழுந்து உண்மையை மறைக்க ஆதாரங்களைத் தேடுகின்றது.

என்னதான் வாய்மையை சூது கவ்வினாலும் வாய்மை ஒரு நாள் வென்றே தீரும் என்பதற்கிணங்க இந்த அறிக்கையிலிருந்து பல உண்மைகள் வெளிப்போந்திருக்கின்றன. அவற்றை இங்கே பட்டியலிடுகின்றோம்:

2001 செப்டம்பர் 11ஆம் நாள் (9/11) இடிபாடுகளுக்குள்ளான கட்டடங்கள் ஒரு தொகுப்புக் கட்டடம். அவற்றில் உலக வர்த்தக நிறுவனம் 1 உலக வர்த்தக நிறுவனம் 2, 3, 4 என ஏழு கட்டடங்கள் உள்ளன. கட்டடம் எண் 7, 47 மாடிகளைக் கொண்டது. கட்டடம் எண் 1, 110 மாடிகளைக் கொண்டது. நிலத்திற்குமேல் 1300 மீட்டர் உயரம் உள்ளது. நிலத்திற்கு கீழும் பல தளங்களைக் கொண்டது.

அன்று இடிக்கப்பட்ட அல்லது தகர்க்கப்பட்ட, கட்டடங்கள் ஒரு மில்லியன் டன் எடை கொண்டவை. அதாவது 10 லட்சம் டன் எடை கொண்டவை. இவற்றை 47 கெட்டியான இரும்பு தூண்கள் தாங்கி நின்றன. நடுவே நின்ற இந்தத் தூண்களைச் சுற்றி நின்ற சுவர்கள் வலுவான இரும்பு கம்பிகளால் பின்னப்பட்டவை. ஒவ்வொருமாடியிலும் 240 இரும்பு இடைத் தூண்கள். அவற்றைச் சுற்றி இரும்பு கம்பிகள். ஒவ்வொரு மாடியும் சிலந்திவலை போல் இரும்பு கம்பிகளால் பின்னப்பட்டது. இதனால் கெட்டியான இரும்பால் வேயப்பட்டனவாகவே இந்தக் கட்டடங்கள் இருந்தன. அவற்றை இன்னும் வலுவாக்கிட இன்னொரு சுற்று இரும்பும் அவற்றைச் சுற்றி வந்தது. இத்தனை இரும்புப் பின்னல்களையும் சிமெண்டு கலவையால் நிரப்பியிருந்தனர். அதற்குப் பின்னே புறச்சுவரை பூசி இருந்தார்கள். அந்தப் பூச்சு 100 MM அதாவது 100 மில்லிமீட்டர் (அல்லது) 4 அங்குல அளவுக்கு பருமனானது. கெட்டியானது.

WTC 1 அல்லது உலக வர்த்தக நிறுவனம் 1 பத்துவினாடிகளுக்குள் துகள் துகளாய் போனது என கொலம்பியா பல்கலைக் கழகத்தின் கட்டடக் கலை நிபுணர்கள் கூறுகின்றார்கள். அடுத்த கட்டடம் எட்டு வினாடிகளில் தூளானது. கட்டடம் எண் 7 ஆறே வினாடிகளில் துகளானது. இத்துணை வேகத்தில் கட்டடங்களை தூளாக்கிடும் ஆற்றல் விமானங்களுக்கில்லை என்பது விஞ்ஞானிகளின் ஒருமித்தக்கருத்து.

இவையெல்லாம் ஒரே நேரத்தில் இடிந்து வீழ்ந்திருப்பது அதிலும் அதிவேகத்தில் தூளாக்கப்பட்டிருப்பது ஒரு உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. அது இவையெல்லாம் ஒன்றாக திட்டமிடப்பட்டு முறைப்படுத்தப்பட்ட குண்டு வெடிப்புகளால் நடந்தவையே! என்பதுதான்.

இந்த குண்டுவெடிப்புகள் புழுதிகளைக் கிளப்பிற்று. அவை மேகக் கூட்டங்களைப்போல் இந்தக் கட்டடங்களிலிருந்து வெளிப்பட்டு கொண்டிருந்தன. 500 மீட்டர் விட்டத்திற்கு இரும்புக் கம்பிகளும் தூளாகி பறந்தன. தரையில் வந்து படிந்தன. தொண்ணூராயிரம் டன் (90,000) எடையுள்ள இந்த கட்டடங்களின் துகள்கள் சில அங்குல உயரத்திற்கு அண்மையிலுள்ள வீதிகளில் படிந்திருந்தன.

அதாவது தரையிலிருந்து சில அங்குலங்கள் உயரத்திற்கு வீதிகளில் இந்த தூள்கள் படிந்தன.

சாதாரணமாக வீடுகள் இடிந்து வீழ்ந்திடும் போது சுவர்கள் சிறு துண்டுகளாகி வீழும். அப்படி எந்தத் துண்டுகளையும் இந்தக் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்த இடங்களில் காண முடியவில்லை. மாறாக மொத்தக் கட்டடங்களும் புழுதியாய் மாறி காற்றில் மேகம்போல் காட்சி தந்து பின்னர் தரையில் வந்து படிந்திருக்கின்றன.

இப்படி இடிபாடுகளில் எங்கேயும் கட்டடத் துண்டுகள் இல்லாமல் போனதும், வெறும்


vaigarai velicham official

பொடிகளும் தூசுகளும் தான் இடிபாடுகளில் காணப்பட்டன என்பதும் இந்தக் கட்டடங்கள் வெறும் விமானம் மோதி வீழ்ந்திட வில்லை. மாறாக இவை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. தகர்ந்த இரண்டு கட்டடங்களும் 92 ஆவது மாடிக்குமேல் தான் சேதத்திற்குள்ளாகின.

இந்தக் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தவுடன் தீயணைப்புப் படையினர் ஓடிவந்து இந்த இரண்டு கட்டடங்களுக்குள்ளும் புகுந்தார்கள். அவர்கள் 70 ஆவது மாடிவரை விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டார்கள். இவர்கள் சூதுவாது அறியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் கட்டடங்கள் நிலைக்குமா? நிற்குமா? என்பவற்றைப் பற்றி எந்தக் கவலையும் படவில்லை. கவலையில்லாமல் மீட்புப் பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் அவர்களும் சில நிமிடங்களில் இடிபாடுகளில் சிக்கிப் பலியானார்கள். ஏனெனில் அவர்கள் நின்றுகொண்டிருந்த தளத்திற்கு கீழுள்ள தளங்கள் பின்னர் வெடித்துத் தகர்ந்தன. இது விமானங்கள் வீழ்ந்தபின் எரிந்து நிகழ்ந்தது.

இவர்கள் இடிபாடுகளில் சிக்கி இறந்தார்கள் என்பதைவிட அங்கே அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பதே உண்மை!

ஆனால், அமெரிக்காவின் அதிகாரப் பூர்வமான அறிக்கை, அரசு அங்கீகாரம் பெற்ற அறிக்கை வேறொரு கதையைக் கட்டுகின்றது.

இத்துணை வலுவான கட்டடங்கள் எப்படி இடிந்தன? எப்படி துகள்களாயின? என்பதற்கு இந்த அறிக்கையை எழுதியவர்கள், தங்களுக்கே உரித்தான பாணியில் இப்படிக் கூறி இருக் கின்றார்கள்:

அதாவது, பறந்து சென்று இந்தக் கட்டடங் களில் மோதிய விமானங்களிலிருந்து வெடித்துச் சிதறிய பெட் ரோல், அதாவது அதிசக்தி வாய்ந்த விமான எரிபொருளான பெட்ரோல் உருவாக்கிய பயங்கர வெப்பத்தில் இந்தக் கட்டடங்களைத் தாங்கி நின்ற இரும்புத் தூண்கள் உருகிப்போயின வாம். அத்தோடு அவற்றைப் பிணைத்து நின்ற சிலந்திவலை போன்ற இரும்புகளும் உருகி (தூளாகிப்) போயினவாம்.

ஆனால், ஆராய்ச்சியாளர்கள், இந்தப் பெட்ரோல் - எரிபொருள் உருவாக்கும் வெப்பம் இரும்பு கம்பிகளை உருக்கிடவோ அல்லது அவற்றை சுற்றிப் பூசப்பட்டிருந்த சிமெண்ட் காங்கிரீட்டை உருக்கிடவோ எந்த விதத்திலும் சக்தி பெற்றவையல்ல என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்றனர்.

இந்த (Air Craft Petrol) பெட்ரோல் அவை எத்துணைதான் சக்தி மிக்கவை என நாம் பேசிக்கொண்டாலும், அவற்றிற்கு இரும்பையும் சிமெண்ட் பூச்சுகளையும் மாவுபோல் தூளாக்கிடும் சக்தி நிச்சயமாக இல்லை. இது விஞ்ஞானிகளின் ஒருமித்தக் கருத்து.

இதில் இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். அது இந்த இடிபாடுகள், அதாவது தூசுபோல் துகள்களாக ஆகிப்போன இந்த இடிபாடுகள் மிகவும் துரிதமாக அப்புறப் படுத்தப்பட்டுவிட்டன. இந்தத் துகள்களை அகற்றிடுவதில் அளவுக்கு மேலான துரிதமும் அக்கறையும் காட்டப்பட்டன. துகளாய்ப் போன இரும்புகள் உடனேயே விற்பனை செய்யப்பட்டுவிட்டன. இவற்றை இந்தியாவும், சைனாவும்தான் வாங்கின. (அப்போது இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சி நடைபெற்றது) இவை அமெரிக்காவிலிருந்து வெளியேறும் வரை பயங்கரமான காவல்கள் போடப்பட்டிருந்தன. பின்னர் ஆராய்ச்சி யாளர்கள் அந்த இடிபாடுகளின் தன்மையை ஆராய்ச்சி செய்திட வந்தபோது அவர்களின் கண்களில் இடிபாடுகளில் எதையுமே காட்டிட வில்லை. அதேபோல் இந்த 9/11 நிகழ்ச்சிகளை விசாரிக்க வந்த விசாரணைக் குழுக்களிடமும் இவை காட்டப்படவில்லை. ஏன் காட்டப்பட வில்லை? விசாரணைக் குழுக்களும் ஆராய்ச்சி யாளர்களும் அங்கே வரும்போது இடிபாடுகள் கடல் கடந்து சென்றுவிட்டன.

இப்படி அதிவேகமாக இடிபாடுகளை அகற்றி விற்ற (கம்பெனிகள்) - வியாபார நிறுவனங்கள்: டியூனி கன்ஸ்டிரக்ஷன்ஸ். Tully Constructions, கன்ட்ரோல்ட்டு டிமாலிஷன் இங்க்: Controlled Demolition Inc என்பனவாகும். இவற்றிற்கு இமைப் பொழுதில் இந்த வியாபார அனுமதி எப்படிக் கிடைத்தது? முன்னரே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இல்லையேல் இந்தக் கம்பெனிகள் அத்துணைத் துரிதமாக இந்த “அகற்றுதல்” பணியைச் செய்திருக்கவியலாது. இந்த 9/11 கட்டட இடிப்புகளை நடத்தியவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் மிகவும் முக்கிய சாட்சியங்களாகத் திகழ்ந்திடும் இந்த

இடிபாடுகளை உடனேயே வேகவேகமாக அந்த இடத்தை விட்டு அகற்றிட அனுமதியளித்த அரசு அதிகாரி யார்? ஆணை பிறப்பித்தது யார்?

ஆய்வாளர்களும், தனியார் விசாரணைக் குழுக்களும் விடுக்கும் இந்த வினாக்களுக்கு அமெரிக்க அதிகாரிகளிடமிருந்து இன்றளவும் எந்தப் பதிலுமில்லை.

இதனால் நாம் ஓர் முடிவுக்கு வந்திட வேண்டியதிருக்கின்றது. அது, அந்த இரண்டு கட்டடங்களும் விமானங்கள் மோதியதால் மட்டும் இடிந்தவை அல்ல என்பதே அது.

இன்னும் சில ஐயங்கள் உண்மை இப்படியெல்லாம் இருந்தாலும் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அது, வானளாவ உயர்ந்து நின்ற இந்தக் கட்டடங்கள் மீது விமானங்கள் மோதிய காட்சியை அவை மோதும் போதே உயர்தர சினிமா கருவிகளைக் கொண்டு படம் பிடித்தார்கள். இவர்கள் யார்? இந்தக் காட்சியை நாள் தவறாமல் காட்டிக் கொண்டே இருந்தார்கள். கட்டடங்களின் மீது விமானங்கள் மோதும்போது படம் எடுத்தவர்கள் அங்கே தயாராக நின்று கொண்டிருந்திருக்கின்றார்கள். இவர்கள் எப்படி அங்கே வந்தார்கள்? பார்ப்பவர்களின் மதியை மயக்கும் இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் எவரும் அதற்குப் பின்னால் மறைந்து கிடந்த சதிகளை எண்ணிக்கூட பார்த்ததில்லை. அந்த அளவுக்கு இந்தப் படங்கள் அனைவரையும் மயக்கின.

கட்டடங்கள் இடிக்கப்பட்டபோது என்னென்ன நடந்தன என்பதை அப்போதைய விடியல் வெள்ளியில் விளக்கமாக வெளியிட்டிருந்தோம். (பார்க்க விடியல் வெள்ளி அக்டோபர் 2001)

விமானங்கள் கட்டடங்களில் மோதி வெளியே வரும் காட்சிகள் இன்றளவும் சின்னத் திரைகளில் காட்டப்பட்டு வருகின்றன. மக்கள் அந்தக் காட்சிகளை நம்பியதைப் போல் அதற்குப் பின்னால் சொல்லப்பட்ட கதைகளையும் அப்படியே நம்பினார்கள். இத்தோடு இன்னொரு அற்புதமான கதையையும் கட்டவிழ்த்துவிட்டது அமெரிக்கா. அது பெண்டகன் என்ற அமெரிக்காவின் இராணுவ தலைமைப் பீடத்தில் மோதியது போயிங் 757 என்ற விமானம் என்பதே! (இது அமெரிக்காவின் விண் வெளிவிமானத் தடம் எண் 77 என்று செய்தி பரப்பப்பட்டது.) இதில் 6 விமானப் பணியாட்களும் 58 பயணிகளும் இருந்ததாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்தக் கட்டடத் தகர்ப்பு நிகழ்வுகளை ஆய்வு செய்த எந்த ஆய்வாளர்களும் இதனை ஏற்றுக்கொள்ள வில்லை.

இதில் மிகப்பெரிய வேதனை என்னவெனில் அமெரிக்கா சொல்லும் அதிகாரப்பூர்வமான தகவல்களை நம்பாமல் தாங்களாகவே ஆய்வு நடத்துபவர்கள் யாரையும் அமெரிக்கா அண்ட விடுவதில்லை. அவர்களின் ஆய்வுகளை மேற்கொண்டு நடத்தவிடுவதில்லை.

## அமெரிக்கா தரும் தடயங்கள்

இனி அமெரிக்கா 9/11 நிகழ்வுக்காகக் குற்றம் சாட்டுபவர்கள் குறித்து அமெரிக்க அறிக்கை கூறுபவற்றைப் பார்ப்போம்.

19 அரபு இளைஞர்கள் செய்த சதிதான் இந்த இரட்டைக் கோபுரங்களின் தகர்ப்பு. இவர்கள் அரபுக்கள். இதுதான் அமெரிக்காவின் அறுதியான வாதம். இதற்கு ஆதாரங்களாக அமெரிக்கா சொல்பவை,

(அ) அரபு மொழியிலான பறக்கும் குறிப்புக்கள். (Flight Manual) பறக்கும் குறிப்பைப் பார்த்துப் பாடம் கற்பவர்களா இத்துணை பெரிய சாகசத்தை நிகழ்த்தினார்கள்.?

(ஆ) போஸ்டன் விமான தளத்தில் இந்த அரபுக்கள் விட்டுச் சென்ற வாடகைக்காரில் கிடந்த திருக்குர்ஆன் பிரதி! குற்றவாளிகள் குற்றத்தைச் செய்தவர்கள் திருக்குர்ஆனோடு சம்மந்தப் பட்டவர்கள் எனக்காட்டிட விரும்புவார்களா? அவர்கள் திருக்குர்ஆனோடு சம்மந்தப்பட்டவர்கள் என்பது அமெரிக்காவின் நீண்டகால சதிகளுள் ஒன்று.

(இ) வேகமாகப் பறந்து இந்த இரட்டைக் கோபுரங்களையும் தகர்த்து எரிந்து வீழ்ந்த விமானத்திலிருந்து பறந்து பாய்ந்து வந்த அரபு மொழி பாஸ்போட் இதேபோன்ற பாஸ்போர்ட் கதை ஒன்றைத்தான் மாட்டிரிட் என்ற இடத்தில் நடந்த குண்டு வெடிப்பிலும் மேலைநாட்டு மீடியாக்கள் கடைப்பிடித்தன.

மேலே சொன்ன ஆதாரங்களெல்லாம் 9/11 கோபுரங்களை தகர்த்தவர்கள் அரபுக்கள். அதனால் முஸ்லிம்கள் என்பதற்கான ஆதாரங்களாம்! அமெரிக்கா கூறுகின்றது.

கேள்வரகில் நெய் வடிகின்றது என்றால்


vaigarai velicham official

கேட்பவர்களின் மூளை ஏன் வேலை செய்ய வில்லை என்பது போலத்தான் மொத்த கதையும் அதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன.

110 அடுக்கு மாடிகள் 1300 மீட்டர் உயரம். இத்துணை பிரமாண்டமான கட்டடத்தைத் தாங்கி நின்ற இரும்புகளை உருக்கி வீழ்த்திய விமானங்களிலிருந்து ஒரு அரபு மொழி பாஸ்போர்ட் வெளியே குதித்து வந்தது. இதை இந்த உலகம் அட்டியின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்! நம்பவேண்டும்! என்கின்றது அமெரிக்கா.

அதேபோல் அமெரிக்காவின் வான்வெளியை அரபுக்கள் - அதிலும் இளைஞர்கள் - அதிலும் தீவிரவாதிகள் பயன்படுத்திட தாராளமாக அமெரிக்கா அனுமதித்தது என்பதையும் நம்பிட வேண்டும் என்கின்றது அமெரிக்கா!

ஈராக்கின் வான்வெளியையும், அரபு நாடுகளின் பெரும்பகுதி வான் வெளியையும் பத்து ஆண்டுகளுக்கு மேல் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அமெரிக்கா, தனது வான் வெளியை அரபு நாட்டுத் தீவிரவாதிகளுக்குத் திறந்துவிட்டிருந்ததாம். நம்பித்தான் ஆக வேண்டுமாம்; நாம்.

இதில் பிரிதோர் வேதனை என்னவெனில் மார்க்க விஷயங்களில் எதற்கெடுத்தாலும் ஆதாரங்கள் கேட்கும் உலமா பெருமக்கள், முஸ்லிம்களை இடைவிடாமல் தவறு கண்டு பிடித்து விமர்சிக்கும் முஸ்லிம் குதர்க்கவாதிகள் - வாதப் பிரதிவாதங்களை வைத்தே வாழ்க்கை நடத்தும் நாவுக்கரசர்கள் - உண்மையைத் துருவி துருவி ஆய்ந்து கண்டுபிடிக்கும் நம்பர் 1 புலனாய்வு பத்திரிகைகள் - தனிப் பத்திரிகை யாளர்கள், இவர்களில் யாரும் இந்த அரசு தரப்பு விசாரணைக் குழு அறிக்கையிலுள்ள ஓட்டைகளைக் கண்டுபிடித்து உண்மையை உலகுக்குச் சொல்லிட முன்வந்திடவில்லை.

இவர்களெல்லாம் அதாவது மிகச் சாதாரண விஷயங்களிலெல்லாம் மெத்த மேதாவிகளாகக் காட்டிக் கொள்பவர்கள் இந்த விவகாரத்தில் அமெரிக்கா நம்பச் (9/11) சொல்வதை அப்படியே நம்பிடுவோம் என்றே நடந்து கொண்டார்கள்.

இதில் அமெரிக்காவுக்கு தலையசைத்தே பழகிப்போய்விட்ட அரபு நாட்டுத் தலைவர்கள் (ஆட்சியாளர்கள்) அப்படியே அமெரிக்க செய்திகளுக்குத் தலையசைத்ததில் ஆச்சர்யம் ஏதுமில்லை.

உண்மையை உண்மையாகத் தேடுபவர்களின் மனதுதான் கொதித்துக் கொண்டிருக்கின்றது.

உலகில் நடுநிலையாளர்கள் எனப் பேசிடு வோர் சிலரும், விமர்சன நோக்குடையவர்கள் எனப் பீற்றிக்கொள்பவர்களும், புலனாய்வு பத்திரிகையாளர்களும் தட்டிக் கேட்கவில்லை என்பது மட்டு மல்ல, அவர்கள் அமெரிக்காவின் அதிகாரப்பூர்வமான பொய்யை எப்படி யெல்லாம் பரப்பிட முடியுமோ அப்படி யெல்லாம் பரப்பினார்கள்.

மிகக்குறைவான பௌதீகவியலாளர்கள், கட்டடக் கலை என்ஜினீயர்கள், கணினி என்ஜினீ யர்கள், விமானங்கள் பற்றிய விவகாரங்களில் கைதேர்ந்த விஞ்ஞானிகள் இவர்களில் சிலர்தாம் ஒன்றாய்ச் சேர்ந்து சில ஆய்வுகளை மேற் கொண்டார்கள். இவர்கள் அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சார்ந்தவர்கள். இவர்கள்தான் அமெரிக்கா ஆணவத்தோடு நிமிர்ந்து நின்று சொன்ன பொய்களை தோலுரித்துக் காட்டினர்கள்.)

பல இணையதளங்கள், தாங்களாகவே ஓர் ஆர்வத்தை வளர்த்துக்கொண்டு 9/11 இல் உண்மையிலேயே என்னதான் நடந்தது என்பதை அறிந்திட வலிந்து வலிந்து ஆய்வுகளை நடத்தினார்கள்.

இந்த இணைய தளங்கள் அமெரிக்காவின் அதிகாரப்பூர்வமான பொய்களுக்கு எதிராகக் கிளர்ந்தன. இவர்களின் முகத்திரையைக் கிழித்து அவர்களின் உண்மை முகத்தை உலகுக்கு உணர்த்தியவையும் இவைதான்.

அமெரிக்கர்கள் உண்மையை ஒற்றுக்கொள்ள மறுப்பதற்கு அவர்கள் சொன்ன ஒரேபதில் “அமெரிக்காவிற்கு எதிரான மிகப்பெரிய சதிகளின் ஒரு பகுதியே 9/11. அறிவியல் ஆதாரங்களை அமெரிக்காவின் முன்னே வைத்தபோது .

அமெரிக்கா ‘சதி’ ‘சதி’ என்ற கூப்பாட்டை போட்டே உண்மையை புறந்தள்ளியது. அமெரிக் காவிலும் சில குழுக்கள் உண்மையைக் கண்டு பிடிக்க முயற்சி செய்தன. ஆனால் அவற்றை அமெரிக்கா தடுத்துவிட்டது. FEMA என்ற விஞ்ஞானிகளின் அறிக்கையை, முஸ்லிம்கள் குற்றவாளிகள் அல்ல எனச் சொன்னதால் அந்த அறிக்கையைத் தடை செய்துவிட்டது.

இதேபோல்தான் Science Commitee என்ற விசாரணைகுழுவின் அறிக்கையும் தடை செய்யப்பட்டது.

உண்மையில் ஒரு சதி முறையாக நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. அந்தச் சதி, அமெரிக்கா உலக முஸ்லிம்களுக்கெதிராகவும், இஸ்லாத்திற் கெதிராகவும் தீட்டிய சதி! இந்தச் சதி சந்தடி இல்லாமல் உலகெங்கும் நிறைவேறிக் கொண் டிருக்கின்றது. மக்கள் இனம்புரியாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். உண்மையிலேயே அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களைத் தகர்த்தவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றால், அமெரிக்கா குற்றம் சாட்டும் 19 அரபு இளைஞர்களையும் விட்டுவிட்டு அவர்கள் இவற்றை செய்யவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு விசாரணையைத் தொடங்க வேண்டும், தொடர வேண்டும்.

இதை அவசியம் செய்தாக வேண்டும். காரணம், அமெரிக்கர்களால் குற்றம் சுமத்தப் பட்ட ஐந்து பேர் உயிரோடு இருப்பது உண்மை என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அவர்கள் மொரோக்காவிலும், சவூதி அரேபியாவிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அமெரிக்காவின் விண்ணில் பறந்து சென்று விண்ணைத் தொட்டு நின்ற கட்டடங்களை மோதி தகர்த்தவர்கள், இன்னும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றால்

அதாவது அன்றே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டவர்களில் ஐந்து பேர் இன் றளவும் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள் என்றால் இந்த 19 அரபு முஸ்லிம்கள்தாம் அந்தக் கோபுரங்களைத் தகர்த்தார்கள் என்பது வடி கட்டின பொய் என்பதற்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்.

ஆனால் அமெரிக்காவோ கட்டடங்கள் தகர்க்கப்பட்டவுடனேயே இவர்கள்தாம் குற்றவாளிகள் என அறிவித்தது. தயாராக வைத்திருந்த அவர்களின் போட்டோக்களை ஊடகமெங்கும் காட்டியது.

அவர்களில் ஐந்துபேர் உயிரோடு இருக்கின் றார்கள் என்பது உண்மையாகும்போது இந்த நிகழ்வுகளில் அமெரிக்காவின் கூற்று உண்மையில்லை என்பதே உண்மை!

அமெரிக்காவின் கூற்று உண்மையில்லை என்கின்றபோது, அந்த 19 அரபுக்களும் தாமாகவே விடுவிக்கப்பட்டுவிடுவார்கள். உலகிலுள்ள எந்த நீதிமன்றத்தில் இந்த விசாரணை நடந்தாலும், இனிமேல் நடத்தப்பட்டாலும் இவர்கள் குற்றமற்றவர்கள் என்பது நிச்சயமாக நிரூபிக்கப்படும்?

இந்த 19 அரபு இளைஞர்களுக்கும் இந்தக் கட்டடங்களின் தகர்ப்பிற்கும் தொடர்பு இல்லை என்றாகும் போது, இவர்களை அனுப்பியதாகக் குற்றம் சாட்டப்படும் அல்காய்தாவுக்கும் இந்த நிகழ்வுக்கும் சம்பந்தமில்லை என்ற உண்மை சுயப்பிரசவமாக வெளியே வரும்.

இவை அனைத்தும் 9/11 தாக்குதல்களுக்கு முஸ்லிம்கள் எந்த வகையிலும் காரணமில்லை என்பதை எடுத்துச் சொல்லும்.

ஆகவே முஸ்லிம்கள் மீது அமெரிக்கா இப்போது நடத்திக் கொண்டிருக்கும் போர் ஆதாரமற்றது. அநியாயமானது. அடாவடித் தனமானது!

## அமெரிக்காவின் இடைவிடாப் பிரச்சாரங்கள்

உண்மை இவ்வாறிருக்க இந்த 9/11ஐ பற்றி பல நூறு நூல்கள் - கட்டுரைகள் - ஆய்வறிக்கைகள் இவையெல்லாம் வந்துவிட்டன.

இப்படி வந்த நூல்கள் அறிக்கைகள் அனைத்தும் அமெரிக்கா சொன்ன பொய்களை மையமாகவே கொண்டு வந்தன.

அவை வேறு பக்கம் மக்கள் தங்கள் சிந்தனை யைத் திருப்பிடாமல் பார்த்துக் கொண்டன.

இந்த நூல்கள் ஆய்வுகள் செய்திகள் இவையெல்லாம் நடுநிலையானவை என்பதைக் காட்டிக்கொள்ள சில இடங்களில் அமெரிக்க அதிபர் புஷ்ஷை சற்று சாடிக்கொண்டன. இவற்றில் இன்னும் சில அமெரிக்காவின் உளவுத்துறை உறங்கிவிட்டது என உளவுத் துறையைக் குற்றம் சாட்டும். ஆனாலும் முஸ்லிம்கள் மீதே பழியைச் சுமத்தும்.

முஸ்லிம் தீவிரவாதிகள் தாம் 9/11 நாச வேலைகளைச் செய்தன என முடிக்கும். இந்தப் பாணியில் வெளி வந்த சில ஆங்கில நூல்கள் திரைப்படங்கள் ஆகியவற்றை இங்கே பட்டிய லிடுகின்றோம்.

ஃபாரன் ஹீட் 9/11' என்ற திரைப்படம், இதனை மைக்கேல் மூர் என்பவர்தாம் தயாரித் திருந்தார்.


vaigarai velicham official

இந்தப் படம் புஷ்ஷை குறை கண்ட அல்லது புஷ்ஷுக்கு எதிரான திரைப்படம் என்ற பெயரோடு வெளி வந்தது. ஆனால், அதுவும் உண்மையைச் சொல்லவில்லை உலகுக்கு.

அதுவும் பழியை முஸ்லிம்கள் மீதே போட்டது.

அமெரிக்காவின் அதிசயமான பயிற்சி பெற்ற உளவுத்துறை, உருத் தெரியாமல் உருகிப் போனார்கள் எனக்கூறுபவர்களில் ஐந்து பேர் உயிரோடு இருக்கின்றார்கள் என்ற உண்மை ஊர்ஜிதப்படுத்தபட்ட பின்னரும் இந்தத் திரைப்படம் முஸ்லிம்களையே குறை காண் கின்றது. அமெரிக்காவின் அதிகாரப்பூர்மான பொய்யை மக்கள் மன்றத்தில் பதிய வைக் கின்றது.

இதில் வேதனையும் வேடிக்கையும் என்ன வெனில் இந்தத் திரைப்படத்திற்கு அமோகமான வரவேற்பு. உண்மையைக் கண்டுபிடிக்க விரும்பாத ஏன், உண்மையின் ஓரங்களைக்கூட தொடாத ஒரு திரைப்படத்திற்கு இத்தனை விளம்பரம்! வசூல்! ஆதரவு!

புஷ்ஷை கண்டிப்பதைப்போல் சவூதி மன்னர் களைக் கண்டிப்பதும் பின்லேடனை வில்லனாக சித்தரிப்பதும் மக்களை உண்மையிலிருந்து வெகுதூரத்திற்கே இழுத்துச் செல்லும். இந்தத் திரைப்படத்தின் திரைக் கதை வசனம் ஆங்கிலத்தில் நூலாக வந்து அமோகமாக விற்பனையானது.

இந்தப் பொய்யைப் பரப்பிட அமெரிக்கா கோடிக்கணக்கில் பணத்தை செலவிட்டு வருகின்றது. அமெரிக்காவின் அரசு பொய்களைப் பரப்பிடுவோருக்கு மனங்குளிர பணம் தருகிறது.

திரைப்படத் துறையைத் தொடர்ந்து இணைய தளங்களையும் மிகையாகவே பயன்படுத்தி வருகின்றது அமெரிக்கா!

அதிசயமான பெயர்கள் இந்தப் பொய்யைப் பரப்பும் இணையதளங்களுக்கு. ‘பால்தாம்சன்’ என்பவரின் இணைய தளத்தை இதற்கோர் எடுத்துக்காட்டாக எடுத்துச் சொல்லலாம். இவர் தனது இணைய தளத்தை “Co-operative research” எனப் பெருமையோடு அழைத்துக் கொள்கின்றார். அதாவது பல ஆராய்ச்சியாளர்கள் ஒன்றாய் கலந்து நடத்திய கூட்டு ஆராய்ச்சி என்பது பொருள்.

இந்த ஆராய்ச்சியாளர்களெல்லாம் கண்டெடுத்த வியத்தகு ஆராய்ச்சி என்னவென நாம் தேடினால் அதுவும்

அமெரிக்காவின் அதிகாரப்பூர்வமான பொய்யின் இன்னொரு வடிவமாகவே இருந்தது.

பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் இவற்றில் வந்த தகவல்கள் அதாவது பொய்கள் இவற்றின் தொகுப்பாகவே இந்த ஆராய்ச்சி முடிவுகள் இருந்தன.

திரைப்படம், இணையதளம் இவற்றைத் தொடர்ந்து வெளிவந்த நூல்கள். இவற்றை எண்ணி முடியாது. படித்து மாளாது.

இவற்றில் பல ஓய்வு பெற்ற அரசியல்வாதி களும் அரசியல் விமர்சகர்களும் எழுதியவை.

இவர்கள் தாங்கள் ஓய்ந்த காலத்தில் தங்களால் இயன்றதை முஸ்லிம்களுக்கு எதிராகவும், இஸ்லாத்திற்கெதிராகவும் செய்துவருகின்றார்கள். அதாவது ஒவ்வொரு அமெரிக்கனின் மனதிலும் தன் வாழ்நாளில் ஒரு சிறு துரும்பையேனும் முஸ்லிம்களுக்கெதிராக அல்லது இஸ்லாத்திற்கெதிராக எடுத்துப் போட்டிட வேண்டும் என்ற எண்ணம் வலுவாக உறைந்துள்ளது என்பதையே இந்த நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த வகையில் உலக அரங்கில் மிகவும் அதிமாக விற்பனையான நூல் தாம் “Against All Enemies” அதாவது “எல்லா எதிரிகளுக்கும் எதிராக” என்ற நூல். இதனை எழுதியவர் ரிச்சர்டு கிளார்க் என்பவர். வெளி யிட்டவர்கள் சிம்மோன் சிக்சத் (2004)

இவர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும், இஸ்லாத்தை தீவிரவாதம் என்றும், முஸ்லிம் களை தீவிரவாதிகள் எனவும் பிரச்சாரம் செய்து ஓய்ந்தவர். பில் கிளிண்டனுக்கும், புஷ்ஷுக்கும் அல்காயிதா என்ற ஒரு பொது எதிரியைக் காண்டுபிடித்துக்கொடுத்ததே இவர்தான் எனப் பேசப்படுகின்றது. உலக அரங்கில் பிரிதொரு ஆங்கில நூல் பரபரப்பாக விற்பனையாகி வருகின்றது. அதன் பெயர் “An end to evil” அதாவது ஒரு “தீமையின் தீர்வு” இதை எழுதியவர்கள், “டேவிட் ஃப்பாரம், சிரச்சர்ட் பெர்ல்’ என இருவர். இரட்டை எழுத்தாளர்களின் இந்த நூல் மிகவும் பரபரப்பாக விற்பனையானது. இந்த நூலை ‘Shrill Book’ ‘வியப்பூட்டும் நூல்’ என்றே அழைப்பார்கள் ‘ரேண்டம் ஹவுஸ்’ என்ற வெளியீட்டாளர்கள் இந்த நூலை 2003ல் வெளியிட்டார்கள்.

இந்த நூல் 9/11 நிகழ்வுகளுக்கான பழியை முஸ்லிம்கள் மீது போடுவதோடு, தீவிரவாதத் திற்கு அதாவது முஸ்லிம்களுக்கும் இஸ்லாத் திற்கும் எதிரான அமெரிக்காவின் போர் எப்படி எப்படியெல்லாம் இருந்திட வேண்டும் என்பதற்கான திட்டத்தையும் வகுத்துத் தருகின்றது. அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஈரான், சிரியா, சவூதி அரேபியா ஆகியவற்றில் ஆட்சி மாற்றங்களைக் கொண்டு வந்திட வேண்டும் என அறைகூவல் விடுகின்றது.

ஆட்சி மாற்றம் என்பதன் பொருள் (அமெரிக்க அகராதியில்) அமெரிக்காவின் ஆட்களை - கைக்கூலிகளை ஆட்சியிலே அமர்த்திட வேண்டும் என்பதாகும்.

இப்படி அரபு நாடுகளில் ஆட்சி மாற்றங் களைக் கொண்டு வந்த பின்னர், அடக்கி அமெரிக் காவின் கிடுக்கிப் பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டுமாம்.

அமெரிக்கா இத்தோடு நிற்கக்கூடாதாம். ஐக்கிய நாடுகள் சபைக்கு அமெரிக்கா தந்து வரும் உதவிகளை நிறுத்திவிட்டு, அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் அவையிலிருந்து வெளியே வந்துவிட வேண்டுமாம். கூறுகின்றார்கள் இந்த இரட்டை எழுத்தாளர்கள். இவர்கள் இன்னும் கூறுகின்றார்கள்.

ஃபலஸ்தீனர்களுக்கு தன்னாட்சி சுய ஆட்சி அமைத்துத் தருவோம் என்ற பேச்சை அமெரிக்கா பேசக் கூடாதாம். ஃபலஸ்தீனர்களை - ஃபலஸ்தீன முஸ்லிம்களை அங்கீகரிப்பதுபோல் அமெரிக்கா பாசாங்கு கூட செய்யக்கூடாதாம். கூறுகின்றார்கள் இந்த இரட்டை எழுத்தாளர்கள்.

இதில் ஒரு முக்கிய விவகாரத்தை உலக மக்கள் கவனிக்க வேண்டும். அமெரிக்கா, ஃபலஸ் தீனில் ஒரு பச்சைத் துரோகத்தை அரங்கேற்றி வருகின்றது.

அஃது ஃபலஸ்தீனர்கள் எந்த விதத்திலும் தங்களை பலப்படுத்திக் கொள்ளாமல் பார்த்துக் கொள்கின்றது. அதே நேரத்தில் யூதர்களுக்கு - இஸ்ராயீலுக்கு - எல்லாவிதமான உதவிகளையும் செய்து வருகின்றது. இஸ்ரேல் அத்துமீறி அப்பாவி ஃபலஸ்தீனர்களைக் கொலை செய்யும்போது அமெரிக்கா தவறாமல் கண்டிக்கின்றது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையில் இதற்கான கண்டன தீர்மானங்கள் வந்தால் தவறாமல் இதே அமெரிக்கா தனது வீட்டோ என்ற ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறுத்தி விடுகின்றது. இதனால் தான் உலக அரங்கில் இன்றளவும் இஸ்ராயீல் அநியாயங்களை அச்சமின்றி அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவின் உதவிகள் தொடர்ந்து இஸ்ராயீலுக்கு கிடைக்காமலிருந்திருந்தால் ஃபலஸ்தீனில் இத்தனை முஸ்லிம்கள் இறந்திருக்க மாட்டார்கள். அகதிகள் முகாம்களிலேயே அவர்கள் அழிக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.

இப்படி அமெரிக்கா ஃபலஸ்தீன முஸ்லிம் களை நம்ப வைத்து ஏமாற்றி வருகின்றது. அதுபோதாது என்கின்றார்கள் அமெரிக்காவின் இரட்டை எழுத்தாளர்கள் டேவிட் ஃபாரமும், ரிச்சர்ட் பெர்லியும். நேரடியாகவே இனி அமெரிக்கா எந்த தயக்கமுமின்றி இஸ்ராயீலர் களை ஆதரிக்க வேண்டும். ஃபலஸ்தீனர்களை அதாவது அந்த மண்ணின் பூர்வீக குடிகளை எதிர்க்க வேண்டுமாம். இப்படி அமெரிக்கா விலிருந்து வெளிவரும் எல்லா நூல்களையும் அவற்றைப் பற்றிய விமர்சனங்களையும் நாம் இங்கே பட்டியலிடுவது மிகவும் கடினம். அவற்றின் பொதுத் தன்மைகளையே குறிப்பிடு கின்றோம்.

அமெரிக்காவிலிருந்தும் உலகின் இதர பகுதிகளிலிருந்தும் வெளிவரும் நூல்கள் அமெரிக்காவின் அரசு துறையிலிருந்து வரும் கண்டுபிடிப்புகளையே 9/11க்கு ஆதாரமாகக் காட்டி வருகின்றன. அவற்றுள் US House and Senate Panel Report 2003. அதாவது அமெரிக் காவின் மக்களவை மற்றும் மாநிலங்கள் அவை யின் அறிக்கை. The Report of National Commission on Terrorist Attack அதாவது தீவிரவாத தாக்குதல் பற்றிய அமெரிக்காவின் தேசிய விசாரணைக் குழுவின் அறிக்கை ஆகியன பிரபல்யமானவை.

அமெரிக்க அரசு இதுவரை நியமித்த எந்த விசாரணைக் குழுவையும் சுதந்திரமாகச் செயல்பட விடவில்லை. அவற்றைக் கண்காணித் துக் கொண்டே இருந்தது. உண்மை வெளிப் பட்டுவிடக் கூடாது என்ற பயம் அதற்கு.

அமெரிக்கா பல்வேறு ஊடகங்கள் வழியாகவும் தொடர்ந்து பரப்பி வரும் பொய்களால் நாம் உண்மையைக் கண்டு கொள்ளவே முடியவில்லை.

இதனால் 9/11 அன்று உயிரிழந்தவர்களின் உயிரைப் பறித்தவர்கள் யார் என்பது தெரியாமலே போய்விட்டது.


vaigarai velicham official

உண்மையைக் கண்டுபிடித்துச் சொல்வது என்பது அமெரிக்காவையே குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதாகும். அதனை இப்போது யாரும் செய்திட முன்வந்திட மாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறலாம். காரணம் அமெரிக்கா அவர்களை விட்டு வைக்காது. பிரிட்டன் நாட்டைச் சார்ந்தவர்கள் இந்த வகையில் ஒரு விஞ்ஞானியையே கொலை செய்தார்கள்.

இன்றளவும் இது குறித்த ஆயிரக்கணக்கான வினாக்கள் விடையின்றி தவித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் அமெரிக்காவின் தரப்பில் எழுப்பப் படும் ஒரே வினா, அமெரிக்காவின் உளவுத்துறை ஏன் அந்த தீவிர வாதிகளைத் தடுக்கவில்லை என்பது தான்.

உண்மையில் கேட்கப்பட வேண்டிய வினாக்கள் முற்றிலும் வேறானவை. அவற்றில் சில:-

அந்த இரண்டு கட்டடங்களும் இடிக்கப் பட்டவுடன் அந்த இடிபாடுகளை அவசர அவசரமாக அகற்றிட அனுமதித்தது யார்? ஆணை பிறப்பித்தது யார்?

தடயவியல் வல்லுநர்களின் பார்வைக்கு கிடைக்காமல் அவற்றைத் தடுத்தவர்கள் யார்?

அடுத்து மிகவும் முக்கியமான கேள்வி,

இந்த உலக வர்த்தக தளங்களை இடிப்பதால் பண ரீதியாக இலாபம் அடைந்தவர்கள் யார் யார்?

அமெரிக்கா முஸ்லிம் உலகில் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்திட முயற்சி செய்து கொண்டி ருக்கின்றது. அதற்காக ஒரு பெரும் பீதியையும், பதற்றத்தையும் முஸ்லிம் உலகம் முழுவதும் பரப்பிட வேண்டும். பின்னர் இந்தப் பயம் - பீதி இவற்றைக் கொண்டே முஸ்லிம் நாடுகளின் மேல் போர் தொடுத்திட வேண்டும். அவற்றின் இயற்கை வளங்களைக் கைப்பற்றிட வேண்டும்.

முஸ்லிம் உலகை அடக்கி ஆள வேண்டும். என்பது அமெரிக்காவின் நீண்ட காலத்திட்டம், அவா.. இந்த திட்டத்தை நிறைவேற்றிட இந்த உலக வர்த்தக மையத்தின் தகர்ப்பு பயன் பட்டிருக்கின்றதா?

இன்றைய சூழலில் இன்னொரு வினாவும் விரைந்து மக்கள் மனதை ஆக்கிரமித்துக் கொண்டு வருகின்றது. அது அமெரிக்காவின் எந்தெந்த வியாபார நிறுவனங்கள் இந்த போர்கள், போர்களின் பின்னணியில் விடப்படும் ஒப்பந்தங்கள் இவற்றால் பலனடைகின்றன? இந்த வினாவுக்கு விடைகிடைத்தால் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும். இந்த நிறுவனங்கள் பலவற்றில் அமெரிக்காவின் முன்னாள் இந்நாள் அதிபர்களுக்கும் குடியரசு தலைவர்களுக்கும் பங்குண்டா?

இவற்றில் ஒரு வினாவிற்கு தெளிவாக விடைகிடைத்துவிட்டது.

அது, அமெரிக்கா முஸ்லிம் உலகின் மீதும் இஸ்லாத்தின் மீதும் தொடுத்திட விரும்பிய போரை தொடுத்திட இந்த நிகழ்வு பயன் படுத்தப்பட்டுள்ளது.

அல்லது அமெரிக்காவின் சதி அரங்கேறி யுள்ளது. அமெரிக்கர்கள் சொல்பவை எதுவும் உண்மையல்ல என்பது அமெரிக்கா ஈராக்கில் அடியெடுத்து வைத்த அடுத்த நாளே உலகுக்கு உணர்த்தப்பட்டுவிட்டது.

இஸ்லாமிய உலகின் மீது ஒரு பெரும் போரைத் தொடுக்க வேண்டும் என்பதற்கா கத்தான் அமெரிக்கா தனது இரண்டு கட்டடங் களையும் தகர்த்தது என்ற உண்மை பின்வாசல் வழியாக வெளியேவந்துவிட்டது. இன்னொரு நிகழ்வின் மூலம் அதாவது, இந்தக் கட்டடங்கள் இடிக்கப்பட்டவுடன், அமெரிக்காவில் ஆயுதங் களை உற்பத்தி செய்துவிற்பனை செய்யும் தனியார் நிறுவனங்களின் பங்குகளின் விற்பனை கிடுகிடுவென உயர்ந்தது.

லாக்கீட் மார்ட்டின் (Lock Heed Martin) என்பதுதான் அமெரிக்காவின் மிகப்பெரிய ஆயுத உற்பத்தி வியாபார நிறுவனம். அமெரிக்காவின் இரண்டு கட்டடங்களும் இடிக்கப்பட்ட 15 நாள்களுக்குள் இந்தக் கம்பெனி பங்குகளின் விலை மூன்று மடங்கு உயர்ந்துள்ளது.

அதாவது இந்த இரட்டைக் கோபுரங்கள் இடிக்கப்பட்டவுடன் அமெரிக்கர்கள் இனி போர்தான் வரப்போகின்றது என்பதை எதிர் பார்த்திருக்கின்றார்கள்; அல்லது ஏற்கனவே அறிந்திருக்கின்றார்கள். அதனால் இனி நாம் முதலீடு செய்திட சிறந்த இடம் ஆயுதங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனங்கள் தாம் என முடிவு செய்திருக்கின்றார்கள்.

இதேபோல் 9/11 நடந்தவுடன் இலாப

மடைந்த இதர கம்பெனிகள் Northrop Grumnan நார்த்ராப் குரு மான்கம்பெனி, ரேதியான் RAYTHEON கம்பெனி போன்றவையாகும்.

இவையனைத்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்து விற்பவையாகும்.

அமெரிக்காவின் அரசு நடத்தும் தீவிரவாதம் அமெரிக்க ஆயுத நிறுவனங்களுக்கு பெருமளவில் இலாபம் தருகின்றது.

அமெரிக்காவின் இந்தச் செயல்களை நன்றாக அறிந்தவர்கள் இப்படிப்பேசிக் கொள்கின்றார் களாம்:-

"State Crime pays, and pays handsomely" அரசு செய்யும் தீவிரவாதம். அது மிகவும் இலாபகரமானது.

## முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்

அமெரிக்காவின் பிரச்சாரம் முறியடிக்கப் பட்டாக வேண்டும். இதனை வேறுயாரும் செய்ய முன்வரமாட்டார்கள். முஸ்லிம்கள்தாம் இதனை செய்திட முன் வந்திட வேண்டும்.

தனிப்பட்ட முஸ்லிம்கள் இவற்றை தங்கள் நண்பர்களிடம், அண்டைவீட்டாரிடம், இன்னும் சாலையோரங்களிலும் வேலை செய்யும் இடங்களிலும் எடுத்துச் சொல்லிட வேண்டும்.

நாம் மேலே ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட அறிக்கை 567 பக்கங்களைக் கொண்டது. எனினும் இதுபோன்ற ஆய்வறிக்கைகளை விசாரணை அறிக்கைகளை நாம் படித்திட முன்வந்திட வேண்டும்.

அவற்றை ஆய்ந்து உண்மையை வெளிச்சம் போட்டு உலகுக்கு உணர்த்திட வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் தனிப்பட்ட முறையில் நாம் இதற்கு என்ன செய்தோம் என்பதைப் பற்றி ஆராய்ந்திட வேண்டும். தன்னால் இயன்றதையெல்லாம் செய்திட வேண்டும். அமெரிக்கா கோடிக்கணக்கான டாலர்கள் செலவில் நடத்தும் பொய்ப்பிரச்சாரத்தை நாம் வெறும் கையோடு எதிர்கொண்டாக வேண்டிய கட்டாயம். இதில் நாம் தொய்வோ தளர்வோ காட்டிடக் கூடாது. இறைவன் கூறுகின்றான்:

"மனிதர்கள் (தங்கள் தீய நடத்தை யைக் கொண்டு) தங்களை மாற்றிக் கொள்ளாத வரையில் நிச்சயமாக அல்லாஹ்வும் (அவர்களுக்குப் புரிந்த அருளை) மாற்றி விடுவதில்லை. அல்குர்ஆன் 13:11

குறைந்தபட்சம் இவற்றை வரலா றாகவாவது பதித்திட வேண்டும். இன்ஷாஅல்லாஹ் முஸ்லிம்கள் இதனை செய்திட முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

சத்தியம் வெல்லும் அசத்தியம் நிச்சயமாக அழியும். இதையே இறைவனும் வாக்களிக் கின்றான்:

"அல்லாஹ்வுடைய பிரகாசத்தை தம் வாய்களால் (ஊதி) அணைத்துவிடலாம் என்று இவர்கள் கருதுகின்றனர். நிராகரிப்பவர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தன்னுடைய பிரகாசத்தை (உலகெங்கும் ஒளி வீசும்படி) பூர்த்தியாகவே ஆக்கி வைப்பான். முஷ்ரிக்கள் வெறுத்த போதிலும் மற்ற எல்லா மார்க்கங் களை வெற்றி பெறும் பொருட்டு. அவனே தன்னு டைய தூதரை நேரான வழியைக் கொண்டும் உண்மையான மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பிவைத்தான். (அல்குர்ஆன் 61:8,9)

Source : Impact International, London, Oct & Nov: 2004. 9/11 Commission Report Authorised Edition. Articles and Analysis By Abdul Wahid Hameed, Shahid Alam/ T.B. Irving, Akilesh Mithal.

- MGM





vaigarai velicham official



# யுவானி ரிட்லி

## சிறப்புக் கட்டுரை

**"இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள்"** என்ற நூல் என்று என்னிடம் பலரும் ஒரு கேள்வியை முன் வைக்கின்றார்கள். அது இஸ்லாத்தை நோக்கிய எனது பயணத்தின் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியது எது?

சற்றும் தயங்காமல், தாமதிக்காமல் நான் ஒரு பதிலை எடுத்த எடுப்பிலேயே சொல்வேன். திருக்குர்ஆன், முஹம்மத் (ஸல்) அவர்கள்.

இன்றைக்கு இந்த உலகிலிருக்கும் எந்த ஆளுமையும் என்னிடத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்திடும் ஆற்றலைப் பெற்றதாக இல்லை.

பிரிட்டனைப் போலவே அமெரிக்காவில் அல்லது ஐரோப்பாவில் என்னைக் கவர்ந்திடும் அளவில் சிந்தனை பலம் பெற்றவர்கள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

புரட்சிகரமான இஸ்லாமிய சிந்தனையாளர்கள் எவரையும், ஆண்களையோ, பெண்களையோ இந்த நாடுகளில் நான் பார்க்கவில்லை.

ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அது, பலர் தங்களை ஆலிம் என்றும், ஷேஹ் என்றும் அழைத்துக் கொள்கின்றார்கள். அதேபோல் டாலர்களுக்காக (பணத்திற்காக) அலையும் ஷேஹ்களும், இமாம்களுமிருக்கின்றார்கள். சரியான விலை கொடுத்தால் அரசாங்கம் என்னவெல்லாம் செய்யச் சொல்லுகின்றதோ அதையெல்லாம் தாராளமாகச் செய்வார்கள்.

நான், திருக்குர்ஆனின் போதனைகளாலும், அதனை அப்படியே எடுத்து வாழ்ந்த அன்றைய ஆண்கள், பெண்கள், இவர்களாலும் கவரப்பெற்றேன், இஸ்லாத்தை ஏற்றேன்.

ஆனால், திருக்குர்ஆனுக்கு அடுத்தாற்போல் என்னை கவர்ந்த ஒரு நூல் உண்டென்றால், அது இஸ்லாமிய எழுச்சியின் "மைல்கற்கள்"தான்.

அதேபோல் இந்த நூலின் ஆசிரியராலும் கவரப்பெற்றேன். அவர் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருப்பார், ஜெமால் அப்துல் நாசர் என்ற கொடுங்கோலன் இல்லாதிருந்திருந்தால்.

ஆமாம்! இங்கே நான் ஷஹீத் செய்யித் குதூப் அவர்களைத்தான் குறிப்பிடுகின்றேன்.

செய்யீத் குதூப் ஷஹீத் அவர்கள் இஹ்வானுள் முஸ்லிமூன் இயக்கத்தின் தளகர்த்தர். செய்யீத் குதூப் அவர்கள், ஆயிரக் கணக்கான இளைஞர்களையும், முதியவர்களையும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களையும் களத்தில் இறக்கி வேகமாகச் செயல்படச் செய்தவர், அன்று மட்டுமல்ல, இன்றும் அதை செய்து கொண்டிருக்கின்றார்கள், கபருஸ்தானில் படுத்துக்கொண்டே.

அறிவார்ந்த மேலை நாட்டு எழுத்தாளர்கள் இந்த உண்மையை ஒத்துக்கொள்கின்றார்கள்.

மூத்த எழுத்தாளர்கள், கடந்த 100 ஆண்டுகளில் இஸ்லாமிய உலகை செயற்களத்தை நோக்கி உந்தித் தள்ளிய ஒருவர் உண்டென்றால் செய்யீத் குதூப் அவர்கள்தாம், என்கின்றார்கள்.

செய்யீத் குதூப் அவர்கள், யாரும் விஞ்சிட இயலாத ஓர் இஸ்லாமிய ஒழுக்கசீலர், அறிவுச் சுடர்.

இஸ்லாமிய உலகின் அரசியல் சிந்தனைக்கும், இஸ்லாமிய உலகின் இயக்கத்திற்கும் அவர் ஆற்றியத் தொண்டு அவரை அறிஞர்களுள் ஓர் மாணிக்க மகுடமாக மாற்றிவிட்டது.

செய்யீத் குதூப் ஷஹீத் அவர்களின் நெஞ்சுரத்திற்கு எல்லையே இல்லை. ஜெமால் அப்துல் நாசர் (என்ற எகிப்தின் ஆட்சியாளர்) இஸ்லாமிய

இயக்கத்தைச் சார்ந்தவர்களை அடக்குமுறை யாலும், அளவிலா அச்சத்தாலும் பிடித்துக் கொண்டிருந்தபோது, இஸ்லாத்தை இறுக்க மாகப் பிடித்துக்கொண்டு அதிலேயே உறுதியாக, நிலைகுலையாமல் நின்றவர் செய்யீத் குதூப் அவர்கள்.

அவருடைய எண்ணங்களும், ஆர்த்தெழுந்த குரலும், எழுச்சியூட்டும் எழுத்துக்கும் வாள்களைவிட வலிமையானவை.

இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள் நூலை நான் படித்தபோது என்னுள் எழுந்த எழுச்சி சொல்லிமாளாது. எனக்கொரு தேசியம் இருக்கின்றது. அது, என்னுடைய இறை நம்பிக்கை அல்லாஹ்வை நம்பி வாழ்பவர்கள் வாழுமிடமெல்லாம் என் தேசம் என்பதை இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள் எனக்குக் கற்றுத் தந்தது. நான் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சிடக்கூடாது என்பதை இதே இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள் என்ற நூல் கற்றுத் தந்தது.

அந்த நூல் அலாதியான சக்தியைப் பெற்றது. அது செய்யீத் குதூப் அவர்களுக்கு ஷஹீத் என்ற வீர மரணத்தையே பெற்றுத் தந்தது. இந்த நூலைக் காரணங்காட்டித்தான், ஆகஸ்ட் 29,1966இல் அவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். அவர்கள் தூக்கிடப்படுவதிலிருந்து தன்னைக் காப்பாற்றி இருக்கலாம். நூலில் தான் வடித்தக் கருத்துகளை மறுத்திருந்தால், மன்னிப்புக் கேட்டிருந்தால். ஆனால், ஜமால் அப்துல் நாசரின் கொடுங்கோலுக்கு தலை சாய்ப்பதை அவர் ஏற்கவில்லை. மறுத்தார் சமருக்கு நின்றார்.

ஏவிவிடப்பட்ட அத்தனை குரூரங்களையும் சகித்தார். நாசர் கட்டவிழ்த்திட்ட சித்திர வதைகள், அவரை கிஞ்சிற்றும் சிரம் தாழ்த்திட செய்திடவில்லை. அவருடைய உறுதிக்கு முன்னால் தவிடுபொடியானது. மரணமும் அவரை மண்டியிட வைத்திடும் வலுவைப் பெற்றிருக்கவில்லை.

இஸ்லாம் மாற்றங்களை நாடுகின்றது என்ற உண்மையையும் - இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள் - எனக்குக் கற்றுத் தந்தது.

ஆனால்அவரை நம்மை குறை சொல்பவர் களும், குத்திக்காட்டு பவர்களும் இட்டுக்கட்டிய புனைந்துரைகளுக்கு அளவே இல்லை.

செய்யீத் குதூப் அவர்கள் பழமைவாதி என்றும் அவர்தான் கொண்ட கொள்கை என்ற சிறைக்குள் சிக்கிக்கொண்டவர் என்றும், பழைய நம்பிக்கையை பற்றிப் பிடிப்பவர்கள் என்றும் வசைபாடினாலும், அவர் வீர மரணத்தை அடைந்து 40 ஆண்டுகளுக்குப் பின்னரும் இஸ்லாமிய எழுச்சியை முஸ்லிம் உலகெங்கும் இன்றைக்கும் ஏற்படுத்திக் கொண்டிருப்பவர். இன்றைக்கும் பேசப்படுபவர், பின்பற்றப்படுபவர்.

ஷஹீத் செய்யீத் குதூப் அவர்கள் 24 நூல்களை யாத்துள்ளார்கள். அதில் உலகப் புகழ்பெற்ற 30 தொகுதி திருக்குர்ஆனின் நிழலில் என்பதும் அடங்கும்.

இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள் என்ற நூலை ஆங்கிலத்தில் தந்தவர்களுக்கு நன்றி! ஏனெனில் நான் அதைப் படிக்க ஏதுவாக இருந்தது. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு. அதற்காக நான் யுனைடெட் கிங்டம் என்ற ஆங்கில நாட்டில் இயங்கும் “மக்தபா” என்ற நூல் வெளியீட்டாளர்களுக்கு நன்றி சொல்வேன்.

பிரிட்டன் நாட்டில் சுழற்சியில் இருக்கும் மொழிபெயர்ப்பு பல பின்னிணைப்புகளைக் கொண்டது. அது ஆராய்ச்சியாளர்களுக்கு உதவி செய்யும், இன்னும் அதிகமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு!

ஆங்கில நாட்டின் ஆராய்ச்சியாளர்களுக்கும் இஸ்லாத்தை விமர்சிப்பவர்களுக்கும் இந்த நூலை தாராளமாகத் தந்தேன். அவர்களிடம் சிந்தனை மாற்றங்கள் பல ஏற்பட்டதைப் பார்க்க முடிகிறது.

நான் என்னுடைய பிரதியை (எகிப்தின் தலைநகர்) கொய்ரோவில் வைத்துத்தான் வாசித்தேன்.

என் நண்பர்கள் பலர் - எகிப்தில் இது தடை செய்யப்பட்ட நூல். அதனால் எகிப்தில் இருக்கும்போது இந்த நூல் என் கைகளில் இருப்பதைப் பார்த்தால் நான் கைது செய்யப் படுவேன் என்றார்கள். நான் அவர்களிடம் இந்த நூலை எழுதியவர் தன் உயிரையே தந்தார். நான் சிறையாவது செல்வது ஒரு அருட்கொடைதான் என்றேன். அது நான் அவருக்கு செலுத்தும் நன்றியாகவும், காணிக்கையாகவும் இருக்கும் என்று கூறினேன்.

நிச்சயமாக இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள், படித்த மாத்திரத்திலேயே என்னுள் பல தாக்கங்களை ஏற்படுத்திடத் தொடங்கியது.

மைல்கற்கள், என்னுள் ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தியது மட்டுமல்ல, அதன் தெளிவான கருத்துகள், என்னுள் ஓர் தைரியத்தையும் பிடிப்பையும் ஏற்படுத்தியது. எதிர்கால தலைமுறையினருக்கு அது நெஞ்சுரத்தையும் செயல் திட்டத்தையும் தரும். - MGM




# UAPA சட்டத்தின் பயன்பாடு மற்றும் அதன் விளைவுகள்

**பாகம் - 01**

**இந்த** ஆய்வு, UAPA விதிகள், அதில் உள்ள பாதுகாப்புச் சட்ட உத்தரவுகள், பல்வேறு நீதிமன்றங்களின் தீர்ப்புகள் மற்றும் பிற நாடுகளின் ஒப்பீட்டு தரநிலைகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், FIR No.59இல் UAPA பயன்பாடு ஏற்படுத்திய விளைவுகளையும் இந்த அதிகாரம் ஆராய்கிறது. இங்கு உள்ள எடுத்துக்காட்டுகள், விசாரணை நிறுவனங்கள் UAPA சட்டத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதை விளக்கும் நோக்கத்திற்கே பயன்படுத்தப்படுகின்றன.

## UAPA-வின் சுருக்கமான பின்னணி


இந்தியாவில் பயங்கரவாதத்தை சமாளிக்க சிறப்பு சட்டங்கள் கொண்டு வரப்பட்ட வரலாறு நீண்டது.

1985இல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில், பஞ்சாப் கிளர்ச்சி சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், Terrorist and Disruptive Activities (Prevention) Act, 1985 (TADA) இயற்றப்பட்டது. இது பயங்கரவாத குற்றங்களை கையாள உருவாக்கப்பட்ட முதல் சிறப்பு சட்டம் ஆகும். TADA வழக்கமான குற்றவியல் நடைமுறைகளிலிருந்து விலகி, தனித்துவமான விதிகளை அறிமுகப்படுத்தியது.

உதாரணமாக, காவல்துறையினரிடம் அளிக்கப்படும் ஒப்புதல்கள் சான்றாக ஏற்கப்பட்டன (Section 15, TADA). இது இந்திய சான்றுச் சட்டம், 1872 (Sections 25-26) படி சாதாரணமாகத் தடைசெய்யப்பட்ட ஒன்று.

மேலும், ஜாமின் கோரிக்கையில் சுமத்தப்பட்ட சுமையை (Burden of Proof) குற்றம் சாட்டப்பட்டவர் மீது மாற்றியது. (Section 20, TADA). இதனால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு, போதுமான ஆதாரமின்றி நீண்டகாலம் விசாரணைக் கைதிகளாக வைக்கப்பட்டனர்.


ஆய்வறிக்கைகளின் படி, TADA-வில் தண்டனை விகிதம் 2%க்குக் குறைவாக இருந்தது. இருந்தாலும், 76,000-க்கும் மேற்பட்டோர் பல்வேறு காலங்களில் இந்தச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.




TADA சட்டத்தின் தவறான பயன்பாடு (misuse) முறையாகப் பதிவுசெய்யப்பட்டது. ஆய்வு குழுக்கள் 50,000-க்கும் மேற்பட்ட வழக்குகளை வாபஸ் பெற பரிந்துரைத்தன. கடுமையான விமர்சனங்களுக்குப் பின், TADA 1995இல் கைவிடப்பட்டது.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, 2001 இல் இந்திய நாடாளுமன்றம் மீது நடத்தப்பட்ட

தாக்குதல் மற்றும் அமெரிக்காவில் நடந்த 9/11 தாக்குதல் ஆகியவற்றைத் தொடர்ந்து, Prevention of Terrorism Act, 2002 (POTA) இயற்றப்பட்டது. ஆனால், POTA-வின் அனுபவமும் TADA போலவே கடுமையான தவறான பயன்பாட்டிற்குள்ளானதால், 2004 இல் ரத்து செய்யப்பட்டது.





இவைகளுக்கெல்லாம் முன்னர், Unlawful Activities (Prevention) Act, 1967 (UAPA), இந்திய அரசியலமைப்பின் 16வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில், மூன்றாவது லோக்சபாவில் அறிமுகப்படுத்தப் பட்டது. அந்த திருத்தச் சட்டத்தின் மூலம், அரசியலமைப்புச் சட்டம் Article 19இல் உள்ள சுதந்திரங்களுக்கான "நியாயமான கட்டுப்பாடுகள்" (reasonable restrictions) பட்டியலில் “இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு” (sovereignty and integrity of India) சேர்க்கப்பட்டது.

**UAPA சட்டம் தொடர்பான நாடாளுமன்ற விவாதங்கள்**

நாடாளுமன்ற விவாதங்கள் தெளிவாகக் காட்டுவது என்னவெனில், UAPA சட்டம் பிரிவினைவாதக் கோரிக்கைகளை முன் வைக்கும் நபர்களையும் அமைப்புகளையும் தடுக்கும் நோக்கில் இயற்றப்பட்டது என்பதே ஆகும். அதாவது, 1967ஆம் ஆண்டில் இயற்றப் பட்டபோது, இந்தச் சட்டம் முதன்மையாக, இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையைக் காக்கும் நோக்கில், அரசிய லமைப்புச் சட்டம் Article 19-இல் உறுதி செய்யப்பட்ட சுதந்திரம் மற்றும் பிற உரிமை களின் மீது கட்டுப்பாடுகளை விதித்தது.

ஆனால், POTA சட்டம் 2004இல் ரத்து செய்யப்பட்ட பின்பு, UAPA-வில் திருத்தம் செய்து, "பயங்கரவாதச் செயல்" விதிகள் சேர்க் கப்பட்டன. இதனால், UAPA நாட்டின் முதன்மை பயங்கரவாத எதிர்ப்பு சட்டமாக மாறியது.

2008-ஆம் ஆண்டில் மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர், மீண்டும் திருத்தம் செய்து, "பயங்கரவாதச் செயல்" என்ற வரையறையை விரிவுபடுத்தினர் மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய பிற குற்றங்களையும் சேர்த்தனர். இதனால் UAPA மிகுந்த அளவில் விரிந்தது. 2019-ஆம் ஆண்டில் மேலும் திருத்தம் செய்து, தனிநபர்களையே




‘பயங்கரவாதிகள்’ என்று அறிவித்து பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்க அனுமதி அளிக்கப் பட்டது.

### UAPA சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களின் அடிப்படைகள்

UAPA சட்டம், சட்டரீதியாக "பயங்கரவாதச் செயல்" என்று வரையறுக்கப்படும் மிகச் சுருக்கமான வகை குற்றங்களுக்கு மட்டுமே பொருந்த வேண்டியதாகும். ஆனால், இந்தச் சட்டம் அளவுக்கு மீறி பயன்படுத்தப்படும் போது, அது நியாயமான விசாரணை உரிமைக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே, இப்பகுதியில், UAPA-க்கு உட்படக் கூடிய குற்றங்களின் சரியான வரம்புகளை சுட்டிக்காட்டுகிறோம்.

**UAPA சட்டத்தின் கீழ் "பயங்கரவாத குற்றம்" என்றதன் பொருள்**

UAPA சட்டத்தின் Chapter IV-இல் உருவாக்கப்பட்ட பொருள் சார்ந்த குற்றங்களின் மையக் கருத்து "பயங்கரவாதச் செயல்பாடு" என்பதே ஆகும். ஆனால், UAPA-வில் "பயங்கரம்" என்ற சொல்லுக்கான வரையறை அளிக்கப்படவில்லை. இதனால், அந்தச் சொல் தெளிவற்ற மற்றும் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய வகையில் உள்ளது. பிரிவு 15-இல் தான் "பயங்கரவாதச் செயல்" உருவாகும் கூறுகள் விளக்கப்பட்டுள்ளன.

*பிரிவு 15 - "பயங்கரவாதச் செயல்" என அமைவது குறித்த கூறுகள்*

ஒரு செயல் பிரிவு 15-இன் கீழ் பயங்கரவாதச் செயலாக கருதப்படுவதற்கு, அது இரண்டு முக்கிய கூறுகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

**நோக்கம் (Intention):**

அந்தச் செயல், பின்வரும் நோக்கங்களில் ஒன்றை அடைவதற்காகச் செய்யப்பட்டிருக்க வேண்டும்:

(a) இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, பொருளாதாரப் பாதுகாப்பு அல்லது இறையாண்மையை அச்சுறுத்துதல் அல்லது அச்சுறுத்தும் வாய்ப்பு உள்ளதாக இருக்க வேண்டும்; அல்லது

(b) இந்திய மக்களின் ஏதேனும் ஒரு பிரிவில் பயத்தை ஏற்படுத்துதல் அல்லது ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளதாக இருக்க வேண்டும்.

**செயலின் தன்மை (Nature of the Act):**

மேலும், அந்தச் செயல், பிரிவு 15(1)(a), (b), அல்லது (c)-இன் கீழ் வரவேண்டும். அதாவது, அந்தச் செயல்:

(a) பிரிவு 15(1)(a)-இல் குறிப்பிடப்பட்ட பொருட்கள் அல்லது ஆயுதங்களைப் பயன் படுத்தி நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும், அல்லது

(b) ஒரு பொது அதிகாரியின் (Public Functionary) மீது குற்றவியல் வன்முறை பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும், அல்லது

(c) மத்திய அரசு அல்லது மாநில அரசை ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க வற்புறுத்தும் நோக்கில் ஒருவரை கடத்தல் அல்லது அபகரித்தல் ஆகியவற்றில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

*பிரிவு 15(1)-இன் நோக்கம் (Mens Rea) இன்றியமையாதது*

பிரிவு 15(1) (a), (b), (c)-இல் விவரிக்கப்பட்ட பல உடல் செயல்கள் (physical acts) - மரணம், காயம், அரசுச் சொத்து சேதம் அல்லது பெரும் பொதுக் கலவரம் எதுவாக இருப்பினும், அந்தச் செயல்கள் பிரிவு 15(1)-இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்துடன் இணைக்கப்படாத வரையில், அவை பயங்கரவாதச் செயலாக கருதப்பட முடியாது.

குற்றவியல் சட்டத்தில், mens rea (குற்ற நோக்கம்) மற்றும் actus reus (உண்மையான குற்றச் செயல்) இரண்டும் நிரூபிக்கப்பட வேண்டும். பயங்கரவாதக் குற்றத்தை நிரூபிப்பதில் குற்றத்தின் நோக்கம் மிக முக்கியமானதாகும். ஏனெனில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஒரு கடுமையான குற்றச் செயலுக்கும், பயங்கரவாதச் செயலுக்கும் இடையேயான வித்தியாசம், அந்தச் செயல் எதற்காகச் செய்யப்பட்டது என்ற நோக்கத்தில் தான் இருக்கிறது.

**Hitendra Vishnu Thakur v. State of Maharashtra (உச்சநீதிமன்றத் தீர்ப்பு)**

இந்த வழக்கில், உச்சநீதிமன்றம் (TADA சட்டத்தின் கீழ்) பயங்கரவாதக் குற்றத்தில் mens rea என்ற கூற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

**நீதிமன்றம் குறிப்பிட்டது:**

"TADA சட்டத்தின் பிரிவு 3(1) இன் கீழ் ஒரு குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டுமெனில், குற்றச்சாட்டு சாட்டப்பட்ட செயல், அந்தப்

பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயுதங்கள் அல்லது பிற வழிமுறைகள் மூலம் மேற்கொள் ளப்பட்டதுடன், குறிப்பிட்ட நோக்கத்தோடு (intention) செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் குற்றப்புலனாய்வுத் தரப்பினர் நிரூபிக்க வேண்டும். குற்றச் செயல் காரணமாக மக்கள் மத்தியில் பயம், பீதி, பதட்டம் ஏற்பட் டாலும், அந்தச் செயல் பிரிவு 3(1)-இல் குறிப் பிடப்பட்டுள்ள நோக்கத்தை அடைவதற்காகச் செய்யப்படவில்லை என்றால், அதனை TADA சட்டத்தின் கீழ் பயங்கரவாதச் செயல் எனக் கருதி குற்றவாளி தண்டிக்கப்பட முடியாது.

ஒவ்வொரு குற்றமும் சமுதாயத்திற்கு எதிரானதாக இருப்பதால், அது எவ்விதமான வன்முறையையும், பயத்தையும், பீதியையும் ஒரளவு ஏற்படுத்தும். ஆனால், அந்தப் பயம், பீதி அல்லது பதட்டம் குற்றவாளி குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காகவே உருவாக்கப்பட் டிருந்தால்தான் அது உண்மையான பயங்கரவாதச் செயல் ஆகும்."

கடந்த சில தசாப்தங்களில், உச்ச நீதிமன்றம் பல்வேறு சிறப்பு சட்டங்களின் அடிப்படையில் தீவிரவாதச் செயல்களின் வரைவை விளக்கிக் கூறியுள்ளது.

தீவிரவாதச் செயல்கள் ஒரு மாநிலத்தில் ஏற்படும் சாதாரண சட்டம் ஒழுங்கு சீர்குலைவு களை விட, முழு தேசத்தையும் குறிவைத்து நடத்தப்படுவன. மேலும், இத்தகைய தீவிரவாதச் செயல்கள் தேசிய பெருமை குறியீடுகள், ஜனநாயக அமைப்புகள், பொருளாதார மையங்கள், அரசாங்கம் அல்லது குறிப்பிட்ட சமூகத்தில் பயத்தை ஏற்படுத்துவதற்கான செயல்கள் என வலியுறுத்தியுள்ளது. எனவே, இச்செயல்கள் நாட்டின் முழுமையான சவாலாகக் கருதப்படுகின்றன.

இந்த விவகாரத்தை மற்றொரு கோணத்திலும் பார்க்கலாம். அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை (Seventh Schedule) மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையில் சட்டம் இயற்றும் அதிகாரங்களை பிரிக்கிறது. ஒரு தீவிரவாத எதிர்ப்பு சட்டமானUAPA-வை இயற்று வதற்கு பொருந்தக்கூடிய பிரிவுகள் பின்வருவன:

**பட்டியல் I - ஒன்றிய பட்டியல் (Union List):**

பிரிவு 1: இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் அதன் ஒவ்வொரு பகுதிக்கும் பாதுகாப்பு, போர் காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மற்றும் போர் முடிந்த பின் சீர்திருத்தங்கள்.

பிரிவு 93: இந்த பட்டியலின் எந்த ஒரு பொருளுக்குரிய சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள்.

**பட்டியல் II – மாநில பட்டியல் (State List):**

பிரிவு 1: பொது ஒழுங்கு (ஆனால், ஒன்றி யத்தின் கடற்படை, இராணுவம், விமானப்படை அல்லது ஒன்றிய கட்டுப்பாட்டின் கீழுள்ள பிற ஆயுதப்படைகளைப் பயன்படுத்துவதைக் குறிப்பிடாது).

**பட்டியல் III - ஒருங்கிணைந்த பட்டியல் (Concurrent List):**

பிரிவு 1: குற்றச் சட்டம் (Indian Penal Code உட்பட), ஆனால், பட்டியல் I அல்லது IIயில் உள்ள பிரிவுகளுக்குரிய குற்றங்களைத் தவிர்த்து.

இந்தப் பட்டியல்களை ஒப்பீடு செய்து பார்க்கும்போது, மத்திய அரசிற்கு பொதுமக்கள் ஒழுங்கு (Public Order) குறித்த சட்டங்களை இயற்றும் அதிகாரம் இல்லை. அது மாநிலங் களின் தனிப்பட்ட அதிகாரப் பகுதி. ஆனால், இந்தியாவின் பாதுகாப்பு (Defence of India) தொடர்பான சட்டங்களை இயற்றுவதற்கு மத்திய அரசிற்கு அதிகாரம் உள்ளது. இதனால்தான் UAPA போன்ற தீவிரவாத எதிர்ப்பு சட்டங்கள் ஒன்றியப் பட்டியலின் "Defence of India" பிரிவின் அடிப்படையில் அமல்படுத்தப்படுகின்றன.

**UAPA-வின் சட்ட அடிப்படை - Zameer Ahmed வழக்கு**

Zameer Ahmed Latifur Rehman Sheikh v. State of Maharashtra வழக்கில், உச்ச நீதிமன்றம், பட்டியல் I (Union List) இல் உள்ள Entry 1 - "Defence of India" என்பதை தீவிரவாதம் தொடர் பான சட்டங்களை இயற்றுவதற்கு பாராளு மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கும் ஒரே பிரிவு எனக் குறிப்பிட்டது. இதுவே UAPA-வின் நோக்கமும், சட்ட அடிப்படையும் ஆகும்.

ஒரு சட்டம் உருவாகும்போது, அதற்கான Seventh Schedule entryதான் அந்தச் சட்டத்தின் பிரிவுகளைப் புரிந்து கொள்ள contextual paradigm ஆகிறது. எனவே, UAPA-வில் உள்ள தண்டனை விதிகள் எப்போதும் Union List Entry 1 - Defence of India என்பதன் வெளிச்சத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். இதுவே பாராளு

மன்றத்தின் சட்டம் இயற்றும் அதிகாரம் (legislative competence) நியாயப்படுத்தப் படுவதற்கான அடிப்படை.

2004 மற்றும் 2008 திருத்தங்களுக்குப் பின், சட்டத்தின் long title, preamble மற்றும் மாற்றங்கள் அனைத்தும் UAPA என்பது இந்தியா வின் பாதுகாப்பு தொடர்பான தீவிரவாத அச்சுறுத்தல்களுக்கான, legislative response எனத் தெளிவுபடுத்துகின்றன. அதனால், UAPA-வை சாதாரண குற்றங்கள் (ordinary penal offences) அல்லது பொது ஒழுங்கு (public order) தொடர்பான பிரச்சனைகளுக்கு பயன்படுத்துவது சட்டபூர்வமாக அனுமதிக்கப்படாது.

இதையே, Delhi High Court, FIR 59 வழக்கில் மூன்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஜாமீன் வழங்கும்போது வலியுறுத்தியது. அங்கு, நீதிமன்றம் Section 15 UAPA-வில் உள்ள "terrorist activity" என்பதைக் குறுகிய பொருளில் பதிவு செய்து, சாதாரண குற்றங்களை தீவிரவாதச் செயல்களிலிருந்து தனியாக வைத்தது.

**சாதாரண குற்றம் V. தீவிரவாத குற்றம் – நீதிமன்ற விளக்கம்**

இந்த வேறுபாட்டை விளக்க Ram Manohar Lohia v. State of Bihar வழக்கில் உச்ச நீதிமன்றம், "Security of State - Public Order - Law and Order" என்ற மூன்று அடுக்குகளை (concentric circles) எடுத்துக் கூறியது:

**Law and Order - மிகப்பெரிய வட்டம், சிறிய அளவிலான குழப்பங்கள்.**

**Public Order - நடுத்தர வட்டம், அதிகப் பாதிப்பை ஏற்படுத்தும் குழப்பங்கள்.**

**Security of State - மிகச்சிறிய வட்டம், ஆனால் நாட்டின் பாதுகாப்பை நேரடியாக சவால் செய்யும் செயல்கள்.**


இதன் மூலம், ஒவ்வொரு செயலும் law and order-ஐ பாதித்தாலும் அது public order-ஐ பாதிக்க வேண்டிய அவசியமில்லை. அதுபோல், public order பாதிப்பு இருந்தாலும் அது security of State-ஐ பாதிக்காது. தீவிரவாதச் செயல்கள் மட்டும் தான் security of State வட்டத்தில் வரும்.

**தீவிரவாத அமைப்புகள் - First Schedule**

UAPA-வின் First Schedule-ல் சில அமைப்புகள் "terrorist organizations" எனப் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை தொடர்பான வழக்கில், உச்ச நீதிமன்றம் (Zameer Ahmed வழக்கு) வலியுறுத்தியது:

"Terrorist activity" என்பது law and order பாதிப்பிலிருந்து வேறு தனிப்பட்ட நிலை (different footing) உடையது. அது இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் சுயாட்சியை (integrity and sovereignty of India) குறைக்கும்போது மட்டுமே terrorist activity எனக் கருதப்படும்."

இதனால், ஒரு செயலுக்கு terrorist offence எனக் கருதப்பட, அது சாதாரண குற்ற வரம்பை மீறி இருக்க வேண்டும். அரசியல் நோக்கத்துடன் செய்யப்பட்ட குற்றங்கள் (politically motivated crimes) அல்லது அரசாங்கத்தை எதிர்த்த குற்றங்கள் கூட, Section 15(1)-இல் குறிப்பிட்ட mens rea (intention) இல்லையெனில், terrorist act ஆகாது.




**ஒரு குற்றம் "தீவிரவாதச் செயலாக" கருதப்படுவதற்கு தேவையான நிபந்தனை**

ஒரு குற்றச்செயல், மக்களிடையே பயத்தை (terror) ஏற்படுத்தியது அல்லது கூடவே இந்தியாவின் ஒருமைப்பாட்டை (unity) பாதித்தது என்பதே போதுமானதல்ல. அந்தக் குற்றத்தைச் செய்யும் முன்பே, குற்றவாளியின் விருப்பமான நோக்கம் (express intention) இதுவாக இருக்க வேண்டும் என்பது சட்டத்தின் அடிப்படை.

FIR 59 - Terrorist Offence ஆனதா?
இன்ஷா அல்லாஹ் தொடரும்!

Source: UNCERTAIN JUSTICE a Citizens Committee Report on the North East Delhi Violence 2020

தமிழில்:
**Adv. Jasmine Fathima.**



# உச்ச நீதிமன்றம் உண்மையான தீவிரவாதத்தைத் தடுக்கத் தவறிவிட்டது

(iii) மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புப் படையிடம்தான் கலோனல் பிரசாத் புரோகித் வழக்குகள் புலன் விசாரணைக்கு ஒப்படைக்கப் பட்டன. இந்தத் தீவிரவாத தடுப்புப் படையை பயிற்றுவித்தது கலோனல் பிரசாத் புரோகித்தான். பின்னர் எப்படி புலன் விசாரணை சரியான திசையில் செல்லும்.

(iv) நமது இராணுவ கிடங்குகளிலிருந்து ஆர்.டி.எக்ஸ் வகை சக்தி வாய்ந்த வெடி பொருட்களை இந்த கலோனல் பிரசாத் புரோகித்தான் கடத்தி வந்தான். அதை உண்மையை அறியாத சில காவல்துறையினர் அவ்ரங்கபாத்–இல் வைத்து, பிடித்தனர். இந்த வழக்கின் உண்மையான குற்றவாளி கலோனல் பிரசாத் புரோகித்தான். இந்த வழக்கை மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படையிடம் விசார ணைக்கு ஒப்படைத்தார்கள். ஒரு கட்டத்தில் இந்தத் தீவிரவாதத் தடுப்புப் படை இந்த வழக்கு விசாரணையில் உதவி செய்திடும்படி கலோனல் பிரசாத் புரோகித்தையே அழைத்தது. எப்படி குற்றவாளி தண்டிக்கப்படுவான்.

(v) கென் கேவுட் (Ken Haywood) என்பவன் ஓர் அமெரிக்க குடிமகன். இவன்தான் 2008 அஹமதாபாத் குண்டு வெடிப்பின் முக்கியக் குற்றவாளி! அவன் இந்தியாவை விட்டு ஓடிவிடாமல் தடுப்பதற்கு, எல்லா விமான நிலையங்களுக்கும் கண்காணிப்பு எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. (Lookout Notice) இதை யெல்லாம் பொருட்படுத்தாமல் அவனை இந்தியா விலிருந்து அமெரிக்கா அனுப்பி வைத்தது நமது மத்திய உளவுத்துறை (IB)

(vi) டெல்லியின் மிகவும் முக்கியமான இடம் பாட்லா ஹவுஸ். இங்கே வைத்து காவல் துறை யினர் சில அப்பாவி முஸ்லிம்களை, என்கவுண்டர், போலி எதிர்த்தாக்குதல் என்ற பெயரில் கொலை செய்தார்கள். அதில் ஒரு காவலரையும் கொன் றார்கள். அந்த இடத்தில் ஒரு செல்போன் கிடைத்தது. அந்த செல்போனிலிருந்த ‘சிம்’ (Sim) கார்டு பல தகவல்களைத் தந்தது. ஆனால், அந்த சிம் கார்டின் தகவல்கள் முற்றாக மறைக் கப்பட்டன. அந்த சிம்கார்டை வாங்கியவர் போலி முகவரியையும் கொடுத்திருந்தார். இவை யெல்லாம் மறைக்கப்பட்டு செல்போன் உரிமை யாளர் ஆள் மாறாட்டம் செய்தார் என ஓர் வழக்குப் பதிவு செய்து விடுதலைச் செய்யப் பட்டார். இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாமல் உச்ச நீதிமன்றம் கண்ணை மூடிக்கொண்டால் எங்கே நியாயம் கிடைக்கும். எப்போது குற்ற


vaigarai velicham official

வாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

(vii) சந்தேகத்திற்கிடமான மின்னஞ்சல் (Email) விவகாரங்களில், அவற்றை உண்மையாகவே அனுப்பியவர்களான, கென் ஹேவூட், மதுக்கூர் மிஸ்ரா, தீபக் பாண்டே போன்றவர்கள் வேண்டுமென்றே விடப்பட்டார்கள். அப்பாவி முஸ்லிம்களை சித்திரவதைச் செய்து, வாக்கு மூலங்களை வாங்கி சிறையிலடைத்தார்கள்.

(viii) மும்பை புறநகர் ரெயில் குண்டு வெடிப்பு, அஹ்மதாபாத் குண்டு வெடிப்பு 2008, ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பு, 2008, இவற்றில் கிடைத்த தடயங்கள், ஆதாரங்கள் இவையெல்லாம் புறக்கணிக்கப்பட்டன. உண்மையான குற்றவாளி களைத் தப்பிக்க விட்டுவிட வேண்டும் என்பதற் காகவே இந்தப் புறக்கணிப்புகள்.

உண்மையான நடப்புகள் இப்படி இருக்க எந்த புலனாய்வு அமைப்பை நம்பி மறு புலனாய்வு விசாரணையை (173(8) Cr.PC) ஒப்படைக்க இயலும். அந்த முயற்சி எந்தப் பயனையும் பயக்காது. உச்ச நீதிமன்றம் தலை யிட்டு ஓர் புலன் விசாரணைக் குழுவை அமைத்து அந்தப் புலன் விசாரணையைக் கண்காணித் தால் மட்டுமே நியாயம் கிடைக்கும். அவற்றுள் ஒன்றுதான் இலவச சட்ட உதவியைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பயன்படுத்துவது. உச்ச நீதிமன்றம் தனது உபதேசத்தில்: ‘‘குற்றம் சுமத்தப்பட்டவர்களால் வழக்கறிஞர்களை நியமித்து வாதாட இயலவில்லை என்றால், இந்த நாட்டில் இலவச சட்ட உதவிகளுக்குப் பஞ்சமில்லை. அவர்கள் அவற்றைத் தாராள மாகப் பயன்படுத்திடலாம்’’ என்றது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, அதாவது குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவி முஸ்லிம்களைப் பொறுத்தவரை பிரச்சனை பணம் சம்மந்தப் பட்டது மட்டுமல்ல, மாறாக, அது வகுப்புவாதம், என்ற வகையிலும் அணுகப்பட்டது.

குற்றம் சுமத்தப்பட்ட, முஸ்லிம்களுக்காக வாதாட வந்த வழக்கறிஞர்கள் கண்மூடித்தன மாகத் தாக்கப்பட்டார்கள். இந்தத் தாக்குதல்கள் நீதி மன்ற வளாகத்தில், நீதிபதிகளின் கண் முன்னே நடந்தன. இப்படித் தாக்குதலை நடத்தியவர்கள், பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்கள். சிலபல நேரங்களில் அந்தந்த பகுதியிலுள்ள வழக்கறிஞர்களின் அவை (Bar Association) குற்றம் சுமத்தப்பட்ட முஸ்லிம்களுக்காக வாதாடக்கூடாது என வழக்கறிஞர்களை தடுத்தன. இவை ஹிந்துஸ்தான் என்றே இந்துப் பத்திரிகை யிலும், இன்னும் இதரப் பத்திரிகைகளிலும் செய்தியாக வந்தன. இவற்றையெல்லாம் ஆதாரங்களுடன், உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்கள் மனுதாரர்கள். ஆனால் உச்ச நீதிமன்றம் அவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அதனால் எந்த நிவாரணத்தையும் நிராதரவற்ற அப்பாவி முஸ்லிம்களுக்கு வழங்கிடவில்லை.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல்,
மகாராஷ்டிரா காவல்துறை

## 3) 2012ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட (கிரிமினல் ரிட்) மனுக்குப்பின் நடந்தவை (அ) விளைந்த பலன்கள்

(1) 2006 மாலேகான் குண்டு வெடிப்பில், பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்த எட்டு தீவிரவாதிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஒன்பது அப்பாவிகள், முன்னர் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைச் செய்யப்பட்டார்கள்.

(2) அஜ்மீர் ஷரீஃப் குண்டுவெடிப்பு வழக்கில் மாவட்ட தலைமை நீதிமன்றம் ஆர்.எஸ்.எஸ். இன்னும் சில பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்களுக்கு தண்டனைகள் வழங்கியது.

(3) அக்ஷர்தாம் (குஜராத்) 2002 குண்டு வெடிப்பு வழக்கு, முலூந்வைல் – பார்லி மத்திய மும்பை குண்டு வெடிப்பு வழக்கு 2003, போலிஸ் சிறப்பு பணிக்குழு அலுவலகக் குண்டு வெடிப்பு வழக்கு 2005, (Police Task Force Office (Bangalore) Blast Case 2005, காலூப்பூர் (அஹ்மதாபாத்) குண்டு வெடிப்பு வழக்கு 2006, இவற்றில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் 10 முதல் 15 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப் பட்டார்கள்.

(4) மும்பை புறநகர், ரெயில் குண்டு வெடிப்பு, மராட்டிய மாநிலம் அவ்ரங்காபாத்–இல் வண்டி, வண்டியாக, ஆர்.டி.எக்ஸ் வகை வெடி

பொருட்கள் வழக்கு 2006, லும்பினி பார்க் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு வழக்கு, 2007. ஜெர்மன் பேக்கரி குண்டு வெடிப்பு (பூனா – மகாராஷ்டிரா) 2010, தில்சுக் நகர் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு 2013, புத்கயா (பிகார்) குண்டு வெடிப்பு 2013, இவற்றில் விசாரணை நீதிமன்றம் முஸ்லிம்களைத் தண்டித்தது. இதில் ஜெர்மன் பேக்கரி வழக்கில் உயர்நீதிமன்றம் ஒரே ஒரு முஸ்லிம்–ஐ ஹிமாத்பேக்–ஐ விடுவித்தது. அவரை எல்லா குற்றச்சாட்டுகளிலிருந்தும், ஒட்டுமொத்தமாக விடுதலை செய்தது. இவர் மட்டுந்தான் அந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்.

(5) ஜன்காலி மஹாராஜ் சாலை (Jangali Maharaj Road, Pune) பூனா – தொடர் குண்டு வெடிப்பு வழக்கு 2012, மல்லேஸ்வரம் (பெங்களூரு) வெடிகுண்டு வழக்கு 2013, இது பாரதீய ஜனதா கட்சி அலுவலகத்திற்கு முன்னால் வெடித்த குண்டு வழக்கு, புத்கயா (பிகார்) குண்டு வெடிப்பு 2013.

பரஷ்கான (Dagduseth Ganapathi, Pune) குண்டு வெடிப்பு வழக்கு, பூனா 2014 இவற்றை இந்த நூலில் அத்தியாயம் 3 பகுதி முதல் 9 வரை விவாதித்திருக்கின்றோம் ; இந்த வழக்கு களில் ஆர்.எஸ்.எஸ்., இதர பிராமிணிஸ்ட்டு அமைப்புகளையும் சேர்ந்தவர்கள்தான் செய்திருக்கின்றார்கள் என்பது உறுதியானது. ஆனால், அவர்களைக் காப்பாற்றிவிட்டார்கள். அப்பாவி முஸ்லிம்களைச் சிக்க வைத்தார்கள். இதற்காக சாட்சியங்களை வலிந்து உருவாக்கி னார்கள்.

(6) இந்த நூலில் நான்காவது அத்தியாயத்தில் விவாதித்துள்ளபடி 21 வழக்குகளில் விசாரணை முடிவடைந்துள்ளன. அவற்றில் குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிம்கள் ஒன்றிலோ குற்ற மற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டார்கள் அல்லது வழக்கிலிருந்து (விசாரணைக்கு முன்) விடுவிக்கப்பட்டார்கள். (Acquitted or Discharged)



மேலே நாம் குறிப்பிட்ட எண் 4–இல் உள்ள வழக்குகளில் அப்பாவி முஸ்லிம்கள் எப்படி சிக்க வைக்கப்பட்டார்கள் என்பதை மிகவும், விபரமாக இந்த நூலின் அத்தியாயங்கள் 5 முதல் 8 வரை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

இவற்றையெல்லாம் நாம் உச்ச நீதி மன்றத்தின் பார்வைக்குக் கொண்டு சென்றோம். உச்ச நீதிமன்றம் ஆகஸ்ட்–27, 2012ஆம் ஆண்டு அனைத்தையும் ஊன்று கவனித்துத் தீர்ப்பு வழங்கிடும் என வாக்களித்தது. இந்த வாக்குறுதியை உச்ச நீதிமன்றம் நிறைவேற்றி இருந்தால், பல இழப்புகள் தவிர்க்கப்பட்டி ருக்கும். பல அப்பாவி முஸ்லிம் குடும்பங்கள் நிம்மதியடைந்திருக்கும்.

உச்ச நீதிமன்றம் தனது வாக்குறுதியை நிறைவேற்றி இருந்தால், பிற்றை நாள்களில் நடந்த குண்டு வெடிப்புகள் நடத்திருக்காது. அவையாவன, ஜங்காலி மகாராஜ் சாலை (பூனா) குண்டு வெடிப்பு 2012, மல்லேஸ்வரம் (பெங்களூரு) குண்டு வெடிப்பு 2013, ஃபரஸ்கான குண்டு வெடிப்பு 2014 போன்றவை.

அத்தோடு மட்டுமல்ல, உச்சநீதிமன்றம் தனது ஆகஸ்ட்– 27, 2012 வாக்குறுதியின் அடிப்படையில் குண்டு வெடிப்பு வழக்குகளை மறு ஆய்வுக்கு உட்படுத்தி இருந்தால், பல வழக்குகளில் புலன் விசாரணையும், நீதிமன்ற விசாரணையும் தலைகீழாக மாறிப் போயிருக்கும். அவையான, மாலேகான் 2006 குண்டு வெடிப்பு வழக்கு, அவ்ரங்காபாத்–இல் பிடிபட்ட ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருள்கள் வழக்கு, ஜெர்மன் பேக்கரி வெடிகுண்டு வழக்கு 2010, தில்சுக் நகர் (ஹைதராபாத்) வெடிகுண்டு வழக்கு முதலானவை.

### 4) உச்ச நீதிமன்றம் ஆர்.எஸ்.எஸ். அபிநவ்பாரத் ஜெய்வந்தே மாதரம் போன்ற அமைப்புகளைத் தடை செய்யவில்லை

அஸ்மி–சுவாந்த் ஆகிய இருவரும் உச்ச நீதிமன்றத்தில், வைத்தக் கோரிக்கைகளுள் முக்கியமானது ஆர்.எஸ்.எஸ். அபிநவ்பாரத், ஜெய் வந்தே மாதரம் ஆகியவற்றைத் தடை செய்திட வேண்டும். அப்போது மட்டுமே நாட்டில் குண்டு வெடிப்பதும், அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவதும் நிற்கும் என்பதாகும்.


தங்கள் கோரிக்கைக்கு ஆதாரமாக இந்த அமைப்புகள் நடத்திய குண்டு வெடிப்புகள், அவற்றின் மீது தொடுக்கப்பட்ட குற்றப் பத்திரிகைகள் சிலபல வழக்குகளில் பெற்ற தண்டனைகள் இப்படி அனைத்துமே இணைத் திருந்தனர். இந்த இந்து அமைப்புகளை பற்றி மத்திய (IB) உளவுத்துறையின் சிறப்பு இயக்குநர் 16 குண்டு வெடிப்பு வழக்குகளில் இந்து அமைப்புகள் மீதுதான் விசாரணை நடந்து கொண்டிருக்கின்றது என்று கூறியதன் உண்மை நகல், இவையெல்லாம் இணைக்கப்பட்டிருந்தன.

பல வழக்குகளில், மக்கா மஸ்ஜித், அஜ்மீர் ஷெரீஃப், சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு, இவற்றில் மறு ஆய்வுகள் தந்த தலைகீழ் மாற்றங்களையும் குறிப்பிட்டிருந்தார்கள்.

உச்ச நீதிமன்றம் மனுதாரர்களின் இந்தக் கோரிக்கை எண் (5) ஐந்தையும் சேர்த்தே நிராகரித்தது. பொத்தாம் பொதுவாக உச்ச நீதிமன்றம் மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டால், அது ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கும் வழக்குகளில் தலையிடுவதாக அமையும் எனக் கூறிவிட்டது.


இது கோரிக்கை எண் (1) ஒன்றுக்குத்தான் பொருந்தும். மனுதாரர்களின் கோரிக்கை எண் (5) ஐந்திற்கும் கோரிக்கை எண் (1)க்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

கோரிக்கை எண் (1) சில குண்டு வெடிப்பு வழக்குகளை மறு ஆய்வு – புலன் விசாரணைக்கு உத்தரவிட வைக்கப்பட்ட கோரிக்கை. கோரிக்கை எண் (5) சில அமைப்புகளை அவை தொடர்ந்து குண்டு வெடிப்புகளை நடத்துவதாலும், அந்த குண்டு வெடிப்புகளை அவர்கள்தான் நடத்தினார்கள் என்பது நிரூபிக்கப் பட்டதாலும், அவற்றை தடை செய்திட வேண்டும் எனக் கோருவதாகும். **– தொடரும்**



- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# நாம் அளிக்க வேண்டிய இரு வாக்குறுதிகள்!

**(நூலாசிரியர் 1961ஆம் ஆண்டு ஜூன் 4 மற்றும் 5 ஆம் தேதிகளில் லக்னோவில் அவரது தலைமையின் கீழ் நடைபெற்ற இஸ்லாமிய கல்வி மாநாட்டின் இறுதி அமர்வில் வழங்கிய உரையைக் கொண்டு இந்நூலை நிறைவு செய்கிறோம். இந்த உரை, இந்தியாவில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை கூர்மையாக விவரிக்கிறது, அவர்களது எதிர்காலத்திற்கு தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்குகிறது. எனவே இதனைக் கொண்டு இந்த நூலை நிறைவு செய்வது சிறந்ததாக அமையும்).**

மரியாதைக்குரிய சபையோர்களே!!

நாம் இப்போது இந்த மாநாட்டின் இறுதி அமர்வில் அமர்ந்திருக்கிறோம். நீங்கள் உங்களின் ஊர்களுக்கு செல்லவிருக்கிறீர்கள். இந்த சபையில் இருந்து நீங்கள் களைவதற்கு முன்னால், இந்த மாநாட்டின் ஒரு முக்கிய செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும், என நான் ஆசைப்படுகிறேன். அல்லாஹ்விடம் வாக்குறுதி அளிக்காமல் இந்த சபையிலிருந்து நீங்கள் எழுந்து செல்லக்கூடாது. உங்களது வாழ்க்கையோடு ஆழமான தொடர்பு கொண்ட வாக்குறுதியை நீங்களாகவே வழங்குகிறீர்கள், நிச்சயமாக நமது எதிர்காலம் இந்த வாக்குறுதியை சார்ந்துள்ளது.

நிச்சயமாக இந்த வாக்குறுதி இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

**இதன் முதல் பகுதி:**

இந்த இந்திய நாடு நம் நாடு நம் தாய் நாடு, இந்த நாட்டின் குடிமக்களாகவே வாழ்வோம் என்று முதலில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த நாட்டின் மீது நமக்கு உள்ள உரிமைகள் என்பது இங்கு பிறந்த மூத்த குடி மகன்களைவிட குறைவானது இல்லை, அதேபோல இந்தியாவின் தலைசிறந்த தலைவர்கள் அது நாட்டின் குடியரசு தலைவரோ அல்லது பிரதமரோ யாராக இருந்தாலும் இந்த நாட்டின் மீது நம்மை விட அதிக உரிமைகள் கொண்டவர்கள் என்று வாதிட முடியாது.

இந்த நாடு நமக்கு மிகவும் பிரியமானது. இதன் அரசியல் அமைப்பின் பாதுகாவலர்கள் நாம். இந்த நாட்டிற்கு எதிராக எந்த ஒரு துரோகத்தையும் அல்லது சதித்திட்டத்தையும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

இந்த அகன்ற அழகிய பூமி ஒவ்வொரு அங்குலமும் நமது நிரந்தரமான நினைவுகளை தாங்கி நிற்கிறது, நமது அழகிய காலகட்டத்திற்கு, அபூர்வமான ஆற்றல்களுக்கு, மிகப்பெரிய பங்களிப்புகளுக்கு சாட்சியாக விளங்குகிறது.

இந்த நாட்டை வளமும் முன்னேற்றமும் அடையச் செய்ததில் இதை அலங்கரித்ததில் மற்ற எல்லா மக்களையும் விட நாம் பெரும் பங்காற்றி யிருக்கிறோம். நமது முன்னோர்களின் ஆட்சி காலத்தில் தான், இந்த நாடு புதிதாக மீண்டும் பிறந்தது, நாகரீகம் மற்றும் வளர்ச்சியின் உச்சிக்கு சென்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு புரிந்த



vaigarai velicham official

நாகரிகம் மற்றும் அறிவு சார்ந்த பங்களிப்புகள், மேலும் இந்த நாட்டை மெருகேற்றியது பற்றி அறிய விரும்புவோர் முஸ்லிம்கள் வருகைக்கு முன்பு இந்த நாடு எப்படி இருந்தது என்பதை பார்க்கவும். பின்னர் முஸ்லிம்கள் ஆட்சி செய்த காலத்தில் அது எவ்வாறு வளர்ச்சி அடைந்தது, அவை இப்போது வரை எந்த நிலையில் உள்ளது என்பதை அதனுடன் ஒப்பீடு செய்ய வேண்டும்.

இந்த நாடு நம் தாய் நாடு. இதுவே நமது கூடு. இதிலே நாம் ஒதுங்குவோம். இதிலிருந்தே நாம் பறப்போம். நமக்கு இந்த நாட்டின் மேல் உள்ள உரிமை என்பது ஒரு பறவைக்கு அதன் கூட்டின் மீது உள்ள உரிமையாகும். அது பிறந்து வாழ்ந்த ஒரு தோட்டத்தின் மீது கொண்ட உரிமையாகும். அதன் ஆறுகள் மரங்கள் என அனைத்தையும் கொண்டு மகிழ்ச்சி அடையும், மலர்களைப் பழங்களைக் கொண்டு பாட்டுப் பாடும். தான் விரும்பும் எந்த கிளையிலும் அமரும்.எந்த ஒரு பயமும் அச்சமுமின்றி சுதந்திரமாக காற்றில் பறக்கும்.

நமது தேசப்பற்று உண்மையானது. நமது குடிமக்களின் உரிமைகளை எவராலும் எதிர்க் கவோ மறுதலிக்கவோ முடியாது. இதுதான் உங்கள் கொள்கையாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் எந்தவொரு தயக்கமும் குழப்பமும் கலந்துவிடாமல் எந்தவொரு பயமும் சந்தேகமும் கலந்து கொள்ளாமல் உறுதியோடு இருக்க வேண்டும்.

நாம் இந்திய நாட்டு மக்கள். இந்த நாட்டின் இதர குடிமகன்கள் போலவே வாழ்வோம். இந்த நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சி, மேம்பாட்டு திட்டங்கள், இதன் அரசியல் அந்தஸ்தை உயர்த்துவது என அனைத்திலும் முழு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் பங்களிப்பு செய்வோம். இந்த நாட்டின் கண்ணியம், மேன்மை, மற்றும் அரசியல் சட்டத்தின் ஆன்மாவின் பாதுகாவலர்களாக இருப்போம். ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு குடிமகனும் இந்த நாட்டிற்கு தாங்கள் செய்ய வேண்டிய கடமையை செய்ய தவறினாலும் நாம் கடமைகளை நிறைவேற்றுவோம். ஏனெனில் நீதியான மக்கள் நாம், உயர்ந்த சமூகம் நாம், விசுவாசமான குடிமக்கள் நாம், இது நாம் நம் உள்ளத்திலிருந்து வழங்கிய வாக்குறுதி. இந்த அவையில் அதை புதுப்பிக்க விரும்புகிறோம்.

**இந்த வாக்குறுதியின் இரண்டாவது பகுதி:**

நாம் நமது மார்க்கத்தின் தனித் தன்மை களுடன், நமது இஸ்லாமிய நாகரீகத்துடன், நமது மார்க்க அடையாளங்களுடன், நமது சமூக நெறிமுறைகளுடன், முஸ்லிம் என்ற அடையாளத்துடன் இந்த நாட்டில் வாழ்வோம் என்று வாக்குறுதி அளிக்கிறோம். நமது மார்க்க அடையாளங்களில் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டோம். அவற்றின் சிறு பகுதியை கூட விட்டு விலகமாட்டோம்.

இந்த தனித்தன்மைகளையும், இந்த நாகரீகத் தையும், அடையாளங்களையும் விட்டு முழுமை யாக நீங்கி வாழ்வது நமக்கு ஹராமாக்கப் பட்டுள்ளது.

அப்படியான வாழ்வில் மகிழ்ச்சி, நன்மை என்று எதுவும் இருக்காது.

நமது இஸ்லாமிய கொள்கைகளை அதன் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையின ருக்கும், குழந்தைகளுக்கும் கடத்த முடியா விட்டால் நமக்கு இஸ்லாமிய மார்க்கம் கற்பிக்கபட்டதை போல அவர்களுக்கு அதனை கற்பிக்க முடியாவிட்டால் அவர்களிடம் இஸ்லாத்தையும் அதன் அடிப்படையிலான வளர்ப்பையும் கண்டு நமது கண்கள் குளிர்ச்சி பெறா விட்டால் அப்படியான வாழ்க்கை நல்ல முஸ்லிம்களின் வாழ்க்கை என்று சொல்வது அல்ல சுதந்திரமான கண்ணியமிக்க வாழ்க்கை என்று கூட சொல்ல இயலாது. அது மிருகங்களின், கால்நடைகளின் வாழ்வு, அது மாடுகளின், கழுதைகளின், நாய்களின் வாழ்வு.

ஏனென்றால் ஒரு நாய் அதற்கு தேவையான உணவு, தண்ணீர், எதிரிகளிடமிருந்து போதுமான பாதுகாப்பு, இனப்பெருக்கம் செய்வதற்கான சுதந்திரம்,தனது எஜமான் கையால் பசி ஆறுவது கொண்டு போதுமான திருப்தி அடைகிறது.

அதேபோல ஒரு காளை மாடு அதற்கான தீவனத்தை பெற்று, தனது தொழுவத்தில் பாதுகாப்பாகவோ அல்லது தனது மேய்ச்சல் நிலத்தில் சுதந்திரமாகவோ இருந்தால் அது போதுமானது.

இவை அனைத்தும் நிறைவேறினால் அதன் வாழ்க்கை இனிமையாகி, அதன் ஆசைகள் நிறைவேறி, அதன் சுதந்திரம் முழுமையாகும். அது தனது பிள்ளைகளை ஒரு குறிப்பிட்ட முறையில்

வளர்ப்பது பற்றியும் தனது பிள்ளைகளுக்கு கொள்கைகளை கடத்த வேண்டும் கற்பிக்க வேண்டும் என்றும் சிந்திக்காது.

ஆனால் மனிதன் இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டவன். அவனுக்கான வாழ்வாதாரம் கிடைப்பது, அல்லது வாழ்வாதாரம் தாராள மாக வழங்கப்படுவது, அவனது உணவு தேவைகள், அவனால் எவை இல்லாமல் வாழ முடியாதோ அவை பூர்த்தியாவது, அவனது எதிரிகளிடமிருந்து உயிர், கண்ணியம், செல்வம் ஆகியவை பாதுகாக் கப்படுவது மட்டும் போதாது.

அவன் இத்தோடு சேர்த்து தனது குழந்தை களை வளர்ப்பதை அவர்களுக்கு கற்பிப்பதை சுதந்திரமாக செய்ய வேண்டும் என்று விரும்பு கிறான். அதோடு தன்னுடைய கொள்கையை, சிந்தனையை, கலாச்சாரத்தை, தான் ஈமான் கொண்டுள்ள கொள்கையை, தான் பற்றி பிடித்துள்ள அடிப்படை கோட்பாடுகளை, எந்த மார்க்கத்திற்காக தனது உயிரை அர்ப்பணிக்க தயாராக இருக்கிறானோ அவை எல்லாவற்றை யும் தனது சந்ததிகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான்.

அதேபோல பிற வழிகளை விடுத்து எந்த நேரான வழியை தனக்கு தேர்ந்தெடுத்தானோ அதே வழியில் தனது பிள்ளைகள் அடுத்த தலைமுறை செல்ல வேண்டும் என்று விரும்பு கிறான், அவன் நிராகரிக்கும் கொள்கைகள் எதுவுமே அவர்களை ஆதிக்கம் செலுத்து கூடாது, அவனுக்கு முரணாக இருக்கும் எந்த கலாச்சாரமும் அவனது பிள்ளைகளின் கொள்கையை இடைமறிக்க கூடாது.

அவன் அவர்களை தனது தீனை விட்டு வெளியேறியவர்களாக,அதன் கலாச்சாரத்தை விட்டு விலகியவர்களாக, அதன் தனித்துவத்தி லிருந்து முழுமையான நீங்கியவர்களாக அவர்களை பார்க்கும் போது அவன் தனது பிள்ளைகளிலிருந்து, அவர்களது எதிர்காலத்தில் இருந்து அவர்களது நடத்தையில் இருந்து எந்த வொன்றையும் காப்பாற்ற முடியாது என்பதால் அவர்களுக்கு தனது மார்க்கத்தை கொண்டு சேர்க்க வேண்டும் என்று சிந்திப்பான்.

இறைவனிடம் நாம் வாக்குறுதி அளிப்போம். நாம் கண்ணியமிக்க, சுதந்திரமான மனிதர்களாக இறைவன் மனிதத் தன்மையுடன் கௌரவித்த ஆதமின் பிள்ளைகளாக வாழ்வோம். வீட்டு விலங்குகள்போல செல்ல நாய்களை போல வாழ மாட்டோம். தேவையான உணவு, பானத்தை உட்கொள்ளும் சுதந்திரம், சம்பள உத்தரவாதம்,

உள்ளம் மற்றும் உடல் தேவைகள் பூர்த்தியாவது, போதுமான வேலைவாய்ப்புகள் கொண்டு மட்டும் திருப்தி அடைய மாட்டோம்.

இப்படியான வாழ்க்கை முறையை, இவ்வாறு சிந்திக்கும் முறையை, இந்த வகையான சுதந்திரத்தை, இந்த அளவிலான தேசப்பற்றை நாம் முற்றிலுமாக நிராகரிக்கிறோம்.

கண்ணியத்திற்குரியவர்களே!

இந்த நாட்டை ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்பு வென்றெடுத்து இங்கே வந்தவர் களால் அடிமைப்படுத்தபட்ட மக்களின் வாரிசாக வாழ்ந்து கொண்டிருக்கும் தாழ்த்தப் பட்டோர் இங்கு உள்ளனர். இவர்கள் அடக்கு முறை, வறுமை, பலவீனம் மற்றும் அவமதிப் பிலும் வாழ கட்டாயப்படுத்த பட்டுள்ளனர். இவர்கள் தொட்டால் தீட்டாக கருதுகிறார்கள். இவர்களோடு அமர்வதை அவமானமாக கருதுகிறார்கள். இவர்கள் தங்களோடு உணவருந்த அமர்ந்தால் தண்டிக்கிறார்கள்.

மத்திய ஆசியாவில் இருந்து வந்தவர்கள் இந்தியாவை வெற்றி கொண்ட தொடக்க நாட்களிலேயே இந்த துயருமிகு மக்கள் (அவர்களை எதிர்த்து போராடாமல்) தங்களுக்கு எதிரான குற்றத்தை தாங்களே இழைத்து கொண்டார்கள். அதன் சுமையை இன்று வரை சுமக்கின்றனர். இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் அதை சுமப்பார்கள். ஏனென்றால் அவர்கள் கண்ணியமான மரணத்தை விட அவமானமான வாழ்க்கையை தேர்ந்தெடுத்தனர்.

நிச்சயமாக ஒரு சமூகம் ஒரு முறை செய்த தவறுக்கான தண்டனையை ஆயிரம் ஆண்டு சுமக்கும். இப்படியான தவறை நாம் செய்ய விரும்பவில்லை. நாய்களை போல, தாழ்த்தப்பட் டோர்களை போல வாழாமல் கண்ணியமும் மரியாதையும் கொண்ட வாழ்க்கையை இந்தியாவில் வாழ நாம் வாக்குறுதி அளிப்போம்.

நாம் இங்கே அடிமைகளாக வாழ மாட்டோம் இந்த நாட்டின் மக்கள் நாம் இந்த நாட்டின் மற்ற மக்களுக்கு இருப்பது போலவே உரிமைகளும் வாய்ப்புகளும் நமக்கும் உள்ளன. நாம் இந்த நாட்டை கட்டி எழுப்பியவர்கள்,


vaigarai velicham official

இதன் நாகரீகத்தின் நிறுவனர்கள், இதற்கு உபகாரம் செய்தவர்களாகவும் இருக்கிறோம். இந்த இயல்பான உரிமைகளை, அரசியலமைப்பு உரிமைகளையும் உலகில் எந்த சக்தியாலும் நம்மிடமிருந்து பறிக்க முடியாது.

அடிமைத்தனம் மற்றும் காலனித்துவத்தின் சகாப்தம் முடிந்து விட்டது. இன்றைக்கு எந்தவொரு சமூகமும் மற்றொரு சமூகத்தை அடிமைப்படுத்த முடியாது. ஒரு நாகரீகம் மற்றொரு நாகரீகத்தை அழிக்க முடியாது. ஒரு மொழி மற்றொரு மொழியை ஒழிக்க முடியாது.

இன்று உலகம் ஒரு குடும்பமாக மாறி விட்டது. எந்தவொரு அநீதியும், அல்லது ஒடுக்கு முறையும் உலகின் எந்தப் பகுதியில் யாரும் அறியாத வகையில் நடைபெற முடியாது. உலக மனசாட்சி விழித்திருக்கிறது. ஆப்பிரிக்காவின் கருப்பினத்தவன் அநீதிக்கு ஆளானாலும், அமெரிக்காவில் வெள்ளையன் அடக்குமுறைக்கு ஆளானாலும் உடனே உலக மனசாட்சி குரல் கொடுக்கும்.

நாம் குறிப்பாக முஸ்லிம்கள். கொள்கையால், மார்க்கத்தால், இஸ்லாமிய சகோதரத்துவத்தால் இணைக்கப்பட்ட உலகம் முழுவதும் பரவி இருக்கும் ஒரு உலக குடும்பமாக இருக்கிறோம். பூமியின் எல்லா மூலைகளிலும் நமக்கு ஏற்படும் வலிக்காக துன்பமடையும் சகோதரர்கள் உள்ளனர்.

இந்தியாவின் அரசியல் அமைப்பிற்கு இழைக்கப்படும் அநீதியையும் அதற்கு எதிராக செய்யப்படும் கிளர்ச்சியையும் எதிர்த்து நாம் போராடுவோம்.

மனித குலத்திற்கும் இந்த நாட்டிற்கும் சேவை செய்த அந்த மகத்தான திறமைகள் இன்றும் நம்மிடம் உள்ளன. நமது சிந்தனையை, நமது பண்பாட்டை நிச்சயமாக நாம் இழக்கவில்லை.

ஒரு காலத்திலும் பூமியில் மேல் பொழிந்த நமது மேகங்கள் வெறுமையானதாக ஆகவில்லை. அது இன்றும் நீரும், வளமும் நிறைந்ததாக இருக்கிறது.

சகோதரர்களே!!!!


இறைவனது அருளிறங்கும், துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும், உள்ளங்கள் தூய்மையாகும் இரவின் மூன்றாவது இறுதி பகுதியில் இருக்கிறோம்.

இப்படியான நேரத்தில் நாம் தூய்மையான எண்ணத்தை கொண்டு இந்த வாக்குறுதி அளிக்கிறோம்.

இந்த நாட்டில் நாமும் நமது வருங்கால சந்ததிகளும் இஸ்லாத்துடன் இருப்போம். இந்த உன்னத நோக்கத்திற்காக மலிவானது விலை உயர்ந்தது என அனைத்தையும் நாம் அர்ப்பணிப்போம். இதற்காக இன்பத்தையும் துன்பத்தையும் தாங்கிக் கொள்வோம்.

அல்லாஹ் கூறும் சூரத்துல் அஹ்ஸாப்பின் இந்த வசனத்தில் இரு அணிகளில் ஒரு அணியாக நாம் இருக்கவேண்டும்,


நம்பிக்கையாளர்களில் ஆண்கள் பலர் இருக்கின்றனர். இவர்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை உண்மையாக்கி வைத்தார்கள். அவர்களில் பலர் (இறந்து "ஷஹாதத்" என்னும்) தங்கள் இலட்சியத்தை அடைந்துவிட்டனர். வேறு சிலர் (மரணிக்கவில்லை என்றாலும் அதனை அடைய ஆவலுடன்) எதிர்பார்த்தே இருக்கின்றனர். (என்ன நேரிட்டாலும் அவர்கள் தங்கள் வாக்குறுதியிலிருந்து) ஒரு சிறிதும் மாறுபட்டு விடவேயில்லை. *(33:23)*





ஆய்வுக் கட்டுரை

# தமிழகத் துறைமுகங்களில் கப்பலோட்டிய கீழக்கரை முஸ்லிம்கள்





டாக்டர். **ஜெ.ராஜா முகமது**
உதவி இயக்குநர், (ஓய்வு)
தமிழ்நாடு அருங்காட்சியகத்துறை


**19ஆம்** நூற்றாண்டின் தொடக்கத்தில் கீழக்கரை முஸ்லிம் வணிகர்கள் பலர் தமிழக இலங்கை கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த செய்திகள் ஆங்கிலேயரின் பதிவேடுகளில் நிறைய காணப்படுகின்றன. 1860-70ம் ஆண்டுகளில் கீழக்கரைத் துறைமுகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பட்டியலை திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் பதிவேடு (கெசட்) தெரிவிக்கிறது. இலங்கையிலிருந்து இறக்குமதியான பொருட்களில் இரும்புக் கம்பிகள், செம்பு, பித்தளை, தகடு, பாக்கு, மூங்கில் ஆகியனவும், இலங்கைக்கு ஏற்றுமதியானப் பொருட்களில் வண்ணத் துணி வகைகள், பலசரக்கு சாமான்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

பெரியதம்பி மரக்காயர் குடும்பத்தின் வழிவந்த ஹபீபு முகம்மது மரக்காயர் புகழ்பெற்ற கப்பல் வணிகராகத் திகழ்ந்தவர் ஆவார்.

இவருக்குச் சொந்தமாகப் பல கப்பல்கள் இருந்தன. இவரது செல்வச் சிறப்பு கருதி இவரை ஹபீப் அரசர் என அழைத்தனர். இவரது வணிகப் பெருக்கத்தினை கண்ட ஆங்கிலேயர் இவரை "வணிக இளவரசர்" (Merchant Prince) என அழைத்தனர். ரத்தினக்கற்கள் மற்றும் முத்து வணிகத்தில் இவர் கொடி கட்டிப் பறந்தவராக பதிவேட்டுச் செய்திகள் காட்டுகின்றன. மன்னார் வளைகுடாவில் முத்துக்குளிக்கும் உரிமையும், சங்கு குளிக்கும் உரிமத்தினையும் பல ஆண்டுகளுக்கு இவருக்கே ஆங்கிலேய அரசு அளித்தது. இலங்கை ஆங்கிலேய அரசு அலுவலர்களிடம் இவர் மிகவும் செல்வாக்குடன் விளங்கினார்.

கொழும்பில் ஆங்கிலேய உயர் அலுவலர்கள் வசிக்கும் கோட்டை வாயில் வழியாக பல்லக்கில் செல்லும் சிறப்பினை ஆங்கிலேய அரசு இவருக்கு வழங்கி இருந்ததை 1809ம் ஆண்டு பதிவேட்டுச் செய்தி குறிப்பிடுகிறது.

முஸ்லிம் வணிகர்களின் உபயோகத்திற்காக இவர் கல்கத்தாவிலும், ராமேஸ்வரத்திலும் சாவடிகள் கட்டி வைத்து இருந்தார். கல்கத்தாவில் உள்ள 'சோழியர் பள்ளிவாசல்' இவர் கட்டியதே ஆகும். அது இன்றும் இப்பெயரிலேயே அழைக்கப்படுகிறது. இவரும் ஒரு பெரும் வள்ளலாகத் திகழ்ந்தார். இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றிற்கு இவர்

கொடை நாயகராக காட்டப்படுகிறார். கிழக்குக் கடற்கரை பட்டினங்கள் பற்றியதொரு ஆங்கிலேயரது குறிப்பில், கீழக்கரை,

ஹபீபு முகம்மது மரக்காயர் வசிக்கும் ஊர் என்று சிறப்பித்துப் பேசுகிறது. கீழக்கரையில் உள்ள ஓடக்கரைப் பள்ளிவாசல். இவரது வழிவந் தோர்களால் கட்டப்பட்டதாகும். திராவிட முஸ்லிம் கலைப் பாணியில் இன்றும் இந்தப் பள்ளிவாசல் அவர்களது பெயர் பொறிப்புடன் காட்சியளிக்கிறது. (நியூசிலாந்து அருங்காட்சி யகத்தில் தமிழ் எழுத்துக்களுடன் கூடிய மணி இவரது கப்பல் ஒன்றிற்கு சொந்தமானது என்று பல கட்டுரைகளிலும், நூல்களிலும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இதற்குச் சான்றுகள் எதையும் காட்ட இயலாமல் உள்ளது.

ஹபீபு மரக்காயரின் மகன் ஷேக் சதக்கத் துல்லா மரக்காயர் கப்பல் வணிகராகவும், பல கப்பல்களுக்கு உரிமையாளராகவும் விளங்கினார்.

இவரது வணிக நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு சிறப்புச் சலுகைகள் வழங்கியி ருந்ததை ஆங்கிலேயரின் 1823ம் ஆண்டு பதிவேடு ஒன்று தெரிவிக்கிறது. ஹபீபு மரக்காயரின் சகோதரர் அப்துல் காதர் சாயபு மரக்காயர், இலங்கை கீழக்கரை இடையே வணிகம் செய்த கப்பல் உரிமையாளர், 1821ல் இவர் ஹஜ் பயணம் மேற்கொண்டு சென்றபோது "இவர் ஆங்கிலேயரின் நம்பிக்கைக்குரிய நண்பர் எனவும், எனவே, அவருக்கு சிறப்புகள் செய்யும் படியும் சலுகைகள் வழங்கும்படியும், "இலங்கை ஆங்கிலேய அரசு தங்களது கூட்டாளி நிர்வாகிகளுக்கு இவரை அறிமுகம் செய்து கடிதம் கொடுத்துள்ள செய்தி தெரிய வருகிறது. கீழக்கரை அகமது ஜலாலுதீன் மரக்காயர் ஏழு கப்பல்களுக்கு உரிமையாளர், கீழக்கரையிலிருந்து இவரது கப்பல்கள், இலங்கை, மேற்கு கடற்கரைத் துறைமுகங்கள், தமிழகத்தின் ஏனைய துறைமுகங்கள் ஆகிய வற்றிற்கு சென்று வந்தன. சுல்தான் அப்துல்காதர் மரக்காயர் என்றும் கப்பல் வணிகர், 1807ல் இயற்றப்பட்ட ராஜநாயகம், இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் புகழ்ந்து பேசப்படுகிறார். இவர் ஒரு வள்ளல் என இந்நூல் குறிப்பிடுகிறது.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் கீழக்கரையின் பிரிதொரு பிரபலமான கப்பல் வணிகர். இவரது கொடையில் பல இலக்கியங்கள் விரிந்தன. இவர் மாதிரியா தரிக்காவைச் சேர்ந்த சூபி ஞானியாவார். இலங்கையிலும் கீழக்கரையிலும் கப்பல் வணிகர்கள் மத்தியில் இவருக்கு இருந்த செல்வாக்கினால் இலங்கை மற்றும் கீழக்கரை துறைமுகங்களுக்கு வந்து செல்லும் கப்பல்கள் ஒவ்வொன்றும், ஒரு ரூபாய், கீழக்கரையில் இவர் நடத்தி வந்த அருசியா அரபிக் கல்லூரிக்கு நன்கொடையாக அளித்து வந்தன என்பது சிறப்பான செய்தி.

இவரது மகன் அப்துல்காதர் மரக்காயர் தந்தை வழியில் 1912ம்ஆண்டு வரை பெரும் கப்பல் வணிகராகத் திகழ்ந்தார். வாப்பு நைனா பிள்ளை மரக்காயர் 19ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் வாழ்ந்த ஒரு சிறப்பு பொருந்திய கப்பல் வணிகராவார். இவருக்குச் சொந்தமாக இரண்டு கப்பல்கள் இருந்தன. இவை இலங்கை, கல்கத்தா, கொச்சி ஆகிய துறைமுகங்களுடன் வாணிபம் செய்து வந்தன. இந்தக் கப்பல் ஒன்றின் மதிப்பு ரூ.4000/- என இவர்களது குடும்ப ஆவணம் ஒன்று. தெரிவிக்கிறது. இவரது மகன்கள் சையது காசிம் மரக்காயர், முத்து இப்ராகிம் மரக்காயர், கிருது நைனா மரக்காயர், மொகிதீன் அப்துல் காதர் மரக்காயர், சையது முகமது மரக்காயர் ஆகியோர் கப்பல் வாணிபம் செய்து வந்துள்ளனர்.

ஆங்கிலேயரது மதுரை மற்றும் திருநெல் வேலி மாவட்டப் பதிவேடுகளில் கீழக்கரையைச் சேர்ந்த செய்யது அப்துல் காதர் மரக்காயார் என்பவரை 1802ம் ஆண்டு முதல் தொடர்ந்து 20 ஆண்டுகள் வரை இப்பகுதியின் மிகப்பெரிய கப்பல் வணிகராகவும் கப்பல் உரிமையாள ராகவும் காட்டடப்படுகிறார்.

இவரது கப்பல்கள் கீழக்கரை, காயல் பட்டினம், குலசேகரப்பட்டினம். வேம்பார் ஆகிய துறைமுகங்களிலிருந்து இலங்கை மற்றும் கல்கத்தா துறைமுகங்களுடன் வாணிபகத்தில் ஈடுபட்டு இருந்த செய்திகள் நிறைய கிடைக்கின்றன.

ராமநாதபுரம் சேதுபதி இவரது வணிக நடவடிக்கைகளுக்கு பல சலுகைகள் அளித் திருந்தார். தனது கப்பல்களில் சொந்த முதலீட் டில் வணிகம் செய்து வந்தவர் என்றும், எனவே இவருக்கு அரசு வழங்கும் குத்தகைகளுக்கு

பிணை ஏதும் பெறத் தேவையில்லை எனவும் ஆங்கிலேயரின் பதிவேடுகள் கூறுகின்றன. ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்ட கடற்கரைப் பகுதியில் முத்துக்குளித்தல் மற்றும் சங்கு குளிக்கும் உரிமம் இவருக்குப் பலமுறை வழங்கப்பட்டு இருந்தது. இத்தகைய குத்தகைகளில் ஆங்கிலேய வணிகர்களை விட அப்துல் காதர் மரக்காயருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட செய்திகளும் தெரிய வருகின்றன. இவரைத் தொடர்ந்து இவரது மகன் ஹனிபா மரக்காயரும் பிரபலமான கப்பல் வணிகராக விளங்கினார்.

19ம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கீழக்கரை துறைமுகத்திலிருந்து கொழும்பு துறைமுகத்திற்கு ஒரு சில கப்பல்களும் கல்கத்தாவிற்கு சங்குகள் ஏற்றிக் கொண்டு சில சிறிய கப்பல்களும் சென்று வந்தன.

இவையும் குறைவான கொள்ளளவு கொண்ட தோணி வகையைச் சேர்ந்தவை, பரதவர்கள் பலர் கப்பல் உரிமையாளர்களாக உருவாகி கப்பல்களிலும் முஸ்லிம்களே இருந்தனர். ஆனால் எல்லா நகுதாக்களாகவும், மாலுமிகளாகவும் இருந்தனர்.

முத்துக்குளித்தல் சங்கு குளித்தல் கீழக் கரையின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகித்தது. முத்து வணிகம் செய்யும் வணிகர்களும், முத்துக் குளிக்கும் தொழிலாளர்களும் நிறைந் திருந்தனர். முத்துக்குளிக்கும் உரிமம் குத்தகை யாக அளிக்கப்பட்ட போது முஸ்லிம் வணிகர்களே முன்னணியில் இருந்தனர். இத்தகைய வணிகர்கள் பலரது பெயர்கள் பதிவேடுகளில் காணப்படுகின்றன. காலக்கிரமத்தில் 20ம் நூற்றாண்டில் தொடக்கத்தில் முத்துக் குளிக்கும் தொழில் முற்றிலும் நசிந்துபோனது.

இத்தொழிலில் ஈடுபட்டிருந்தோர் வேறு தொழில்களைத் தேடிச் செல்ல வேண்டிய தாயிற்று. இதன் மூலம் இப்பகுதியின் பொருளா தாரம் பாதிக்கப்பட்டது.

உப்பு காய்ச்சுதல், உப்பு வணிகத்திலும் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் பலரது பெயர்கள் ஆங்கிலேயரது பதிவேடுகளில் காணப்படு கின்றன. முஸ்லிம் வணிகர்கள் தங்களது கப்பல்களில் உப்பு ஏற்றிச் சென்று அருகிலிருந்த



சிறிய துறைமுகப் பகுதிகளில் விற்று வந்தனர். ஹபீபு மரக்காயர் கீழக்கரைக்கு அருகிலிருந்த ஆனைப்பார் தீவில் கிடைத்த மண்ணுப்பை (Earth salt) சேகரித்து ஏற்றுமதி செய்து வந்தார். பின்னர் இத்தொழிலும் அரசுமயமானது. உப்பு வணிகமும் முஸ்லிம்களின் கையிலிருந்து முற்றிலுமாக நழுவியது. இவ்வாறாக வணிகத் திலும், கல் சார்ந்த தொழில்களிலும் வாய்ப்புக் களை இழந்த முஸ்லிம்கள் இலங்கைக்கு குறு வணிகர்களாகவும், தொழிலாளர்களாகவும் குடிபெயர்ந்தனர். கீழக்கரையிலிருந்து இலங்கை துறைமுகங்களுக்கு சென்ற முஸ்லிம்களின் சரக்கு கப்பல்கள் நிறைய பயணிகளையும் ஏற்றிச் சென்றன. இவ்வாறு சென்றவர்களின் கடவுச் சீட்டுக்கள் (பாஸ்போர்ட்) தமிழில் வழங்கப்பட்டதாக இலங்கையில் கிடைக்கும் பதிவேடுகள் மூலம் தெரிய வருகிறது.

பெரிய கப்பல்களையும், கப்பல் வணிகர் களையும் சந்தித்துக் கொண்டிருந்த கீழக்கரைத் துறைமுகம் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தி லிருந்து தனது சிறப்பை இழந்தது. பெரிய கப்பல்கள் பாய்மரத் தோனிகளாயின! தங்களது தொலை தூரப் பயணங்களை மறக்க முடியாத முஸ்லிம் வணிகர்கள் சிலர் இத்தோனிகளில் கரையோர கிராமங்களுக்குச் சென்று சில்லரை வணிகத்தில் ஈடுபட்டனர். இந்தத் துறைமுகத்தின் கதை தொடருமா?


vaigarai velicham official



# என்னுடைய சொத்துக்கள் அனைத்தும் பாலஸ்தீன மக்களுக்காக!

## எழுத்தாளர் சாலிரூனி

**பாலஸ்தீன்! - காஸா!** இங்கே அப்பாவி முஸ்லிம்களைக் கொத்துக் கொத்தாக கொலை செய்து வருகின்றது இஸ்ரேலிய இராணுவம்.

66 அப்பாவிகளை (இன்றவும் 30/9/2025) கொலை செய்திருக்கின்றது. 1,67,000 அப்பாவிகள் காயம் பட்டிருக்கின்றார்கள். காணாமற் போனவர்கள் 19,000 பேர்.

இன்றளவும் கொலை செய்யப்பட்ட குழந்தைகள் 16,000. அநாதைகளாக ஆக்கப் பட்ட குழந்தைகள் 22,000.

இப்படி ஓர் இனப்படுகொலைகளை கூட்டுப்படுகொலைகளை இஸ்ரேல் நிறைவேற்றி வருகின்றது.

உலக மக்கள் அனைவரும் இந்தக் கொடூரத்தை ஓரணியில் நின்று கண்டிக்கின்றார்கள். உண்ணா நோன்பிருந்து நாங்கள் அந்த மக்களோடு இருக்கின்றோம் என்பதைக் காட்டி வருகின்றார்கள்.

எழுத்தாளர்கள், கலைஞர்கள், சினிமா துறையில் இருப்பவர்கள், இவர்களெல்லாம், தங்களால் இயன்றதையெல்லாம் செய்து வருகின்றார்கள் என்றால் அது மிகையல்ல.

பல பெண்கள், இந்த மக்களுக்குத் தங்களால் இயன்றதையெல்லாம் செய்து வருகின்றார். அவர்கள் அத்தனை பேரையும், அவசியம் பட்டியலிட வேண்டும் என்பது எமது நோக்கம். அதற்குக் காலம் பிடிக்கும்.

எனினும் சில குறிப்பிட்ட நிகழ்வுகளை இங்கே தருகின்றோம்.

எடுத்துக்காட்டாக : ஐயர்லாந்தைச் சார்ந்த ஒரு எழுத்தாளர் பெயர் சாலிரூனி. இவர் மிகவும் சிறந்த எழுத்தாளர். 20-2-1991 பிறந்தவர்.

உலகெங்கிலுமுள்ள பல பிரபல்யமான கல்விக் கூடங்களில் கல்வி கற்றவர். இவருடைய முழுப் பெயர் சாலி ரூனி. ஆனால் ரூனி என்றே அறியப்படுகிறார்.

இவர் தன்னுடைய எழுத்துக்களால் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்தவர்.

இவருடைய புதினங்கள் (Novels) பல தொலைக்காட்சித் தொடர்களாக வந்திருக் கின்றன. மக்கள் மத்தியில் அதிகத் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

இவருடைய நாவல்களும்-புதினங்கள். எப்போதுமே மக்களிடம் பேசு பொருளாக ஆகியிருக்கின்றன. இவர் இளைஞர்கள், எதிர்கொள்ளும் பிரச்சனைகள், சிக்கல்கள், இவற்றையே தன்னுடைய அழகிய ஆங்கில நடையில் சிந்திப்பவர். அதனால்தான் இவர் மிகப்பெரிய விவாத பொருளாக, உலா வருகின்றார்.

சீனாவிலும், அமெரிக்காவிலும் இவருடைய புதினங்கள் பலமுறை முன்னணி விற்பனையைப் பிடித்திருக்கின்றன. பல விருதுகளும் அவரைத் தேடி வந்திருக்கின்றன.

ஆங்கில நாட்டில் (United Kingdom) ஆங்கில எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் COSTA Award - கோஸ்டா விருது அவருக்கு வழங்கப்பட்டது. (2018).

அதே ஆண்டில் (2018) ஐரீஷ் புத்தக விருது வழங்கப்பட்டது.

விருதகளால் உற்சாகம் பெற்ற ரூனி இன்னும் எழுதிக்கொண்டே இருந்தார்.

இவர் தன்னுடைய எழுத்துக்கள் வழி சமுதாயத்தில் ஏற்படுத்திய ஆழமான தாக்கங்களின் பயனாக இவருக்கு 2019ஆம் ஆண்டுக்கான ENCORE Award - என்கோர் விருது வழங்கப் பெற்றது.

இஃதோர் விசித்திரமான விருது எனச் சொல்லிட வேண்டும். காரணம், பெரும்பாலும் பெரிதாக விளம்பரப்படுத்தப்படும் ஆசிரியர்களுக்கு அல்லது எழுத்தாளர்களுக்கே விருதுகளை வழங்குகின்றார்கள்.

இந்த விருது பெரிய தாக்கங்களை ஏற்படுத்திடும் எழுத்தாளர்கள், ஆனால் விளம்பர வீதியில் வலம் வராதவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்தவகையில் 2019ஆம் ஆண்டு சாலிரூனிக்கு (2019ஆம் ஆண்டில் வழங்கப்பெற்றது.) விருதை அவருக்குப் பெற்றுத் தந்த நாவல் "Normal People" விருதுடன் 10,000 பத்தாயிரம் பவுண்ட் ஸ்டெர்லிங் - என்கின்ற ஆங்கில நாட்டு நாணயம் வழங்கப்பட்டது. 2022ஆம் ஆண்டில் "டைம்" என்ற பத்திரிகை அவரை மிகவும் அர்த்தமுள்ள பெண் என - அறிவித்து, - இதனை அடித்தட்டு மக்களின் வரலாறு எனலாம்.

இப்படி எழுத்துலகில் கொடி நாட்டிய அவர், பாலஸ்தீன் மீதும், அதன் மக்கள் படும் அவலங்களின் மீதும் தனது கூரிய பார்வையை செலுத்தி வந்தார்.

இப்போது காஸாவில் நடக்கும் படுகொலைகளுக்கு முன்னரே பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் கட்டவீழ்த்து அநியாயங்களைக் கவனித்தவர்.

தொடக்கத்தில் அவற்றை வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எதிர்த்தும் வந்தார்.

இவருடைய புதினங்களில் பலவற்றை இஸ்ரேல் முழுவதும், புத்தக விற்பனையாளர்கள், விற்று வந்தார்கள். அவர்களில் பலர் அவருடைய நூல்களை ஹீப்ரு மொழியில் மொழிபெயர்க்க விரும்பினார்கள்.

இந்நிலையில் ஜூலை 2005ஆம் ஆண்டில் பாலஸ்தீன முஸ்லிம்கள் ஓர் இயக்கத்தை தொடங்கினார்கள். அதன் பெயர் BDS என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. இதன்பொருள் Boycott, Divestment and Sanctions என்பதாகும்.

அதாவது இஸ்ரேலிய பொருள்களை உலக அங்காடிகளில் வாங்காமல் புறக்கணிப்பது. (Boycott) .

இஸ்ரேலின் கம்பெனிகளில், தொழில் நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்வதை புது...

ஏற்கெனவே முதலீடு செய்திருந்தால் அதனை திருப்பப்படுவது (Disinestment)

அடுத்து பொருளாதார தடைகளை இஸ்ரேல் மீது பொதுவாகவும் இஸ்ரேலிய தீவிரவாதிகள் மீதும் பொருளாதார தடைகளைக் கொண்டு வருகிறது. அவர்கள் சொத்துக்களை வெளிநாடுகளில் முடக்குவது இதெல்லாம் எதுவரைக்கும் என்றால்,

1. இஸ்ரேல் தான் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பாலஸ்தீன நிலங்களிலிருந்து வெளியேறும் வரை.

2. மேற்குகரையை பிற பகுதிகளிலிருந்து பிரிக்கும் தடுப்புச் சுவர்களை முற்றாக அழிக்கும் வரை.

3. அரபு-பாலஸ்தீன குடிமக்களுக்கு சரிசமமான சுதந்திரத்தை வழங்கும் வரை.


vaigarai velicham official

4. பாலஸ்தீனிலிருந்து விரட்டப்பட்ட மக்களை மீண்டும் பாலஸ்தீனம் கொண்டுவந்து அவர்களின் பூர்வ இடங்களில் அவர்களை குடியமர்த்தும் வரை.

(குறிப்பு - இந்த Right to Return என்ற உரிமை தொடக்க நாள்களிலிருந்தே பாலஸ்தீன மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையும் இந்த ஒப்பந்தங்களும் வாக்களித்தவை.)

இந்த அமைப்பின் லட்சியங்களும், உலகெங்கும் விரிந்து செயல்பாடுகளும் சாலி ரூனிக்கு நன்றாக பிடித்தது. ஆகவே அன்று முதலே - இந்த இயக்கத்தில் இணைந்து செயல்பட்டு வருகிறார்.

எழுத்துத் துறையில் ஏராளமாக வருமானத்தை ஈட்டிய அவர். இஸ்ரேலின் புத்தக விற்பனையாளர்களுக்கு, தனது புத்தகங்களை விற்பனை செய்யும் உரிமையை தந்திட இயலாது என மறுத்துவிட்டார்.

தனது நூல்களை மொழிபெயர்க்கும் உரிமையும் யாருக்குமில்லை எனக் கூறிவிட்டார்.

அப்படி மொழிபெயர்ப்பு உரிமையோ தர வேண்டும் என்றால், நீங்கள் BDS அமைப்பில் இணைந்திட வேண்டும் என நிபந்தனை விதித்தார். பலர் யூதர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு BDS இயக்கத்தில் இணைந் தார்கள்.


20-8-2025 அன்று தனது மொத்த சொத்துக்களும் காஸா மக்களுக்கு என அறிவித்தது, உலகிலுள்ள எழுத்தாளர்களின் கவனத்தை காஸாவின் பக்கம் திருப்பி உள்ளார்.


வாழ்க அவர் தொண்டு.

இப்படி எத்தனையோ மேலை நாட்டு சகோதர, சகோதரிகளின் வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிடலாம்.

ஆனால், இந்த அரபு நாட்டு வெள்ளைப்பு புர்கா கல்நெஞ்சர் இஸ்ரேல் / அமெரிக்கா ஆகியவற்றுக்கு அல்லாஹ்வின் பூமி தரும் இயற்கை வளங்களை அள்ளித் தருகின்றன.

இந்த காஸா இனப்படுகொலைகளுக்கு எல்லா விதத்திலும் துணை நிற்கின்றார்கள்.




# UAPA வழக்குகளில் ஜாமீனும், குழப்பங்களும்

**இந்த** பகுப்பாய்வு, கர்நாடகா உயர்நீதி மன்றத்தின் தீர்வை, UAPA சட்டத்தின் கீழ் உருவாகியுள்ள நவீன ஜாமீன் நீதிச் சிந்தனையின் பார்வையில் வைத்து, Union of India v. Saleem Khan (2025) வழக்கை விவரமாக ஆராய்கிறது.

2020இல் இந்த வழக்கு ஆரம்பித்தது. பெங்களூரில் உள்ள சுத்தகுண்டபாளையம் காவல் நிலையத்தில், 17 நபர்கள் மீது, UAPA, IPC, ARMS ACT போன்ற சட்டங்களின் கீழ் FIR பதிவு செய்யப்பட்டது. பின்னர் இந்த வழக்கின் விசாரணை NIAக்கு மாற்றப்பட்டது (RC No. 4/2020/NIA/DLI). இந்த வழக்கின் 11வது குற்றவாளியாக சலீம் கான், மற்றும் 20வது குற்றவாளியாக முஹம்மது ஸைதும் சேர்க்கப் பட்டனர். இதில் 11வது குற்றவாளியாக சேர்க்கப் பட்ட சலீம் கான், “அல்ஹிந்த்” என்ற அமைப் போடு தொடர்புடையவன் என்றும், அந்த அமைப்பு நடத்திய “ஜிஹாதி வகுப்புகளில்” கலந்து கொண்டான் என்றும் குற்றப்பத்திரிகை கூறுகின்றது.

**இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு செல்லும் முன்**

சலீம் கான் மற்றும் முஹம்மது ஸைத் இருவரும், “எங்களுக்கும் தீவிரவாத அமைப்புகளுக்கும் சம்மந்தமில்லை. பொய்யாக ஜோடித்து எங்களை இந்த வழக்கில் இணைத்துள்ளார்கள். எந்த ஆதாரங்களும் இல்லாமல் எங்களை நீண்ட நாட்களாக சிறையில் வைத்துள்ளனர். இதனால் எங்களது குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, வருமானம் இல்லாமல் ஏழ்மை நிலைக்கு சென்றுவிட்டனர்.” எனக்கூறி பிணைக்கு விண்ணப்பிக்கிறார்கள்.

**NIA சிறப்பு நீதிமன்றத்தில்**

ஆனால், என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றம் UAPA சட்டப்பிரிவு 43D(5)-யை பயன்படுத்தி, இவர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் உண்மைதான் எனக்கூறி, பிணை மனுவை நிராகரித்து விட்டது.

**கர்நாடகா உயர்நீதிமன்றத்தில்**

கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்கிறார்கள் இருவரும். அதில், சலீம் கானுக்கு என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, மாற்றி ஜாமீன் வழங்கப்பட்டது. அதே சமயம், முஹம்மது ஸைதுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டதையும் அங்கீகரித்தது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் வாதத்தின் படி, “நாங்கள் தீவிரவாத இயக்கங்களோடு தொடர் புடையவர்கள் என்பதற்கான எந்த உறுதியான ஆதாரங்களும் இல்லை.” என்று வாதிட்டனர்.

UAPA சட்டத்தின் அட்டவணை 1இன் கீழ், “அல் ஹிந்த்” என்பது ஒரு தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல என்பதால், கைது செய்யப் பட்டவர்கள், ஒரு தீவிரவாத குழுவோடு தொடர்பில் இருந்தவர்கள் என அரசு தரப்பால் நிருவ இயலவில்லை.

குற்றப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள, சதி திட்டங்களுக்கான கூட்டம், ஜிஹாதி வகுப்புகள் போன்றவைகள், நடந்த இடம், தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

கூடாரங்கள், கத்திகள், மற்றும் துப்பாக்கி பயிற்சியில் ஈடுபட்டதற்கான பதிவுகள் போன்றவைகளை கைப்பற்றுவது, ஒருவர் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்பதற்கான ஆதாரங்களாக அமையாது.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் பற்றிய சாட்சிகளின் வாக்குமூலங்கள், குற்றம் சாட்டப் பட்டவர்களை எந்தவொரு தீவிரவாத நடவடிக்

கைகளுடனும், நேரடியாக தொடர்புப்படுத்த வில்லை.

அரசு தரப்பின் எதிர்வாதமானது, குற்றம் சாட்டப்பட்ட இருவரும், அல்ஹிந்த் அமைப்பின் முக்கிய உறுப்பினர்களுடன் இணைந்து சதித் திட்ட சந்திப்புகளில், நேரடியாக ஈடுப்பட் டுள்ளனர் என்று வாதிட்டது.

சலீம் கான் 2015 முதல் இந்த வழக்கின், முதன்மைக் குற்றவாளியின் நெருங்கிய கூட்டாளி யாக இருந்தார். அவர் அல்-ஹிந்த் குழுவிற்கு ஆட்சேர்ப்பு செய்பவராகவும், அமைப்பாள ராகவும் செயல்பட்டு வந்துள்ளார்.

முஹம்மது ஸைத் மீது, ஏற்கனவே ஒரு என்.ஐ.ஏ வழக்கு இருக்கிறது. மேலும் அவர் பல இடங்களில் சதித்திட்டங்களுக்கான கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளார்.

மேலும் இவர்கள் தற்காப்பு சண்டை பயிற்சி களை மேற்கொண்டதற்கான ஆதாரங்கள், இவர்கள் ஜிஹாத் போன்ற ராணுவ நடவடிக்கை களுக்கு தயாராக இருப்பதை காண்பிக்கின்றன.

### ஒரு தீவிரவாத அமைப்பின் உறுப்பினர் யார்?

சலீம் கானுக்கு எதிராக சுமத்தப்பட்ட ஹிகிறிகி பிரிவுகள்;

பிரிவு 18 (பயங்கரவாதச் செயலைச் செய்ய சதி செய்தல்), பிரிவு 18A (பயிற்சி முகாம்களை ஏற்பாடு செய்தல்), பிரிவு 20 (பயங்கரவாத கும்பல் அல்லது அமைப்பின் உறுப்பினர்), பிரிவு 39 (பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவு வழங்குதல்)

இந்த குற்றங்களுக்கான பதிவு செய்யப்பட்ட ஆதாரங்கள், ஒரு அமைப்புடன் தொடர்பில் இருந்தான், அந்த அமைப்பு நடத்திய கூட்டங் களில் கலந்துகொண்டான் போன்ற குற்றச் சாட்டுகளே ஆகும்.

ஒரு சாதாரண குடிமகனுக்கு கூட இது, குழப்பமான, தெளிவற்றதாக தோன்றும். சட்டப்படி, ஒரு தீவிரவாத ஆமைப்பின் “உறுப்பினர்” என்பதற்கான வரையறை என்ன?

தீவிரவாத கும்பல் அல்லது அமைப்பில் உறுப்பினராக இருக்கும் எந்தவொரு நபரும், பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டால், அவருக்கு ஆயுள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று UAPA பிரிவு 20 கூறுகிறது. இருப்பினும், "உறுப்பினர்" என்று கருதப்படுவதன் வரையறை எது அல்லது 10 ஆண்டுகள் வரை அதிகபட்ச சிறைத்தண்டனை விதிக்கப்படும் “தொடர்பில் இருத்தல்” (பிரிவு 38) அல்லது “ஆதரவளித்தல்” (பிரிவு 39)இலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது என்பதை சட்டம் எங்கும் விளக்கவில்லை.

### வெறும் உறுப்பினர் - தீவிரவாதி அல்ல

Arup Bhuyan vs State Of Assam on 3 February, 2011 என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம் இந்த விதியை ஓரளவு நியாயமாகப் புரிந்துகொள்ள முயற்சித்தது. “ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பில், “வெறும் உறுப்பினர் - mere membership” என்பதால் மட்டுமே அவனை குற்றவாளி என்று எடுத்து கொள்ள முடியாது. மாறாக, வன்முறையை தூண்டும் வகையிலோ, பொது அமைதியை சீர்குலைக்கும் வகையிலோ நடந்து கொள்ளாதவரை.” என்று கூறியது. இந்த தீர்ப்பு நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. 2023இல் இந்த வழக்கின் மறுஆய்வில், “வெறும் உறுப்பினர் - mere membership” என்றாலும், அவரையும் குற்றவாளியாக கருதலாம் என்றாகிவிட்டது.

### “உறுப்பினர்” என்பதன் வரையறை என்ன?

பதிவேடுகள் அல்லது பங்குதாரர்களின் பட்டியல்களைக் கொண்ட நிறுவனங்களைப் போலல்லாமல், பயங்கரவாதக் குழுக்கள் உருவமற்றவை மற்றும் பரவலாக்கப்பட்டவை. எனவே "உறுப்பினர்" என்பதை நிர்ணயிப்பது பதிவுகளைச் சார்ந்தது அல்ல, மாறாக விசாரணை நிறுவனங்களின் கருத்துக்கள் மற்றும் அனுமானங்களைப் பொறுத்தது. இது தன்னிச் சையைப் புனிதப்படுத்தும் ஒரு சட்டத்தின் தவிர்க்க முடியாத விளைவாகும். அதாவது ஒருவரின் வாழ்க்கையையும், சுதந்திரத்தையும் ஒரு அரசு அதிகாரியின் கையில் கொடுத்து விடுகிறது இந்த சட்டம்.

இப்போது முஹம்மது சலீமுக்கு ஜாமீன் வழங்கியதை எதிர்த்து, Union of India உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டுக்கு செல்கிறது. முஹம்மது ஸைத், தனக்கு ஜாமீன் மறுக்கப் பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டிற்கு செல்கிறான்.

இந்த சட்டரீதியான தெளிவின்மைகள் UAPA திட்டத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தும் அதே வேளையில், உச்ச நீதிமன்றத்தின் சலீம் கான் மீதான தீர்ப்பு குறுகிய அடிப்படைகளை மையமாகக் கொண்டிருந்தது. நீதிமன்றத்தின் முன் இருந்த மேல்முறையீடுகள் ஜாமீன் வழங்குதல்/ மறுத்தல் தொடர்பானவை என்பதால், நீதிபதிகள் அமர்வு, உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மறு ஆய்வு செய்வதோடு தன்னை நிறுத்திக்கொண்டது

சலீம் கானின் வழக்கில், UAPA பிரிவு 2(m) (அட்டவணை I)-ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி "அல்-ஹிந்த்" ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல, எனவே அந்த அமைப்பின் கூட்டங்களில் கலந்துகொள்வது எந்தவொரு முதன்மையான குற்றமாகவும் கருதப்படாது என்ற முக்கிய உண்மையால் ஜாமீனை உறுதி செய்தது நீதிமன்றம். மேலும், சலீம் கான் 3½ ஆண்டு களாக ஜாமீனில் இருந்த நிலையில், விசாரணை தொடங்குவதில் 5½ ஆண்டு கால தாமதம் ஏற்பட்டதை நீதிமன்றம் குறிப்பிட்டது.

முகமது ஸைதுக்கான ஜாமீன் மறுப்பை நீதிமன்றம் உறுதி செய்தது. UAPA-வின் கீழ் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புடன் அவருக்கு நேரடி தொடர்பு இருப்பதாகக் கூறப் படுவது, டார்க் வலையை (Dark Web) இயக்கு வதில் அவருக்கு இருந்த பங்கு மற்றும் மற்றொரு UAPA வழக்கில் அவருக்கு முந்தைய தொடர்பு ஆகியவை அவர் தொடர்ந்து காவலில் வைக்கப் பட்டதை நியாயப்படுத்துகின்றன. (இரண்டாவது வழக்கில் அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டதாக நீதிமன்றம் பதிவு செய்தது).

சுப்ரீம் கோர்ட் இந்த வழக்கில் மிகக் குறைந்த அளவில் ஈடுபட்டதால், உண்மையான தீர்ப்புக்கானசுமைகர்நாடகாஉயர்நீதிமன்றத்தின் மேல் விழுந்தது. அந்த நீதிமன்றம், ஜாமீனுக்கான தலைகீழ் தரநிலையுடன் கூடிய பிரிவு 43D(5)-ன் பொருளை விரிவாக ஆராய வேண்டிய நிலைக்கு வந்தது.

### பிரிவு 43D(5)-ம், ஜாமீனும்

பிரிவு 43D(5) என்பதன்படி, வழக்குப் பதிவு மற்றும் குற்றப்பத்திரிகையை நீதிமன்றம் பரிசீலித் தபின், குற்றச்சாட்டுகள் முதற்கண் (prima facie) உண்மையானவை என நியாயமான காரணங் களுடன் நம்பும் நிலைக்கு வந்தால், குற்றச் சாட்டுக்குள்ளான நபருக்கு ஜாமீன் வழங்க முடியாது. குறிப்பிடத்தக்க வகையில், இந்த கட்டத்தில், பாதிக்கப்பட்டவர் (accused) தம்மை குற்றமற்றவர் என நிரூபிக்கும் ஆதாரங்களை வழங்க முடியாது; prosecution-இன் வழக்கை எதிராக விசாரிக்க (cross-examine) கூட முடியாது.

சட்டம் நீதிமன்றத்தை அரசு தரப்பு சொல்வதை முழுவதுமாக நம்பியிருக்க கட்டாயப்படுத்தினால், பிறகு ஒரு நீதிமன்றம் எவ்வாறு அர்த்தமுள்ள வகையில் ஜாமீன் வழங்க முடியும்? ஜாமீன் வழங்குவதற்கான "நியாயமான காரணங்கள்" என்று எதை கருதுவது? ஒரு குற்றச்சாட்டு "முதல் பார்வைக்கே உண்மையாகத் தெரிகிறது" (prima facie true) என்று நீதிமன்றம் நம்புகிறது என்றால், அதற்குப் பொருள் என்ன?

### NIA v. Zahoor Ahmad Shah Watali (2019) வழக்கு

உச்சநீதிமன்றம் NIA v. Zahoor Ahmad Shah Watali (2019) வழக்கில் வழங்கிய தீர்ப்பு, UAPA-வில் ஜாமீன் வழங்கும் விதிகளை நிர்ணயிக்கும் முக்கிய தொடக்கமாகக் கருதப்படுகிறது. அந்த தீர்ப்பில், நீதிமன்றம் ஒரு முக்கியக் கொள்கையை எடுத்துக் கூறியது:

ஜாமீன் கேட்கும் நிலையிலேயே (bail stage), நீதிமன்றம் ஆதாரங்களை (evidence) விரிவாக ஆய்வு செய்யக் கூடாது.

விசாரணை அமைப்பு (prosecution) ஆவணங் களை செல்லாதவை (inadmissible) என்று கூறி நிராகரிக்கக் கூடாது.

விசாரணை அமைப்பு (investigating agency) சேகரித்துள்ள ஆதாரங்கள் எல்லாம் உண்மை தான் எனக் கருதப்பட வேண்டும்.

அதாவது, நீதிமன்றம் ஆதாரங்களைச் சோதிக்க முடியாது, அரசு தரப்பு அளித்த ஆவணங்களை உண்மையெனக் கருத வேண்டும் என்ற நிலைப் பாடு எடுத்ததால், சந்தேகம் இருந்தாலே அது போதுமானது என்ற சட்ட நிலை உருவாகி விட்டது. இதனால் UAPA பயன்படுத்தப்பட்ட வழக்குகளில் ஜாமீன் கிடைப்பது சாத்திய மில்லாத ஒன்றாகிவிட்டது.

Union of India v. K.A. Najeeb (2021) வழக்கில், உச்சநீதிமன்றம் இன்னொரு முக்கிய விடயத்தை கூறியது.

Watali தீர்ப்பில் இருந்தது போல "அரசு தரப்பு கொடுத்த ஆதாரங்களே போதும், ஜாமீன் மறுக்கலாம்" என்ற கடுமையான விதி மட்டுமே பார்க்கக் கூடாது. 43D(5)-ஐ ஜாமீனை மறுப்பதற்கான பிரிவு என்று மட்டுமே கருத முடியாது. குற்றம் சாட்டப்பட்டவரை, "இந்த பிரிவில்தான் சொல்கிறதே" என்று கூறி, முடிவில்லாமல் காவலில் வைத்திருக்க முடியாது.

ஒரு வழக்கின் விசாரணை (trial) பல ஆண்டுகளாக நடந்து, நியாயமான கால எல்லையை மீறும்போது, இந்திய அரசியலமைப்பின் சரத்து 21 (உயிர் வாழ்வதற்கான உரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம்) அடிப்படையில் ஜாமீன் கொடுக்க வேண்டியது கட்டாயம்.

Watali தீர்ப்பு, அரசு தரப்பு அளித்த ஆவணங்களை உண்மையென முன்கூட்டியே கருத வேண்டும் என்று கூறியதால், ஜாமீன் பெறுவதற்கான நிலைமைகள் கிட்டத்தட்ட முடியாத அளவுக்கு கடினமானதாக (near - insurmountable) மாறியது. ஆனால், அதன்பின் வந்த நீதிமன்றங்கள், Najeeb தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு, "விசாரணை விரைவாக நடைபெற வேண்டும்" என்ற கொள்கையை முன்னிலைப்படுத்தி, Watali தீர்ப்பின் கடுமையைத் தளர்த்த முயன்றன. இதன் மூலம், குற்றம் சாட்டப்பட்டவரின் சுதந்திரம் (space for liberty) உறுதி செய்யப்பட்டது.

### உள்நோக்கமே வரம்புநிலை

த்வாஹா ஃபசல் எதிர் இந்திய யூனியன் (2021) வழக்கில், நஜீப் வழக்கின் அடிப்படையில் கட்டப்பட்ட சுதந்திர அணுகுமுறையை (liberty-approach) நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. ஒரு பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர் அல்லது ஆதரவாளர் என்ற குற்றத்தை நிலைநாட்டுவதற்கு, உண்மை மற்றும் சூழ்நிலைகளிலிருந்து பிரித்தறியக்கூடிய ஒரு "குற்ற உள்நோக்கம்" (mens rea) இருக்க வேண்டும் என்று அத்தீர்ப்பு உறுதிப்படுத்தியது.

### சம்பவம்

கோழிக்கோட்டில் உள்ள ஒரு ஆய்வகத்தின் முன் மூன்று மாணவர்கள் "சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகளில்" நின்றுகொண்டிருந்ததாக ஒரு காவல் உதவி ஆய்வாளர் (Sub-Inspector) மதிப்பிட்டதில் இருந்து இந்த வழக்கு தொடங்கியது. ஒரு போலீஸ் வாகனத்தைக் கண்டதும், அவர்களில் ஒருவர் ஓடிவிட்டார், மற்ற இருவரும் மறிக்கப்பட்டனர்.



அந்த அதிகாரி அவர்களுடைய பைகளைச் சோதனையிட்டபோது, "தீவிர இலக்கியங்கள்" (radical literature) - "இந்தியாவில் சாதிப் பிரச்சினைகள்", ரோசா லக்ஸம்பர்க் (Rosa Luxemburg) லெனினுக்கு எழுதிய குறிப்புகள் போன்ற புத்தகங்கள், போராட்டச் சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் - போன்றவைகள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன..

### வழக்குப் பதிவு

அவர்கள் கைது செய்யப்பட்டு, தடை செய்யப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) (Communist Party of India (Maoist)) அமைப்பின் உறுப்பினர்கள் என்று புலனாய்வாளர்கள் குற்றம் சாட்டியதன் பேரில், UAPA - Unlawful Activities Prevention Act-இன் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

பிரிவு 20 (பயங்கரவாதக் கும்பல் அல்லது அமைப்பில் உறுப்பினராக இருப்பதற்கான தண்டனை)

பிரிவு 38 (பயங்கரவாத அமைப்பில் உறுப்பினராக இருத்தல் தொடர்பான குற்றங்கள்), பிரிவு 39 (பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவளித்தல் தொடர்பான குற்றங்கள்)

கைது செய்யப்பட்ட இருவரில், த்வாஹா ஃபசலுக்கு உயர் நீதிமன்றத்தால் ஜாமீன் மறுக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

**ஜாமீன் வழங்கிய தீர்ப்பு**

நீதிபதிகள் அஜய் ரஸ்தோகி மற்றும் அபய் எஸ். ஓகா ஆகியோர் அடங்கிய அமர்வு ஜாமீன் வழங்கியது. அதில், மேற்கூறிய பிரிவுகளின் கீழ் குற்றங்களை நிரூபிக்க "வெறும் தொடர்பு" (mere association) அல்லது "வெறும் ஆதரவு" (mere support) மட்டும் போதாது என்று தீர்ப்பளித்தது.

மாறாக, ஒரு பயங்கரவாத அமைப்பின் நடவடிக்கைகளை மேலும் முன்னெடுக்கும் உள் நோக்கம் (intention to further the activities of a terrorist organisation) வெளிப்படையான செயல்கள் (overt acts) மூலம் நிரூபிக்கப்பட வேண்டும் என்றும் கூறியது.

(இது அரூப் பூயன் வழக்கில் வரையறுக்கப் பட்ட செயலில் உள்ள மற்றும் செயலற்ற உறுப் பினர் என்ற வேறுபாட்டை மீண்டும் வலியுறுத் தியது).

**சட்டக் கோட்பாடுகளும் அரசியலமைப்பு உறுதிப்பாடும்**

நீதிமன்றம், ஜாமீன் அளிக்கும் கட்டத்தில் "IQ-விசாரணை" (mini-trial) நடத்தக்கூடாது என்ற வதாலி (Watali) வழக்கில் நிர்ணயிக்கப்பட்ட தரத்தைப் பின்பற்றியது. இருப்பினும், நஜீப் (Najeeb) வழக்கில் கூறியதுபோல், பிரிவு 43D(5) அரசியலமைப்புச் சட்டத்தின் உத்தரவாதங்களை (constitutional guarantees) மீற முடியாது என்று வலியுறுத்தியது.

எனவே, குற்ற உள்நோக்கத்தை நிரூபிக்கத் தேவையான ஆதாரங்கள் இல்லாதபோது அல்லது நீண்ட கால விசாரணைக்கு முந்தைய தடுப்புக் காவல், அரசியலமைப்புச் சட்டத்தின் 21வது பிரிவை (Article 21) மீறும்போது, ஜாமீன் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் கட்டாயத் தேவையாக (constitutional imperative) ஆகிறது.

**கர்நாடக உயர் நீதிமன்றத்தில் சலீம் கான் வழக்கு**

"உறுப்பினர்" என்ற குற்றத்தின் அத்தியாவசியக் கூறுகளை வரையறுத்ததன் மூலம், கர்நாடக உயர் நீதிமன்றத்தின் சலீம் கான் வழக்கின் பகுப்பாய்வு நேரடியாக உறுதிப்படுத்தப்பட்டது. நீதிமன்றம், ஆதாரங்களின் தகுதியை எடை போடாமல், குற்றப்பத்திரிகையில் (chargesheet) உள்ள பொருளை அது இருக்கும்படியே கருத்தில் கொள்ள வேண்டும் என்று உறுதிப்படுத்தியது. அதே சமயம், பிரிவு 43D(5)-க்கும் (சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்) மற்றும் குற்றவாளியின் உரிமைகளுக்கும் இடையில் "சமநிலையை ஏற்படுத்த" (strike a balance) வேண்டியதன் அவசியத்தை அது வலியுறுத்தியது.

இந்த மதிப்பீட்டிற்கு வழிகாட்ட, குற்றச் சாட்டுகள் முதலில் உண்மையென (prima facie true) நம்புவதற்கு "நியாயமான காரணங்கள்" இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்க, பின்வரும் சூழ்நிலைகள் பொருத்தமானவை என்று நீதிமன்றம் அடையாளம் கண்டது;

சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட எந்த வொரு அமைப்புடனும் குற்றம் சாட்டப் பட்டவர் தொடர்பு வைத்திருக்கிறாரா?

குற்றம் சாட்டப்பட்டவர் பயங்கரவாதச் செயல்கள் தொடர்பான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவரா? (அல்லது தொழில் நுட்ப காரணங்களுக்காக விடுவிக்கப்பட்டாலும், பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்பு கொண்டிருந்தாரா?)

குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட வகையைச் சேர்ந்த வெடிபொருட்கள் குற்றம் சாட்டப் பட்டவரிடமிருந்து மீட்கப்பட்டதா?

குற்றம் நடந்த இடத்திலோ அல்லது அதைச் சுற்றியோ குற்றம் சாட்டப்பட்டவரின் இருப்பை ஏதேனும் நேரில் கண்ட சாட்சியோ அல்லது இயந்திர சாதனமோ (சிசிடிவி) சுட்டிக் காட்டுகிறதா?

கிடைத்த தடயங்களின் அடிப்படையில், சம்பவம் நடந்த உடனே குற்றம் சாட்டப் பட்டவர் கைது செய்யப்பட்டாரா?

இந்தக் காரணிகளைக் கருத்தில் கொண்டு, அல்-ஹிந்த் என்பது தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல! வெடிபொருள் எதுவும் மீட்கப் படவில்லை. அவரை சம்பவ இடத்திலோ அல்லது அதைச் சுற்றியோ காட்டும் நேரில் கண்ட சாட்சியோ அல்லது சிசிடிவி ஆதாரமோ இல்லை. பயங்கரவாதம் தொடர்பான குற்றங் களுக்காக அவர் தண்டிக்கப்படவில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. எனவே, சலீம் கானுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் முதலில் உண்மையென நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இல்லை என்று அது முடிவு செய்தது.

**உறுதியற்ற வாக்குறுதிகள், சிறைப்படுத்தும் யதார்த்தங்கள்**

சலீம் கான் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, நஜீப் வழக்கில் தெளிவுபடுத்தப்பட்ட கொள்கையை மீண்டும் வலியுறுத்துகிறது. அதாவது, அரசியலமைப்புச் சட்டத்தின் 21வது பிரிவின் கீழ் உள்ள விரைவான விசாரணைக்கான உரிமை (right to a speedy trial under Article 21), பிரிவு 43D(5)-ன் கீழ் உள்ள சட்டரீதியான ஜாமீன் கட்டுப்பாடுகளால் மறைக்கப்பட முடியாது.

எந்தவொரு குற்றம் சாட்டப்பட்டவரையும் “நியாயமான மற்றும் விரைவான விசாரணை இன்றி சிறையில் வாட அனுமதிக்க முடியாது” என்று நீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியது.

சலீம் கானுடன் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான முகமது ஸைத் என்பவர் ஏற்கனவே ஐந்தரை ஆண்டுகள் விசாரணை இன்றி காவலில் கழித்துள்ளதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், “விசாரணையை துரிதப்படுத்தவும்” மற்றும் அதை “இரண்டு ஆண்டுகளுக்குள்” முடிக்கவும் விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டது.

அத்துடன், அரசுத் தரப்பும் ஆதாரங்களைச் சமர்ப்பிப்பதிலும், குறிப்பிடப்பட்ட காலக் கெடுவுக்குள் நடவடிக்கைகளை முடிப்பதிலும் முழு ஒத்துழைப்பை வழங்குவதைக் கட்டாயமாக்கியது.

**உறுதியற்ற வாக்குறுதிகள்**

ஆனால், "விரைவான விசாரணை" என்ற வாக்குறுதி மட்டும் போதாது. நடைமுறையில், ஜாமீன் மனு மீதான விசாரணையைக் கோருவது கூட நீண்ட மற்றும் கடினமான செயல்முறையாக உள்ளது. காலதாமதம் என்பது, கொள்கையளவில், பிரிவு 21-ன் கீழ் ஒரு புறநிலை காரணியாக இருந்தாலும், பல கீழ் நீதிமன்றங்கள், குற்றம் சாட்டப்பட்டவர் அதிகபட்ச தண்டனையில் பாதியை விட அதிகமாகச் சிறையில் இருந்த பின்னரே அதைச் செயல்படுத்தத் தகுந்தது என்று கருதுகின்றன.

இந்த விபரீதமான மாற்றம், நீடித்த சிறைவாசத்தை சாதாரணமாக்குகிறது மற்றும் நமது நீதி அமைப்பில் ஆழமாகப் பதிந்துள்ள சிறைப்படுத்தும் மனப்பான்மையை (carceral mentality) பிரதிபலிக்கிறது.

பரந்த ஒரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ், 'பயங்கரவாதி'யின் உணர்வற்ற வன்முறையும் ஒரு புரட்சியாளரின் ஜனநாயக எதிர்ப்பும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போலாகிறது.

குற்றச்சாட்டுகளின் பலத்தின் அடிப்படையில் மட்டுமே, அவர்கள் இருவரும் அரசின் சதித்திட்டங்களுக்குப் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டு, வழக்கமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களாகச் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

Source : https://cjp.org.in/not-proscribed-not-prima-facie-the-labyrinth-of-bail-under-uapa/

(CJP-யின் சட்ட ஆராய்ச்சிக் குழுவின் வழக்கறிஞர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் ராஸ் என்பவரால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.)

தமிழில்: **Advocate. Jasmine Fathima**
High Court of Madras.





# காஸா - பாலஸ்தீன் குழந்தை வளர்ப்பு எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க முடிகின்றதா?

**இதுவரை 22,000 குழந்தைகள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். 29,000 குழந்தைகள் அநாதைகள் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். 6,50,000 குழந்தைகள் எந்தக் கல்வியையும் பெற்றிட இயலவில்லை.**

காஸாவிலிருந்த பள்ளிக் கூடங்கள் அனைத்தையும், அங்கிருந்த மருத்துவ மனைகளைப் போல் இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டனர்.

இந்த பள்ளிக் கூடங்களின் இடிபாடுகளை ஓரளவுக்கு சீர் செய்து, அங்குமிங்கும் அல்லாடிக் கொண்டிருக்கும் மக்களைத் தங்க வைக்கின்றார்கள். அங்கேதான் மக்கள், பெண்கள் குழந்தைகள் இருக்கின்றார்கள் என்பதை அறிந்தும், அங்கும் குண்டுகளை வீசுகின்றார்கள். நெதன்யாஹு என்ற சர்வதே குற்றவாளியின் படையினர்.

ஆக, அங்கே குழந்தைகள் உயிரோடு விட்டு வைப்பதில்லை என்ற நிலை இருக்கின்றபோது, அங்கே குழந்தைகள் வளர்ப்பு என்பது சற்றும் சிந்தித்துப் பார்த்திட இயலாத நிலை.

காஸாவில் அநாதை ஆக்கப்படும் குழந்தைகள் என்பதைப் பற்றி பேசிடும்போது காஸா எதிர்கொள்ளும் இன்னொரு யதார்த்தத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்.

அது, இன்று இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் முஜாஹித்கள், இதேபோல் இஸ்ரேல் நடத்திய கூட்டுப்படுகொலையில் கொலை செய்யப்பட்டவர்கள் குழந்தைகள்தாம். இப்படி இஸ்ரேலினுடை தாக்குதலில் உயிரிழந்த அநாதை ஆக்கப்பட்டவர்கள்தாம், சுமார் 80,000 பேர் களத்தில் நின்று இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களோடு போர் செய்கின்றார்கள்.

இதில் அல்ஹாஸம் என்ற இஜ்ஜத்தன் அல்ஹாஸம் - படைப்பிரிவினர். 1932-1936 வரை யூதத் தீவிரவாதிகளையும் ஆங்கிலேயப்

படைகளையும், எதிர்த்து பாலஸ்தீனில் போர் செய்த இஜ்ஜத்தின் அல்ஹாஸம் என்பவரின் பெயரால் வழங்கப்படுவது. அவர் இறுதியாக சில நயவஞ்சர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு ஆங்கிலேயர்கள், ஹஷீத் ஆக்கப்பட்டவர். அவரது பெயரால் இயங்குவதே அல்ஹாஸம் என்ற படைப்பிரிவு. ஹமாஸ் என்ற இஸ்லாமிய இயக்கத்தின் படைப்பிரிவு, இந்தப் போராளிகளில் பெரும்பாலோர் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள்.

அதேபோல் அல்குத்ஸ் என்றப் படைப் பிரிவினர் அனைவரும் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள். அந்தப் படைப்பிரிவில் சேருவதற்கு அடிப்படைத் தகுதியே திருக்குர்ஆனை மனனம் செய்திடுவதுதான்.

ஆக, பாலஸ்தீன் வாழ் மக்கள், தங்கள் குழந்தைகளுக்கு எதை கற்றுக்கொடுக்கின்றார்களோ இல்லையோ திருக்குர்ஆனை மனனம் செய்து விடுகின்றார்கள்.

திருக்குர்ஆன் இருக்கும் அரபுமொழி அவர்களின் தாய்மொழி. இதனால் பெரிய விரிவுரைகள் விளக்க உரைகள் - எதுவுமில்லாமல் அந்த மக்கள்

- அநியாயத்திற்கெதிராக, ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக எதிர்த்துப் போர் செய்ய வேண்டிது தங்கள் கடமை என்பதைப் புரிந்துகொள்கின்றார்கள்.

- இந்த நீதிக்கான பெரும்போரில் தாங்கள் எதிரிகளால் ஷஹீதாக்கப்பட்டால் அந்த நொடி தங்களுக்குச் சொர்க்கம் நிச்சயம் என்பதை உணர்ந்து கொள்கின்றார்கள்.

இதனால் இந்த உலகில் எந்த எதிர்ப்பும் இல்லாமல், தங்களைத் தந்திட தாராளமாக ஓடி வருகின்றார்கள்.

இப்போது இங்குமங்கும் நிரந்தரமாக அலைந்துகொண்டிருக்கும் மக்களுக்குப் பின்னால் ஒரு கூட்டம் ஆசிரியைகளாக போகின்றார்கள். இடைவெளி கிடைக்கும் போதெல்லாம் அந்தக் குழந்தைகளுக்கு திருக்குர்ஆனை மனனம் செய்திட உதவி செய்கின்றார்கள். அதேபோல், இதர அடிப் படைக் கல்வியையும் புகட்டுகின்றார்கள்.

அவர்கள் இருக்குமிடம் தெரிந்துவிட்டால் அந்த இடத்தை உடனேயே இஸ்ரேலிய இராணுவம் தாக்கிவிடுகின்றது. பலர் - குழந்தைகளும், ஆசிரியர்களும் ஷஹீதாகி விடுகின்றார்கள்.

எஞ்சியோர் வேற்று இடங்களுக்கு இருப்பதை சுருட்டிக்கொண்டு பயணப்படுகின்றார்கள். எஞ்சிய குழந்தைகளுடன் எஞ்சிய ஆசிரியைகளும் பயணப்படுகின்றார்கள். இப்படியொரு கல்விமுறை, இப்படியொரு குழந்தை வளர்ப்பு காஸாவில் மட்டுமல்ல, பாலஸ்தீன் முழுக்க பின்பற்றப்படுகின்றது.

இதே குழந்தைகள்!, உணவு வழங்கும் இடங்களுக்கும் தண்ணீர் வழங்கப்படும் இடங்களுக்கும் அனுப்பப்படுகின்றார்கள். அங்கேயும் அவர்கள் கொல்லப்படுகின்றார்கள். இங்கெல்லாம் செல்லும் எல்லா குழந்தைகளும் திரும்புவதில்லை. (இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்)






# மேட்டுப்பாளையத்தில் நூல் வெளியீட்டு நிகழ்வு!






vaigarai velicham official









14.09.2025 ஞாயிறு மாலை 7 மணியளவில் மேட்டுப்பாளையம் மதினா நகரில் அமைந்துள்ள அன்பகம் இஸ்லாமிய கல்விக்கூடத்தில் வைத்து வேர்கள் பதிப்பகத்தின் வெளியீடான “இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்” என்ற நூலை ஜமாத்தார்கள் மத்தியிலும் சமூக ஆர்வலர்கள் மத்தியிலும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் மேட்டுப்பாளையம் ஜமாதுல் உலமா நகர செயளாலர் ஹஜ்ரத் சதக்கதுல்லாஹ் மக்தூமி அவர்கள் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வில் நூலை பெற்றுக்கொண்டவர்கள் VMT ஜாபர் (மனிதநேய ஜனநாயக கட்சி), தோழர் மாறன் (மக்கள் அதிகார கழகம்), சகோதரர் உமர் முக்தார்.

இறுதியாக நூலின் அறிமுகமும், நூலின் ஆசிரியர் பற்றியும் சகோதரர் திருப்பூர் சிராஜ்தீன் அவர்கள் உரையாற்றினர்.

பெரும்பாலான சமூக ஆர்வலர்களும், ஜமாத்தார்களும் கலந்துகொண்டார்கள்.



# 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை மேட்டுப்பாளையம், அன்னூர், காரமடை சுற்றுவட்டார பகுதியில் நடந்த இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும்

# சுற்றுப்பயணம்




காலை 10 மணியளவில் ஆரம்பித்த சுற்றுபயணம் இரவு வரை தொடர்ந்தது. ஒவ்வொரு பகுதியாக சென்று இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியையும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களையும் சந்தித்து அவர்களுடைய நிலைமையும் தெரிந்து கொண்டு அவர்களிடத்திலும் உரையாற்றி தேவைப்படக்கூடிய நூல்கள் துண்டு பிரசுரங்கள் தமிழ் திருக்குர்ஆனும் வழங்கினோம். நிறைவான பயணமாக இந்த பயணம் அமைந்தது.

# திருமணம்

**மனித** வாழ்விற்கு முழுமையான வழிகாட்டி இஸ்லாம்தான் என்பதற்கு பல அத்தாட்சிகள் உள்ளன. அதில் ஒன்றுதான் திருமணத்திற்கான வழிகாட்டுதல். மற்ற மதங்களில் ஒரு ஆண், பெண்ணிற்கான திருமண வழிகாட்டுதல் பருவ வயதை அடைவது முதல் திருமணம் செய்து மரணிக்கின்ற வரை கணவன், மனைவி எப்படி வாழ வேண்டும் என்பது வரையிலான வழிகாட்டுதல் இல்லை. இன்னும் திருமணமற்ற துறவற வாழ்க்கையை பிற மதங்கள் ஆதரிக்கின்றன. இதனால் ஏற்படும் சீர்கேடுகளை நாம் தொடர்ந்து பத்திரிகைகளில் பார்த்து வருகிறோம்.

ஆனால், இஸ்லாம் துறவறத்தை அறவே தடுக்கிறது. மாறாக, பருவ வயது அடைந்தவுடன் திருமணத்திற்கான சக்தி உடையவர்கள் உடனே திருமணம் முடித்துக்கொள்ள வேண்டும். தள்ளிப்போடக் கூடாது என்கிறது இஸ்லாம்.

“நீங்கள் அமைதி பெற உங்களிலிருந்தே துணைவியரை உங்களுக்காகப் படைத்து உங்களுக்கிடையே அன்பையும் இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பது அவனது சான்றுகளில் ஒன்றாகும். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன.” (30:21)

“அவர்கள் உங்களுக்கு ஆடை நீங்கள் அவர்களுக்கு ஆடை” (அல்பகரா : 187)

இஸ்லாம் திருமணத்தோடு நின்றுவிடாமல் திருமணத்திற்கு பின்பு உள்ள வாழ்க்கையில் கணவன் மனைவி இருவரின் உறவுகள் எப்படி இருக்க வேண்டும். இருவரின் உரிமைகள் என்ன என்பதையும் தெளிவாகக் கூறுகிறது.

**கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டியவை**

ஒரு மனிதன் நபியவர்களிடம் மனைவிக்குக் கணவன் செய்ய வேண்டிய கடமைகள் என்ன? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீ உண்ணும்போது அவளுக்கு உணவளிப்பதும் நீ அணியும்போது அவளுக்கு அணிவிப்பதும் (கண்டிக்கும்போது) முகத்தில் அடிக்காதிருப்பதும், கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருப்பதும், வீட்டில் தவிர மற்ற இடங்களில் வெறுக்காமல் இருப்பதும் ஆகும் என்று கூறினார்கள். (அஹமத்)

நிறைகளை மட்டும் பார்ப்போம் “இறை நம்பிக்கை கொண்ட ஓர் ஆண் இறை நம்பிக்கை கொண்ட ஒரு பெண்ணை (முழுமையாக) வெறுத்து ஒதுக்க வேண்டாம். அவளிடமிருந்து அவர் ஒரு குணத்தை வெறுத்தாலும் மற்றொரு குணத்தைக் கொண்டு திருப்தி கொள்ளட்டும் என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்

(பெண்ணே நீ உன்னுடைய கணவனுக்குச் செய்யும் கடமைகளில்) என்னிலையில் இருக்கின்றாய் என்பதை என்பதை கவனித்துக்கொள். நிச்சியமாக அவர் ஒன்று உன்னுடைய சொர்க்கமாக இருப்பார். அல்லது நரகமாக இருப்பார். (அஹமத்)

பெண்கள் விஷயத்தில் அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் புறத்திலிருந்து அவர்கள் உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட (அமானிதம்) பொருளாக உள்ளனர். அல்லாஹ்வின் சொல்லைக் கொண்டே அவர்கள் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்களாக ஆகியுள்ளார்கள். (முஸ்லிம்)

**மனைவி கணவனுக்குச் செய்ய வேண்டியவை**

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

நான், நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் ஒரு பெண் மனிதர்களில் யாருக்கு அதிகம் கடமைப்பட்டிருக்கிறாள்? எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள் அவளுடைய கணவனுக்கு என்று கூறினார்கள். (ஹாலிம்)

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள் :

மனைவி நமது கணவனின் உடைமைகள், குழந்தைகள் விஷயத்தில் பொறுப்பாளியாவாள். (புகாரி)

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்:

மனைவி மீது உங்களுக்குள்ள உரிமை என்னவெனில் நீங்கள் யாரை வெறுப்பீர்களோ அவர்கள் உங்கள் படுக்கை மீது அமராதபடி அவர்களை அனுமதிக்காமலே இருப்பதாகும். (முஸ்லிம்)


பெண்கள் தாங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகும் மணமகனிடம் மஹர் எனும் மணக்கொடையைக் கேட்டுப் பெறுகிற உரிமை பெற்றவர்களாக உள்ளனர்.

ஒரு பெண் தன்னுடைய கணவன் ஊரில் இருக்கும்போது அவரது அனுமதியில்லாமல் (சுன்னத்தான) நோன்பு நோற்பது கூடாது. அவரது அனுமதியில்லாமல் (யாரையும்) அவரது இல்லத்திற்குள் அவள் அனுமதிக்கக் கூடாது. கணவர் கட்டளையில்லாமலேயே ஒரு பெண் (அவனது பொருளை தர்மமாக) செலவு செய்தால் (அதன் நன்மையில்) பாதி அவருக்கும் கிடைக்கும். (புகாரி)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களுக்கு கூறினார்கள்:

ஒரு மனிதனுடைய பொக்கிஷங்களில் சிறந்ததை நான் உனக்கு அறிவிக்கவா? (அதுதான் நல்லமனைவியாவாள்). நல்லமனைவியென்பவள் (கணவன்) அவளை நோக்கும்போது அவனை சந்தோஷப்படுத்துவாள். அவன் அவளுக்கு கட்டளையிட்டால் கட்டுப்படுவாள். அவன் அவளிடம் இல்லாமல் இருக்கும்போது அவனுக்காக (அவனுக்குரியவைகளை) பாதுகாத்துக் கொள்வாள் (அபூதாவூத்)

அல்லாஹ் அளித்துள்ள உரிமைகளை உணர்ந்து ஒரு ஆணும் பெண்ணும் தங்களுடைய வாழ்க்கையை நடத்திடும்போது அவர்களிடையே எந்த சண்டையும் சச்சரவும் இல்லாமல் மன அமைதியோடும், எல்லாவித பரக்கத்தோடும் நிம்மதியாக வாழலாம்.






அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |

46. **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்** - ரூ.400.00
எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

47. **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி - ரூ.150.00

48. **இஸ்லாம் ஒன்றே வழி!** - ரூ.120.00
அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத்

49. **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு** - ரூ.400.00
ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

50. **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?** - ரூ.300.00
ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

51. **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** - ரூ.20.00

52. **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** - ரூ.100.00

53. **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி** - ரூ.20.00
கரன் ஆம்ஸ்ட்ராங்

54. **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** - ரூ.50.00

55. **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** - ரூ.50.00

56. **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** - ரூ.40.00

57. **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** - ரூ.60.00

58. **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** - ரூ.60.00

59. **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** - ரூ.25.00

60. **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** - ரூ.20.00

61. **அயா சோபியா உருவான வரலாறு** - ரூ.50.00

## எமது விற்பனையில்...

01. **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்** - ரூ.100.00
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான்

02. **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்** - ரூ.100.00
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு

03. **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்** - ரூ.170.00
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி,

04. **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?** - ரூ.140.00
தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர்

05. **பலி கடாக்கள்** - ரூ.300.00

## BOOKS IN ENGLISH

1. **END OF CASTEISM** - T.M. Umar Farooq, - Rs.50.00
   English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam
2. **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media - Rs.695.00
3. **MUHAMMED THE PROPHET FOR OUR TIME** - Rs.325.00
   Karen Armstrong
4. **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi - Rs.350.00
5. **WHO KILLED KARKARE** - Rs.300.00
   The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS,
6. **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif - Rs.275.00
7. **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION** - Rs.60.00
   Kamaluddin Ahamed
8. **MUSLIMS AGAINST PARTITION OF INDIA** - Rs.280.00
   Shamsul Islam, Pharos Media
9. **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN** - Rs.25.00
   (EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed
10. **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE** - Rs.150.00
    Nilofar Suhrawardy
11. **Innocent Prisoners** - Rs.495.00
12. **Brahminists Bombed Muslims Hanged** - Rs.350.00
13. **Kodikkal- TheLiving Witness of Social Justice** - Rs.300.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் - ரூ.60.00
02. **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி** - ரூ.30.00
    கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

Vaigarai Velicham Official | vaigarai velicham official

darultrust@yahoo.com | Website : Darulislam.in

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002